

வருகிறது!
வாழ்க்கை
AVM
புரொடக்ஷன்ஸ்
G.H. RAO


NOPAIN
நீங்கள் 'நோபெயின்' உபயோகித்தால் உபாதைப்பட இராது!
NOPAIN CALCUTTA CHEMICAL CO., LD
எல்லா உபாதைகளையும் இது மாயமாய்ப் போக்கி உடனே குணமளிக்கிறது.
Calcutta Chemical Product


சிறந்த சலவை...
இந்த OK கொண்டுதான்!
OK


கல்கி

பொருளடக்கம்

மலர் 9 | நவம்பர் 20 | விரோதி ஐ
இதழ் 16 | | கார்த்திகை 5

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

சண்டி மாடுகள்!



முதலாளி, தொழிலாளி, சர்க்கார், பொது ஜனங்கள் எல்லாரும் தங்கள் கடமைகளைச் செய்து பரஸ்பரம் ஒத்துழைத்தால்

கல்கி

மலர் 9 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 16

என்ன சேதி?

சபலம் விடவில்லை!

"சந்திர சூரியர்கள் தெற்கே உதித்து வடக்கே அஸ்தமிக்கும் போதுதான் ஜவாஹர்லால் — வல்லபாய் — பட்டாபி கமிட்டியின் அறிக்கையை நாங்கள் ஒப்புக்கொள்வோம்" என்று விடாப்பிடியாக இருந்துவந்த ஆந்திர கேசரிகள், கடைசியாகத் தங்களுடைய பிடிவாதத்தைக் கைவிட்டு மூவர் கமிட்டி அறிக்கையை ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஆந்திர மாகாணப் பிரிவினை சம்பந்தமாக தீர்ப்புக் கூறிய மூன்று தலைவர்களும் இந்தியாவின் தனிப் பெரும் பிரதிநிதிகளாதலால், அந்தத் தீர்ப்பை ஆட்சேபிக்க எவருக்கும் உரிமையோ யோக்கியதையோ இல்லை. அவர்கள் தீர்க்காலோசனை செய்து கூறிய தீர்ப்பை ஆட்சேபிப்பதாயின், அந்தத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லை என்றே ஏற்படும்.

அந்தத் தீர்ப்பை இந்தியாவின் பிரதிநிதி ஸ்தாபனமான காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கீகரித்தது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் அதை ஒப்புக்கொண்டது. கடைசியாக சென்ற வாரம் ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டியும் அதை அங்கீகரித்தது திருப்திகரமான விஷயம்தான். இப்போது சென்னை மந்திரி சபையும் அதை ஏற்றுக்கொண்டு விட்டதால், மூவர் கமிட்டி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி சிறிதும் தாமதமின்றி ஆந்திரமாகாணம் ஏற்படுவதற்கு இனி எவ்விதத் தடையும் இல்லை.

எனினும், மூவர் கமிட்டி அறிக்கையை ஒப்புக்கொண்டு, உடனே ஆந்திர மாகாணத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானித்துள்ள ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி, தன் தீர்மானத்தில் ஒரு விசித்திரமான ஷரத்தைச் சேர்த்துக் கொண்டிருக்கிறது. சென்னை நகரையும் அடுத்துள்ள கிராமங்களையும் சேர்த்து ஒரு தனி மாகாணத்தைச் சிருஷ்டிக்க வேண்டும் என்பதே அந்த ஷரத்தாகும்! சென்னை நகரில் தங்களுக்குப் பங்கு கேட்பது எட்டாத பழத்துக்கு ஆசைப்படுவதற்கு ஒப்பாகும் என்பதை இத்தனை நாட்களுக்குப் பின்னர்தான் பிரகாசம்காரு கோஷ்டியினர் அறிந்து கொண்டனர். அப்படியிருந்தும், இன்னும்கூட சென்னை நகர் விஷயத்தில் அவர்களுக்குச் சபலம் விடவில்லை! இல்லாவிட்டால் அதிகப் பிரசங்கித்தனமான ஷரத்தைச் சேர்த்துக் கொள்வார்களா?

வியாக்கியானம் எதற்கு?

மூவர் கமிட்டி எள்ளளவும் சந்தேகத்துக்கு இடமின்றி விஷயத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறது. "ஆந்திர மாகாணம் ஏற்பட வேண்டுமாயின், ஆந்திரர்கள் சென்னை நகரில் கொண்டாடும் உரிமையை விட்டுவிட வேண்டும். சென்னை நகரம் பம்பாயைப்போல் பெரியதல்ல; பல்வேறு பாஷையினர் வசிக்கும் இடமும் அல்ல. **அது மாகாண ஜனங்களின் வாழ்க்கையிலும் நடவடிக்கைகளிலும் நெருங்கிய தொடர்பு உடையது**" என்று அந்தக் கமிட்டியின் அறிக்கை குறிப்பிடுகிறது. அதாவது சென்னை நகரம் தமிழ் ஜனங்களின் வாழ்க்கையிலும் நடவடிக்கைகளிலும் நெருங்கிய தொடர்பு உடையது என்பதை அது தெளிவு படுத்தியிருந்தும் கூட அவ்விஷயத்தில் பட்டாபி, பிரகாசம்காரு கோஷ்டியினர் புதிய புதிய வியாக்கியானங்களைச் செய்ய முயற்சிப்பது விந்தையாக இருக்கிறது.

சென்னை நகரில் ஆந்திரர்களுக்கு உரிமையில்லை; அது தனி மாகாணமாக இருப்பதும் முடியாத காரியம் என்றாலே, அது தமிழர்களைச் சேர்ந்தது என்றாகிறது. சென்னை, மாகாண ஜனங்களின் வாழ்க்கையில் நெருங்கிய தொடர்பு உடையது என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் சந்தேகத்துக்கோ, வாதத்துக்கோ, வியாக்கியானத்துக்கோ சிறிதும் இடமில்லாமற் போய்விட்டது. அப்படியிருக்க, அவ்விஷயமாக வீண் வியாக்கியானம் எதற்கு?

மூவர் கமிட்டி அறிக்கையிலுள்ள அடிப்படையான விஷயம் ஆந்திரர்கள் சென்னை நகரிலுள்ள உரிமையைக் கைவிட வேண்

டும் என்பதே. மேற்படி அறிக்கையை ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி அங்கீகரித்ததன் மூலம், சென்னை நகரில் ஆந்திரர்களுக்கு உரிமையில்லை என்பதை அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார்கள். சென்னை நகரைக் கைவிட்டபின், மேற்படி நகர் யாருடைய நிர்வாகத்தில் இருக்க வேண்டும் என்று சொல்ல ஆந்திரர்களுக்கு உரிமை ஏது? இனி ஆந்திர மாகாணம் ஏற்படுவதாயின் அதற்குத் தற்காலிகமாக சென்னையே தலைநகராக இருக்கவேண்டும் என்ற கூற்றையும் தமிழ் மக்கள் ஒப்புக் கொள்ளவே முடியாது.


சந்தேகம் ஊர்ஜிதமாயிற்று

இந்திய சர்க்காரும் பிரஞ்சு இந்திய ஜனங்களும் கொண்ட சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. பிரஞ்சு சர்க்கார் தங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார்கள்.

"ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் அடுத்த டிசம்பர் மாதம் சர்வ ஜன வாக்கெடுப்பு நடைபெறாது. மேற்படி வாக்கெடுப்பு வாரக் கணக்கில் ஒத்தி வைக்கப்படுமா அல்லது மாதக் கணக்கில் ஒத்திவைக்கப்படுமா என்பது பற்றி நான் இப்போது எதுவும் சொல்வதற்கில்லை" என்று பிரஞ்சு இந்தியப் பிரதேசங்களில் பிரஞ்சு சர்க்கார் பிரதிநிதியாக இருக்கும் ஸ்ரீ ஜீன் சாம்பான் கையை விரித்து விட்டார். இவ்வளவு குறுகிய காலத்தில் வாக்கெடுப்பை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடிப்பது அசாத்தியம் என்பதற்காகவே அதை ஒத்தி வைத்து விட்டதாக அவர் கூறுகிறார்.

இவ்வருஷம் டிசம்பர் மாதம் பதினோராம் தேதி சர்வஜன வாக்கு எடுக்க வேண்டும் என்று பல மாதங்களுக்கு முன்பே முடிவு செய்துவிட்டார்கள். அந்தத் தேதியில் நிச்சயமாக வாக்கெடுப்பு நடைபெற வேண்டும் என்றும், நொண்டிச் சமாதானம் எதுவும் கூறி அதை ஒத்திவைக்கக் கூடாது என்றும் இந்திய சர்க்கார் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அப்படியிருக்க, இத்தனை மாதங்களாகப் பேசாமல் இருந்துவிட்டு, இப்போது வாக்கெடுப்பு ஒத்தி வைக்கப்படும் என்று கூறுவது பிரான்சைப் போன்ற ஒரு வல்லரசின் கௌரவத்துக்கு உகந்ததல்ல. உலகத்திலே முதன் முதலாகக் குடியரசை ஸ்தாபித்துப் பெருமை யடைந்த பிரான்சுக்கும் பிரஞ்சு இந்தியர்களுக்குப் பிறப்புரிமையளிக்க மறுக்கும் இன்றைய பிரான்சுக்கும் எவ்வளவு வேற்றுமை!

நிகழ்ச்சிச் சித்திரம் - சாஸ்திரி



மயிலே! மயிலே! ஒரு இறகு போடு!

சர்தார் வல்லபாய் படேல் எத்தகைய மகாதீரர் என்பது எல்லாருக்கும் தெரியும். பாரத நாடு சின்னாபின்னமாகாமல் பாதுகாத்தவர் அவர் என்பதும் அனைவரும் அறிந்தது.

ஆயினும் சில சமயங்களில் சர்தாரின் பேச்சுக்களைப் புரிந்துகொள்வது சாதாரண ஜனங்களுக்குக் கொஞ்சம் கஷ்டமாகவே இருக்கிறது. என்ன நோக்கத்துடனே இம்மாதிரி சர்தார் பேசியிருக்கலாம் என்று யோசிக்கும்படியாகவும் இருக்கிறது.

உதாரணமாக, சில நாட்களுக்கு முன் இந்திய சட்ட சபையில் சில அங்கத்தினர் "ஐ. சி. எஸ். வர்க்கத்துக்கு இவ்வளவு அதிகப்படி சலுகைகள் ஏன்?" என்று கேட்டு விட்டார்கள். அது விஷயமாக ஆத்திரமாகவும் பேசிவிட்டார்கள். எத்தனையோ வருஷ காலம் அதிகார வர்க்கத்தாரின் அமுலையும் ஊழலையும் குறித்து விளாசிக் கொண்டிருந்தவர்கள் அல்லவா? அந்த ஞாபகத்திலே கொஞ்சம் காரசாரமாகவே வெளுத்து வாங்கிவிட்டார்கள்.

இவர்களுக்கு சர்தார் வல்லபாய் படேல் பதில் சொன்னார். பதில் சொல்லுகையில் குண்டாந் தடி அடியைப் போல் ஒரு போடு போட்டுவிட்டார். "ஐ. சி. எஸ். காரர்களைப் பற்றி இப்படியெல்லாம் நீங்கள் பேசுவதாயிருந்தால் அவர்களும் நானும் ராஜினாமா செய்து விட்டுப் போய்விடுகிறோம். அப்புறம் நீங்கள் காங்கிரஸ் ஊழியர்களையே வைத்துக் கொண்டு அரசாங்கத்தைத் திவ்யமாக நடத்திக் கொள்ளுங்கள்!" என்றார்.

இந்தப் பயங்கரமான வார்த்தைகள் உத்தேசித்த பலனை உடனே தந்தன. ஆட்சேபித்த அங்கத்தினர்கள் வாயை இறுகப் பொத்திக் கொண்டார்கள். ஐ. சி. எஸ். வர்க்கத்தாரை முன்போலவே 'சொர்க்கத்திலே பிறந்தவர்கள்' (Heavenborn) என்று ஒப்புக்கொண்டு தூபதீப நைவேத்தியங்களைச் செய்யவும் தயாராகி விட்டார்கள்.

சர்தார் வல்லபாய் படேல் எதற்காக அவ்விதம் பேசினார் என்பதை நாம் புரிந்துகொள்ளுவது கொஞ்சம் கஷ்டமான விஷயந்தான்.

உண்மையில் ஐ. சி. எஸ். வர்க்கத்தினர் அவ்வளவு இன்றியமையாத தெய்வப் பிறவியாளர்களா?

அல்லது ஐ. சி. எஸ். வர்க்கத்தில் அயோக்கியர் ஒருவரும் இல்லையென்று நான் சத்தியம் செய்ய முடியுமா?

வங்காளத்திலே ஒரு பெரிய ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர், வீடிழந்து நாடிழந்து ஓடி வந்த அகதிகளின் சொத்தில் லட்சக்கணக்காகக் கபளீகரம் செய்து விட்டதாக நடந்த வழக்கு, சென்ற மாதத்திலேதான் முடிவடைந்து, மேற்படி உத்தியோகஸ்தர் மூன்று வருஷம் கடுங்காவல் தண்டனை அடைந்ததாகப் பத்திரிகைகளிலே செய்தி வெளியாகியிருக்கிறது.

அப்படியிருக்க, ஐ. சி. எஸ். வர்க்கத்தாரை அவ்விதம் ஒரேயடியாக சர்தார் பட்டேல் தூக்கி வைப்பானேன்?

அல்லது காங்கிரஸ் ஊழியர்களைத் தான் அவ்விதம் தொபுகடீரென்று கீழே தூக்கிப் போடுவானேன்?

காங்கிரஸ் ஊழியர்களிலே சிலர் கேவலமாகவும் காங்கிரஸின் கௌரவத்தையே கெடுக்கும்படியாகவும் நடந்து கொண்டிருக்கலாம்.

அதிலிருந்து காங்கிரஸ் ஊழியர்கள் எல்லாரையுமே கேவலமானவர்கள் என்று தள்ளிவிடலாமா?

உண்மையான தேசபக்தர்களும் தியாகிகளும் சன்மார்க்க சீலர்களும் காங்கிரஸ் ஊழியர்களில் எத்தனையோ பேர் இல்லையா?

அவர்களுடைய திறமைக்குத்தான் என்ன குறைவு? உதாரணத்துக்கு, ஸ்ரீ காமராஜ் அவர்களைப் பார்க்கலாமே? காங்கிரஸ் ஊழியராயிருந்து தலைவராக வந்தவர் ஸ்ரீ காமராஜ் என்பது அனைவருக்கும் தெரியும். சென்ற சில வருஷங்களில் அவருடைய அதிசயமான நிர்வாகத் திறமை நன்கு வெளியாகியிருக்கவில்லையா? அது காரணமாக அவருக்கு அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ஸ்தானம் கிடைக்கவில்லையா?

ஆகவே, சர்தார் படேல் அவ்விதம் பேசியதன் நோக்கம் என்ன? ஏதோ அந்தச் சமயத்தில் ஏற்பட்ட படபடப்பினால் பேசிவிட்டார் என்று சொல்லக்கூடும். நாம் அப்படிக் கருதவில்லை.

ஐ. சி. எஸ். காரர்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு தற்சமயம் தேச நிர்வாகத்துக்குத் தேவையாயிருக்கிறது. அவர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவது அவசியமாயிருக்கிறது. சர்தார் படேல் அவ்விதம் தட்டிக் கொடுத்திருக்கிறார். அந்த வழியில் ஐ. சி. எஸ். காரர்களை சரியாக வேலை வாங்க முடியவில்லையென்றால், அடுத்தபடி வேறு முறையைக் கையாளவும் சர்தார் பின்வாங்க மாட்டார். — இவ்விதம் நாம் சர்தாரின் பேச்சுக்குப் பொருள் கொள்கிறோம்.

* * *

சென்ற வாரத்தில் சர்தார் வல்லபாய் படேல் இந்திய முதலாளி வர்க்கத்தை முன்னிட்டு இரண்டு பிரசங்கங்கள் செய்திருக்கிறார். இந்தப் பிரசங்கங்களைப் படிக்கும்போதும் புரிந்து கொள்வது கொஞ்சம் கஷ்டமாகத்தானிருக்கிறது. முதலாளி வர்க்கத்தின் மூர்க்கப் பிடிவாதத்துக்கும் சண்டித்தனத்துக்கும் இந்திய சர்க்கார் பணிந்து சரணாகதி அடைவதைப் போலவே தோன்றுகிறது.

"நீங்கள் எப்படியாவது எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும். உங்களுடைய வரிகளைக் குறைக்கிறோம். உங்கள் குறைகளைத் தீர்க்கிறோம். நீங்கள் ரொம்பப் பெரிய மனது செய்து இந்தியாவின் தொழில் பெருக்கத்துக்கு உதவி செய்ய வேண்டும்!" என்று கெஞ்சுவதுபோலவே சர்தாரின் பேச்சுத் தொனிக்கிறது.

இதுமட்டுமா? "இந்திய முதலாளியின் பழைய கள்ளத்தனங்களையெல்லாம் கவனியாமல் விட்டு விடுகிறோம்" என்கிற வாக்குறுதியும் சர்தாரின் பேச்சில் இருக்கிறது.

"வரி கொடுக்காமல் பதுக்கி வைத்திருக்கும் பணங்களை நிர்ப்பயமாக வெளியில் கொண்டு வந்து தொழில்களில் போடுவதற்கு அநுகூலமாக ஒரு வழி கண்டு பிடித்துக் கொண்டிருக்கிறோம். யார் பதுக்கி வைத்தது என்றாவது, எத்தனை வரி கொடாமல் ஏமாற்றியது என்றாவது கேள்வி ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறோம். எப்படியேனும் பதுக்கி வைத்த பணத்தைக் கைத்தொழில்களிலே போட்டால் போதும்!" என்று சர்தார் படேல் சொல்லியிருப்பதைப் பத்திரிகைகளில் படிக்கும்போது, "இப்படிப் பேசுவது நம்முடைய சர்தார் வல்லபாய் படேல் தானா?" என்ற சந்தேகமே நமக்கு உண்டாகி விடுகிறது. "அயோக்கியர்களுக்குத்தான் காலம்" என்று சிலர் அடிக்கடி சொல்கிறார்களே, அதுவல்லவா உண்மையாகிவிடும் போலிருக்கிறது? வரி கொடாமல் பதுக்கி வைத்தவர்களுக்கு அப்படி இடம் கொடுத்து விட்டால், அயோக்யத்தனத்தை அரசாங்கம் ஆமோதித்தது போலாகுமே?

இந்திய முதலாளிகளுக்கு அவ்வளவு சலுகை காட்ட வேண்டியது அவசியமா? அவர்கள் பதுக்கி வைத்திருக்கும் பணத்தை வெளியிலே கொண்டு வருவதற்கு வேறு நிறமையான வழி எதுவும் இல்லாமலா போய்விடும்? திறமைக்குப் பெயர் போன ஐ. சி. எஸ். வர்க்கம் என்ன செய்கிறது? — இத்தகைய கேள்விகள் பொது மக்களின் மனதில் உண்டாகத்தான் செய்யும்.

சென்ற ஐம்பது வருஷத்து இந்திய சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தோமானால் ஒரு விஷயம் நன்கு தெளிவாகும். அதாவது, இந்திய முதலாளிகளில் ஒரு சிலர் தேசபக்தர்களாயிருந்திருக்கின்றனர்; தேசீய இயக்கங்களுக்கு உதவி செய்திருக்கின்றனர். ஆனால் மொத்தத்தில் இந்திய முதலாளி வர்க்கம் தேச நன்மைக்கு விரோதமாகவே இருந்து வந்திருக்கிறது. சுய நலத்தையும் சொந்த லாபத்தையுமே பெரிதாகக் கருதி நடந்திருக்கிறது.

1905 - 1906ல் வங்காளத்தில் எழுந்த சுதேசி இயக்கம் இந்தியா தேசமெங்கும் பரவிற்று. அந்த சந்தர்ப்பத்தைப் பம்பாய் ஆலை முதலாளிகள் பயன்படுத்திக் கொண்டு ஆலைத் துணிகளின் விலைகளை உயர்த்திக் கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள். இதன் காரணமாக, சுதேசி இயக்கம் அபகீர்த்தி அடைந்து தோல்வியுற்றது. மறுபடியும் மகாத்மா காந்தி தலைமைப் பீடத்துக்கு வந்த பிறகு தமது ஆத்ம சக்தியினாலே சுதேசி இயக்கத்தை உயிர்ப்பித்தார்.

சென்ற மகா யுத்தத்தின்போது இந்திய முதலாளிகள் ஒரு பக்கம் காங்கிரஸ் போராட்டத்தில் அநுதாபம் உள்ளவர்களைப் போலக் காட்டிக் கொண்டார்கள். மற்றொரு பக்கத்தில் இரகசியமாக யுத்த காண்டிராக்டுகள் எடுத்துக் கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள்.

யுத்தம் முடிந்து இந்தியாவின் சுதந்திர அரசாங்கம் ஏற்பட்ட பிறகு, அதிலும் காந்தி மகான் விண்ணுலகம் எய்திய பிறகு, இந்திய முதலாளிகள் தங்கள் உண்மை சொரூபத்தைக் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

"எங்கள் இஷ்டப்படி அரசாங்கத்தை நடத்துங்கள்; நாங்கள் சொல்லுகிற வரியைப் போடுங்கள்; நாங்கள் ஆட்சேபிக்கிற வரியை எடுத்து விடுங்கள். நாங்களாகக் காட்டுகிற கணக்கை ஒப்புக் கொள்ளுங்கள்; காட்டாத கணக்கைக் கேட்காதேயுங்கள். இப்படியெல்லாம் நாங்கள் சொல்லுகிறபடி கேட்டு நடந்தால் உங்களுடன் ஒத்துழைப்போம். இல்லாவிட்டால் சண்டித்தனம் செய்வோம். பணத்தை முடக்கி வைப்போம். தொழில்களைச் சுருக்கிவிடுவோம். தேசம் நாசமாகிவிடும். ஜாக்கிரதை!" என்று முதலாளிகள் பயமுறுத்தி வருகிறார்கள்.

இந்திய முதலாளிகளின் சுயநலப் பற்றும் கொள்ளைலாப மோகமும் எவ்வளவு உச்ச நிலையை அடையக்கூடும் என்பதற்குச் சமீபத்தில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் சர்க்கரைப் பஞ்சம் நல்ல உதாரணமாயிருக்கிறது.

சர்க்கரைத் தொழிலை மேற்பார்வை செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் கமிட்டியார் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் "இப்போது ஏற்பட்டிருக்கும் சர்க்கரைப் பஞ்சம் செயற்கைப் பஞ்சந்தான்!" என்று திட்டமாய்ச் சொல்லியிருக்கின்றனர்.

அதாவது "சர்க்கரைக் கிராக்கி இயற்கையான காரணங்களினால் ஏற்பட்டதல்ல. முதலாளிகள் கொள்ளை லாப ஆசையினால் வேண்டுமென்று சிருஷ்டித்த கிராக்கி" என்று ஏற்படுகிறது.

சென்ற பதினேழு வருஷ காலமாக இந்தியாவின் சர்க்கரைத் தொழிலுக்கு இந்திய சர்க்கார் பாதுகாப்பு அளித்து வந்திருக்கிறார்கள்.

ஜாவா முதலிய வெளி நாடுகளிலிருந்து சர்க்கரையைத் தாராளமாகத் தடையின்றி இறக்குமதி செய்ய அநுமதித்தால் சர்க்கரை பொது ஜனங்களுக்கு மலிவான விலைக்குக் கிடைக்கும். அவ்வளவு மலிவான விலைக்கு உள் நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையை விற்க முடியாது. ஆகையால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் சர்க்கரைக்கு ஏராளமான வரி போட்டு வசூலித்து வருகிறார்கள். வெளி நாட்டுச் சர்க்கரையை வரியுடன் சேர்த்து விற்கும் விலைக்கு உள் நாட்டுச் சர்க்கரை வரி கொடாமல் விற்கப்படுகிறது. இப்படிப் பதினேழு வருஷ காலம் இந்திய சர்க்கரைத் தொழில் பாதுகாப்பைப் பெற்று வருகிறது.

ஆயினும் இந்திய சர்க்கரைத் தொழில் முதலாளிகள் இப்போது எப்படி நடந்து கொண்டார்கள்? வெளிநாட்டுச் சர்க்கரைக்குத் தடை விதித்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டார்கள். உள் நாட்டில் உற்பத்தியாகும் சர்க்கரையை முழுதும் வெளியில் விடாமல் பதுக்கி வைத்தார்கள். இவ்விதம் செயற்கை முறையில் சர்க்கரைக்குக் கிராக்கி உண்டு பண்ணினார்கள். தலைப்பிலே உள்ள சர்க்கரை ஆலை முதலாளியிலிருந்து சில்லறை மளிகைக் கடை வியாபாரி வரையில் கையிருப்பிலிருந்த சர்க்கரையின் விலையை அசாத்தியமாக ஏற்றினார்கள். சர்க்கரை உபயோகித்துப் பழக்கமான மக்கள் சொல்ல முடியாத கஷ்டங்களை அடைந்தார்கள்.

இது எப்படிப்பட்ட அநியாயம் என்று சொல்லவும் வேண்டுமா? காந்தி மகாத்மா இப்போது ஜீவியவந்தராயிருந்திருந்தால் இந்த அக்கிரமத்துக்குப் பரிகாரமாக ஒரு கடும் விரதம் மேற்கொண்டிருப்பார்.

சர்க்கரை ஆலை முதலாளிகளின் மனோபாவந்தான் பணம் படைத்த முதலாளிகள் பலருக்கும் இருந்து வருகிறது. அவர்களுடைய பேச்சுகளிலும் நடவடிக்கைகளிலும் இது நன்றாய்த் தெரிந்து வருகிறது.

அப்படிப்பட்ட முதலாளிகள் விஷயத்திலா சர்தார் படேல் இவ்வளவு பணிவாகப் பேசுகிறார்? இப்படி அவர்களுடைய தாவாக் கட்டையைப் பிடித்துக் கெஞ்ச வேண்டிய அவசியம் என்ன? — இதை நினைத்தால் வியப்பாகத்தான் இருக்கிறது.

ஆயினும் சர்தார் வல்லபாய் படேலின் ஆற்றலை நாம் நன்கறிந்திருக்கிறோம். பல அசாத்தியமான காரியங்களில் அவர் வெற்றி பெற்றிருப்பதையும் பார்த்திருக்கிறோம்.

ஆகவே இந்திய முதலாளிகளுக்குச் சர்தார் வல்லபாய் படேல் ஓர் இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார் என்றே நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. இவ்வளவு பணிவாக வேண்டுகோள் விடுத்த பிறகும் இந்திய முதலாளிகள் சர்க்காருடன் ஒத்துழைக்க முன்வரா விட்டால் வேறு தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்குச் சர்தார் படேல் ஆயத்தமாயிருக்கிறார் என்றே நம்புகிறோம். "மயிலே! மயிலே! ஒரு இறகு போடு!" என்று சர்தார் வல்லபாய் படேல் இந்திய முதலாளிகளைப் பார்த்துக் கேட்பது இதுவே கடைசித் தடவை என்றும் நம்புகிறோம்.

பரிவாரத்தோடு பயணம் கிளம்பும்



பிரகாசம் பந்துலு காரு! — நான்
பிரியமாய்ச் சொல்லுவதைத் தவறாமல் கேளும்!

1. தீராத வியாதி இது இல்லை — உங்கள்
தேகத்திலே ஏதும் குறை சொல்ல இல்லை!
போராத காலத்தில் புத்தி — கெட்டுப்
போனதால் வந்ததோர் கோலமிச் சன்னை!

2. உலகத்தில் மருந்திதற் கில்லை — எங்கள்
ஊரைவிட்டு நீர்போனால் தீர்ந்திடும் தொல்லை!
கலங்காமல் கேளுமென் சொல்லை — சென்னை
காற்று உமக் காகாது கடந்திடும் எல்லை!


3. 'மதராசு மனதே' என் றோதும் — புத்தி
மாருட்ட ஜன்னிக்கு ஜோரான வழியே!
பதறாமல் மூட்டையைக் கட்டி — உங்கள்
பரம்பரை ஊருக்கே கிளம்புங்க போதும்!

4. வேங்கடத் தப்பாலே போனால் — உங்கள்
கோங்குரா சட்டினியைக் குடல் தாங்கிக் கொள்ளும்!
எங்கா நீர் சென்னைக்கு ஐயா — உமக்கு
எமனாக வீசுது தமிழ்க்காற்று இங்கே!

5. பிரகாசம் பந்துலு காரு — வீண்
பிடிவாதம் உடம்புக்குக் கெடுதியாய்ப் போகும்!
பரிகாரம் மருந்தொன்றும் இல்லை — உங்கள்
பரிவாரத் தோடு நீர் பயணம் கிளம்பும்!

பிரகாசம் பந்துலு காரு!

—காட்டூர் கண்ணன்




பரிபூரணத் திருப்தியளிக்கும்
அபூர்வமான
சித்திரம்..
அபூர்வ
சகோதரர்கள்
ஜெமினி தயாரிப்பு....
.... சென்னை பிரபாத், வெலிங்டன் ....
இரு தியேட்டர்களிலும், மற்றும் தமிழ் நாடெங்கும் நடைபெறுகிறது.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

21. முழத் துண்டு விரதம்

தமிழ் நாட்டுக்கும் மகாத்மா காந்திக்கும் நெருங்கிய தொடர்புகள் சில உண்டு. தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹத்தில் மகாத்மாவுக்குத் துணை நின்றவர்களில் தமிழர்கள் முக்கியமானவர்கள். அந்த சத்தியாக்கிரஹப் போரில் தமிழ் நாட்டு வள்ளியம்மை உயிர்த் தியாகம் செய்து அழியாப் புகழ் பெற்றாள்.

ராவலட் சட்டத்தை எதிர்த்து எப்படி இயக்கம் நடத்துவதென்று மகாத்மா காந்தி யோசித்துக் கொண்டிருந்த காலத்தில் ஒரு சமயம் சென்னைக்கு வந்தார். ஏப்ரல் 6-ந் தேதி அகில இந்திய ஹர்த்தால் நடத்தவேண்டும் என்ற எண்ணம் சென்னையில் தங்கியிருந்தபோது மகாத்மாவின் மனதில் உதயமாயிற்று.

இவற்றைக் காட்டிலும் மகாத்மாவின் வாழ்க்கையில் பெரும் மாறுதல் உண்டாக்கிய ஒரு சம்பவம் 1921 செப்டம்பரில் மகாத்மா காந்தி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்தபோது நிகழ்ந்தது.

* * *

அந்த நாளில் பட்டணங்களிலும் கிராமங்களிலும் காங்கிரஸ் பிரசாரம் செய்வதற்காகச் செல்வோர் தங்கள் பிரசங்கத்துக்கு முக்கியமாகக் கையாண்ட விஷயம் ஒன்று உண்டு. கிழக்கிந்தியக் கம்பெனியின் காலத்தில் இங்கிலீஷ்காரர்கள் துணி மூட்டையைத் தோளிலே சுமந்துகொண்டு இந்தியாவில் துணி விற்க வந்ததிலிருந்து பிரசங்கத்தைத் தொடங்குவார்கள். ஆங்கில நாட்டுத் துணியோடு இந்திய சுதேசித் துணி போட்டி போடாமலிருப்பதற்கு வெள்ளைக்காரர்கள் கையாண்ட முறைகளைச் சொல்வார்கள். இந்தியாவில் கைத்தறியில் உற்பத்தியான துணிகளின் மேன்மையைப் பற்றிப் பேசுவார்கள். டாக்கா மஸ்லின் துணியின் நயத்தைப் பற்றியும், ஒரு பீஸ் மஸ்லினை ஒரு மோதிரத்துக்குள் அடைத்த கதையைப் பற்றியும், அவுரங்கஜீப்பின் குமாரி டாக்கா மஸ்லின் உடுத்திக் கொண்ட வரலாற்றைக் குறித்தும் விஸ்தாரமாகச் சொல்வார்கள். அத்தகைய அதிசயமான துணிகளை நெய்த கைத்தறிக்காரர்களின் கட்டை விரல்களை ஆங்கிலேயர் துண்டித்தெறிந்த அக்கிரமக் கொடுமையைப் பற்றி இரத்தம் கொதிக்கும்படி ஆத்திரமாய்ப் பேசுவார்கள். "இங்கிலீஷ் ராஜ்யம் இந்தியாவில் லங்காஷயர் துணி வியாபாரத்துக்காகவே ஏற்பட்டது. இப்போதும் லங்காஷயரின் நன்மையை முன்னிட்டே இந்தியா ஆளப்பட்டு வருகிறது. என்றைய தினம் இந்தியர்கள் அன்னியத் துணியை வாங்குவதை அடியோடு நிறுத்துகிறார்களோ, அன்றைக்கே இந்தியாவிலிருந்து பிரிட்டிஷார் மூட்டை கட்டி விடுவார்கள்!" என்று உறுதி கூறுவார்கள்.

இவ்வாறெல்லாம் அந்த நாளில் காங்கிரஸ் வாதிகள் பிரசாரம் செய்ததில் பெரிதும் உண்மை இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதனாலேயே 1905—1906 ல் வங்காளத்தில் ஒரு தடவை சுதேசி இயக்கம் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டது. அப்போது சுதேசி இயக்கத்தின் நோக்கம் பிரிட்டிஷ் துணிகளைப் பகிஷ்கரிப்பது தான். இந்த இயக்கத்துக்கு அப்போது சில இடையூறுகள் ஏற்பட்டன. அவற்றில் முக்கியமானது பம்பாய் — ஆமதாபாத் ஆலை முதலாளிகளின் பேராசையாகும். சுதேசி இயக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் ஆலைத் துணிகளின் விலைகளைக் கண்டபடி உயர்த்திக் கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள்.

இதன் பலன் என்ன ஆயிற்று என்றால், கொஞ்ச காலத்துக்கெல்லாம் பொது மக்களில் பலருக்குச் சுதேசி இயக்கத்தின் பேரில் பற்று விட்டுப் போய்விட்டது.

* * *

இந்தப் பழைய நிகழ்ச்சிகளையெல்லாம் காந்தி மகான் நன்கு அறிந்திருந்தார். இந்தியாவின் அடிமைத்தனம் போக வேண்டுமானால், இந்தியர்கள் அன்னியத் துணி வாங்குவதையும் அணிவதையும் அடியோடு நிறுத்திவிட வேண்டும்.

ஆனால், முன்னொரு தடவை நடந்தது போல் ஆலை முதலாளிகள் பொது மக்களின் தலையில் கையை வைத்துக் கொள்ளை லாபம் தட்டுவதையும் தடுக்க வேண்டும். இதற்குச் சாதனமாக மகாத்மா காந்தி கைராட்டை இயக்கத்தைக் கைக்கொண்டார். கைராட்டையில் நூல் நூற்று அந்த நூலைக்கொண்டு கைத்தறியில் நெய்த கதரையே உடுத்த வேண்டும் என்று சொன்னார். இப்படிக் கதர் உடுத்துவதை வற்புறுத்துவதால் ஆலை முதலாளிகள் கொள்ளை லாபம் சம்பாதிப்பதைத் தடுக்கலாம். இது மட்டுமல்ல. மகாத்மாவின் வாழ்க்கைத் தத்துவத்தை நிறைவேற்றக் கைராட்டையும் கதரும் தகுந்த உபகரணங்களாயிருந்தன. மகாத்மா காந்தி தற்கால நவநாகரிக வாழ்க்கையை வெறுத்தார். ஆடம்பர சுகபோக வாழ்க்கையை வெறுத்தார். கைராட்டையும் கதரும் எளிய வாழ்க்கை முறையின் சின்னங்களாயிருந்தன. மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு வகையில் உடலை உழைத்துப் பாடுபட வேண்டும் என்று மகாத்மா கருதினார். அப்படி எல்லாரும் உடல் உழைப்பைக் கைக்கொள்ளக் கைராட்டை நல்ல சாதனமாயிருந்தது. இயந்திர நாகரிகம் மனித சமூகத்தின் ஆத்மீக அழிவுக்குக் காரணமாகும் என்பது காந்திஜியின் கொள்கை. கைராட்டை இயந்திர நாகரிகத்தை எதிர்த்து நிற்பதற்கு ஆயுதமாயிருந்தது. இந்தியாவின் ஏழு லட்சம் கிராமங்களில் வாழும் மக்களை மகாத்மா 'தரித்திர நாராயணர்'களாகக் கண்டார். அவர்களுடைய வறுமையை நினைத்து உருகினார். வருஷத்தில் ஆறு மாதம் கிராமவாசிகள் வேலையில்லாமலிருக்கிறார்கள் என்பதும் மகாத்மாவுக்குத் தெரிந்திருந்தது. லட்சக்கணக்கான கிராமவாசிகளுக்கு வேலையில்லாத நாட்களில் வேலை கொடுக்கக் கூடியது கைராட்டினம் ஒன்றுதான் என்பதை மகாத்மா கண்டார். அநாதை ஸ்திரீகளும் வயதான மூதாட்டிகளும் பிறரை அண்டாமலும் பட்டினி கிடக்காமலும் 'இஷ்டமுடன் தம் குடிசை நிழலிலிருந்து நூல் இழைத்துப் பிழைக்கலாம்' என்று கண்டார். இத்தகைய காரணங்களினால் கைராட்டினத்தை மகாத்மா காந்தி 'காமதேனு' என்று போற்றினார். அதைக் குறித்து இடைவிடாது பேசியும் எழுதியும் வந்தார்.

இந்தியா தேசத்தின் சிறந்த அறிவாளிகளில் சிலருக்கு மகாத்மா காந்தியின் கைராட்டைப் பிரசாரம் பிடிக்கவில்லை. அவ்விதம் பிடிக்காதவர்களில் ஒருவர் மகா கவி ரவீந்திரநாத டாகூர். மகாத்மாவிடம் மகாகவி எத்தனையோ அபிமானமும் மரியாதையும் கொண்டிருந்தவர். 'மனித சமூகத்தை ரட்சிக்க அவதரித்த மகா புருஷர்களில் ஒருவர் மகாத்மா காந்தி' என்று டாக்டர் டாகூர் பல முறையும் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார். ஆனாலும் காந்திஜியின் கைராட்டைப் பிரசாரத்தை மகாகவி டாகூர் விரும்பவில்லை. இராட்டைப் பிரசாரத்தைப் "பிற்போக்கு இயக்கம்" என்று டாகூர் பகிரங்கமாகக் கூறிக் கண்டித்தார். "இயந்திரங்களினால் மனித சமூகம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கிறது. காந்திஜி அந்த முன்னேற்றத்தை யெல்லாம் புறக்கணித்து இந்திய மக்களைப் பல நூறு வருஷம் பின்னால் கொண்டு போகப் பார்க்கிறார்" என்று டாக்டர் டாகூர் சொன்னார்.

காந்தி மகான் மகாகவி டாகூரைக் 'குருதேவ்' என்று போற்றி வந்தவர். தென்னாப்பிரிக்காவில் தம்முடன் டால்ஸ்டாய் பண்ணையில் வாழ்ந்தவர்களை இந்தியா வந்ததும் முதன் முதலில் டாகூரின் சாந்திநிகேதனத்துக்கே மகாத்மா அனுப்பினார் அல்லவா? ஆனபோதிலும் கைராட்டை இயக்கத்தைப் பற்றியவரையில் மகாத்மா காந்தி குருதேவரின் கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை. "வானத்தில் ஆனந்தமாய்ப் பாடிக் கொண்டு பறக்கும் வானம்பாடிக்குப் பூமியிலுள்ள கஷ்டங்கள் எப்படித் தெரியும்? குருதேவர் டாகூர் மகாகவி; அவருக்கு ஏழைகளின் பட்டினிக் கொடுமை இத்தகையது என்று தெரியாது. தெரிந்திருந்தால் கைராட்டைதான் ஏழைகளின் காமதேனு என்பதை ஒப்புக்கொண்டிருப்பார்" என்று காந்தி மகான் அணுவளவும் தமது கொள்கையிலிருந்து வழுவாமல் டாகூருக்குப் பதில் கூறினார்.

1921-ம் வருஷம் செப்டம்பர் மாதத்துக்குள் இந்தியாவில் அன்னியத் துணி பகிஷ்காரத்தைப் பூரணமாய் நடத்திவிடவேண்டும் என்று காந்திஜி கருதியிருந்தார். செப்டம்பரில் அத்திட்டம் நிறைவேறிவிட்டால் அடுத்து வரும் மாதங்களில் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கி வருஷக் கடைசிக்குள் சுயராஜ்யத்தை ஸ்தாபித்து விடலாம் என்று உத்தேசித்திருந்தார்.

வால்டேரில் மௌலானா முகம்மதலி சிறைப்பட்டது மகாத்மாவின் சுயராஜ்ய தாகத்தைப் பன்மடங்கு ஆக்கியது. விதேசித் துணி பகிஷ்காரத்தை நிறைவேற்றுவதில் அவருடைய ஆர்வமும் பெருகிற்று. இந்த ஆர்வத்துடனேதான் சென்னையிலிருந்து புறப்பட்டுத் தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்த

தொடங்கினர். அவருடன் மௌலானா ஆஜாத் சோபானி என்னும் முஸ்லிம் பெரியாரும் பிரயாணம் செய்தார்.

காந்திஜி கோஷ்டியார் ஏறிய ரயில் விழுப்புரம் சென்றது. விழுப்புரம் ரயில்வே நிலையத்தில் எள்ளுப்போட்டால் எள்ளு விழாதபடி பதினையிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். காந்திஜி அவர்களுக்குக் கைராட்டையையும் கதரையும் பற்றி எடுத்துச் சொல்ல விரும்பினார். ஆனால் அது சாத்தியப்படவில்லை. கூட்டத்தில் அவ்வளவு இரைச்சல். "உட்காருங்கோ!" "சத்தம் போடாதேங்கோ!" என்று நூற்றுக்கணக்கான குரல்கள் ஏக காலத்தில் எழுந்தன. ஜனங்கள் போட்ட இரைச்சலுடன் இரைச்சலை அடக்க முயன்றவர்களின் கூப்பாடும் சேர்ந்து ஏக இரைச்சலாகி விட்டது. காந்திஜி ஒரு வார்த்தைகூட அக் கூட்டத்தில் பேச முடியவில்லை. ரயில் வண்டி மேலே சென்றது.

பறங்கிப்பேட்டையில் மின் பீடர்ஸன் என்னும் ஐரோப்பிய அம்மையார் ஆரம்பித்திருந்த ஆசிரமத்துக்கு மகாத்மா அஸ்திவாரம் நாட்டினார். பிறகு கூடலூரில் பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டுக் கும்பகோணத்துக்கு வந்தார். கும்பகோணத்தில் மகாத்மாவைத் தரிசிக்க சுமற்பதினையிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். அவ்வளவு பேரும் காந்திஜியைப் பக்கத்தில் சென்று பார்க்க முயன்றார்கள். கூட்டத்தில் எழுந்த கூச்சலையும் கூப்பாட்டையும் சொல்லி முடியாது. கும்பகோணம் கூட்டத்திலும் மகாத்மாவினால் பேச முடியவில்லை. அங்கிருந்து திரிசிராப்பள்ளிக்குச் சென்றார்.

திரிசிராப்பள்ளியில் தேச பக்தர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்களின் வீட்டில் மகாத்மாவுக்கு நிம்மதி கிடைத்தது. "மகாத்மாவுடன் ஏழு மாதம்" என்னும் நூலில் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் என்பவர் இதைப் பற்றி எழுதியிருக்கிறார். அந்தப் பிரயாணத்தின் போது மகாத்மாவின் காரியதரிசியாகத் தொண்டு செய்தவர் ஸ்ரீ கிருஷ்ணதாஸ். அவர் மேற்கூறிய புத்தகத்தில் எழுதியிருப்பதாவது :—

"திரிசிராப்பள்ளி ஸ்டேஷனை அடைந்ததும் எங்களுக்கெல்லாம் மிக்க வியப்பும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன. ரயில்வே நிலையத்தில் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்த போதிலும் இரைச்சல் என்பதே கிடையாது. அன்றைக்கு மகாத்மாவின் மௌன தினம். ரயிலை விட்டு அமைதியாக இறங்கி ஜாகைக்குப் போக முடிந்தது. இங்கே ஜனங்களிடம் காணப்பட்ட அமைதியும் ஒழுங்கும், வழியெல்லாம் ஜனக்கூட்டத்தின் அமளியினால் கஷ்டப்பட்டு வந்த எங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருந்தது. ரயில்வே நிலையத்துக்குப் பக்கத்தில் உள்ள டாக்டர் ராஜனுடைய வீட்டில் எங்களுக்கு ஜாகை. டாக்டர் ராஜன் அப்போது மாகாண காங்கிரசின் காரியதரிசி. அவருடைய வீடு ஏறக்குறைய ஓர் ஆசிரமமாக மாறியிருந்தது. தம்முடைய குடும்பத்தில் யாரும் இனிக் கடையில் துணி வாங்கக் கூடாது என்றும் அவரவர்களுடைய தேவைக்கு வேண்டிய நூல் அவர்களே நூற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கட்டளை யிட்டு விட்டதாக டாக்டர் ராஜன் மகாத்மாஜியிடம் தெரியப்படுத்தினார். டாக்டர் ராஜனுடைய வீடு திருச்சி நகரத்துக்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு பெரிய தோட்டத்தின் நடுவில் இருந்தது. புயலிலும் சண்டமாருதத்திலும் அடிபட்டுத் திண்டாடிய கப்பல் ஒரு அமைதியான துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தால் பிரயாணிகள் எவ்வளவு ஆனந்தம் அடைவார்களோ அவ்வளவு ஆனந்தம் நாங்களும் அடைந்தோம்."

இவ்வாறு திருச்சியில் டாக்டர் ராஜனுடைய கண்டிப்பான பாதுகாப்பின் காரணமாக மகாத்மாவுக்குக் கொஞ்சம் ஓய்வும் அமைதியும் கிடைத்தது. ஆனால் அமைதி வெளியில் இருந்ததே தவிர அவருடைய மனதில் நிம்மதி ஏற்படவில்லை. விதேசித் துணியைப் பகிஷ்கரிப்பதிலும் கதரைப் பெருக்குவதிலும் அவருடைய மனதில் குடிகொண்டிருந்த தாபத்தை அவர் மக்களுக்கு வெளியிட விரும்பினார்.

ஆனால் ஜனங்களோ மகாத்மாவை அருகில் சென்று பார்த்துவிட வேண்டும் என்று பிரயத்தனம் செய்தார்கள். மாபெருங் கூட்டம் கூடி மக்கள் போட்ட கூச்சலினால் மகாத்மாவின் வார்த்தைகள் அவர்கள் காதில் விழுவதே இல்லை.

"ஐயோ! நாட்கள் போய்க் கொண்டிருக்கின்றனவே! இவ்வளவு ஜனங்களும் வந்து கூட்டம் கூடிக் கூச்சல் போட்டு விட்டு என்னைப் பார்த்து விட்டுப் போய் விடுகிறார்களே? கைராட்டையைப் பற்றியும் கதரைப் பற்றியும் இவர்களுக்கு எவ்வாறு சொல்வேன்? என் இதயக் கொதிப்பை இவர்களுக்கு எவ்வாறு வெளியிடுவேன்?" என்று மகாத்மா யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

திருச்சியிலும் ஸ்ரீரங்கத்திலும் பொதுக் கூட்டங்களில் ஓரளவு அமைதி நிலவியது. திருச்சியிலிருந்து மகாத்மா திண்டுக்கல்லுக்குப் போனார். அங்கே பழைய கதைதான். கூட்டம் பிரமாதம்; கூச்சலும் பிரமாதம். மகாத்மாவினால் ஒரு வார்த்

தையும் பேசமுடியவில்லை. திண்டுக்கல்லிலிருந்து மதுரைக்குப் போனார். மதுரை மகாத்மாவுக்கு அளித்த வரவேற்பு மற்ற ஊர் வரவேற்புகளை யெல்லாம் தூக்கி அடித்து விட்டது. அவ்வளவு லட்சக் கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். ஆனால் பொதுக்கூட்டத்தைப் பற்றிய வரையில் பழைய கதைதான்! அமைதியை நிலைநாட்ட மதுரைத் தலைவர்கள் எவ்வளவோ முயன்றார்கள். மகாத்மாவும் முயன்று பார்த்தார். ஒன்றும் பயன்படவில்லை. மகாத்மா பிரசங்கம் செய்யாமலே கூட்டத்தைக் கலைந்து போகச் சொல்லும்படி நேர்ந்தது.

மதுரையில் அன்றிரவு மகாத்மாவின் ஜாகையில் அவரைப் பல பிரமுகர்கள் வந்து சந்தித்தார்கள். அவர்களுடன் மகாத்மா பொதுப்படையாக வார்த்தையாடிக் கொண்டிருந்த போதிலும் அவருடைய உள்ளம் யோசனையில் ஆழ்ந்திருந்தது. கதர் இயக்கத்தைப் பிரசாரம் செய்வதற்குத் தகுந்த சாதனம் ஒன்றை அவர் மனம் தேடிக் கொண்டிருந்தது. அத்தகைய சாதனம் வேறு எந்த விதமாயிருக்க முடியும்? பிறருடைய தவறுகளுக்காகத் தாம் உண்ணாவிரதம் இருந்து பிராயச் சித்தம் செய்து கொள்கிறவர் அல்லவா மகாத்மா? எனவே, மக்களுக்குக் கதரின் முக்கியத்தை உணர்த்தும்படியாகத் தாம் என்ன தியாகத்தைச் செய்வது, என்ன விரதத்தை மேற்கொள்வது என்றுதான் அவர் உள்ளம் சிந்தனை செய்தது.

மகாத்மாவைச் சந்தித்துப் பேச வந்த பிரமுகர்களில் ஒருவர் கதர் உடுத்தாமல் அந்நியத்துணி உடுத்திக் கொண்டு வந்தார். அவரைப் பார்த்து மகாத்மா "நீங்கள் என்னைப் பார்க்க வருகிறீர்களே? என்னைப் பார்த்து என்ன பயன்? நான் இவ்வளவு நாள் சொன்ன பிறகும் விதேசித் துணி உடுத்தி யிருக்கிறீர்களே? ஏன் கதர் அணியவில்லை?" என்று கேட்டார்.

"கதர் உடுத்த எனக்கு இஷ்டந்தான். ஆனால் கதர் கிடைக்க வில்லை!" என்றார் அந்தப் பிரமுகர்.

அதே க்ஷணத்தில் மகாத்மாவின் மனதில் அவர் தேடிக் கொண்டிருந்த சாதனம் உதயமாகி விட்டது.

"ஆஹா! இவர் தமக்குக் கதர் கிடைக்கவில்லை என்கிறார். நாமோ இடுப்பில் பத்துமுழ வேஷ்டி, மேலே இரண்டு சட்டை, குல்லா, இவையெல்லாம் அணிந்திருக்கிறோம். எதற்காக இவ்வளவு கதர்த் துணியை நாம் அணிய வேண்டும்?" என்று தோன்றியது.

அதே சமயத்தில் தமிழ் நாட்டில் மகாத்மா கண்ட வேறொரு காட்சி நினைவுக்கு வந்தது. வடக்கே யெல்லாம் ஏழைத் தொழிலாளிகள், உழவர்கள் கூட மேலே சட்டை அணிவது வழக்கம். தமிழ்நாட்டில் வயற்புறங்களில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் அரையில் முழத் துணி யோடு வேலை செய்வது வழக்கம். "இது ஏன்?" என்று காந்திஜி தமிழ்நாட்டுத் தலைவர்களைக் கேட்டார். "ஒரு துணிக்கு மேலே இரண்டாவது துணி வாங்கவும் சட்டை தைக்கவும் அவர்களிடம் பணம் இல்லை" என்று பதில் வந்தது. அந்தப் பதில் மகாத்மாவின் மனதில் பதிந்து போயிருந்தது.

இவை யெல்லாவற்றையும் எண்ணிப் பார்த்து, மகாத்மா காந்தி அன்றிரவே ஒரு முடிவுக்கு வந்தார்.

மறுநாள் காலையில் மகாத்மா எழுந்ததும் தம்முடன் பிரயாணம் செய்த சகாக்களை அழைத்தார்.

"இன்று முதல் நான் இடுப்பில் ஒரு முழ அகலமுள்ள துண்டு மட்டும் அணிவேன். குளிர் அதிகமான காலங்களில் போர்த்திக் கொள்ள ஒரு துப்பட்டி உபயோகிப்பேன். மற்றப்படி சட்டை குல்லா எதுவும் தரிக்க மாட்டேன். இப்போதைக்கு இந்த விரதத்தை ஒரு மாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் போகிறேன். பிறகு உசிதம்போல் யோசித்து முடிவு செய்வேன்!" என்றார்.

இவ்விதம் சொல்லிவிட்டு, பத்து முழ வேஷ்டி—சட்டை—குல்லா எல்லாவற்றையும் களைந்து வீசி எறிந்தார். ஒரு முழ அகலமுள்ள துண்டை எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டார்.

தம்முடைய சகாக்களைப் பார்த்து "புறப்படலாம் காரைக்குடிக்கு!" என்று சொன்னார்.

மகாத்மாவின் சீடர்கள் கதி கலங்கிப் போனார்கள். இது ஒரு விபரீதமான விரதமாகவே அவர்களுக்குத் தோன்றியது. ஒரு மாதத்திற்கு இப்போது விரதம் எடுத்துக் கொண்டாலும் அதை மகாத்மா நிரந்தரமாகவே கொண்டு விடுவார் என்று பயந்தார்கள்! அவர்களில் ஒருவர் ஓடிப் போய் ராஜாஜியையும் டாக்டர் ராஜனையும் அழைத்து வந்தார். ராஜாஜியும் டாக்டர் ராஜனும் எவ்வளவோ காரணங்களைச் சொல்லி வேண்டிக்கொண்டார்கள். ஆனால் மகாத்மா தமது உறுதியைக் கைவிட விரும்பவில்லை. அதன் பேரில், இந்த விரதம் எடுத்துக் கொள்வதைக் கொஞ்ச நாள் தள்ளியாவது போடும்படி ராஜாஜியும் டாக்டர் ராஜனும் வேண்டிக் கொண்டார்கள். அதற்கும் மகாத்மா இணங்கவில்லை.

விடாமல் வாதம் செய்த ராஜாஜியைப் பார்த்து மகாத்மா, "உங்களுடைய வாதத்துக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால் நான் செய்வதுதான் சரி என்பதில் எனக்கு லவலேசமும் சந்தேகமில்லை" என்று சொன்னார்.

அன்று அதிகாலையில் மூன்று மணிக்குத் தாம் விழித்துக்கொண்டதாகவும், தூக்கமும் விழிப்புமாயிருந்த நிலையில் இந்த யோசனை தமக்குத் தோன்றியதாகவும், அது தம்முடைய அந்தராத்மாவின் கட்டளையென்றும், அதை மீற முடியாது என்றும் மகாத்மா தெரிவித்தார்.

பிறகு நடந்ததைப்பற்றி ஸ்ரீ கிருஷ்ணதாஸ் எழுதியிருப்பதாவது:—

"மகாத்மாஜி இடுப்பில் மட்டும் ஒரு முழ அகலத் துணி ஒன்றை உடுத்திக்கொண்டு காரைக்குடிக்குப் புறப்படத் தயாரானார். மகாத்மாவையும் அவருடைய சகாக்களையும் ஏற்றிச் செல்வதற்கு வாசலில் நாலு மோட்டார் வண்டிகள் தயாராகக் காத்திருந்தன. மதுரைமாநகரின் ஜனங்களும் அதிகாலையிலேயே எழுந்து மகாத்மாவைத் தரிசிப்பதற்குச் சாலையின் இரு புறமும் வந்து மொய்த்துக் கொண்டு நின்றார்கள். மகாத்மா, அரைத் துணி ஒன்றுடனே, சட்டை குல்லா அங்கவஸ்திரம் ஒன்றுமில்லாமல், மோட்டார் வண்டியில் போய் ஏறிய போது, அவருடைய சகாக்களும் சீடர்களும் உணர்ச்சி வசப்பட்டுத் தலை குனிந்து நின்றார்கள். திறந்த மோட்டார் வண்டி அதன் பிரயாணத்தைத் தொடங்கியபோது உதய சூரியனின் செங்கிரணங்கள் காந்தி மகாத்மாவின் மார்பிலும் தலையிலும் விழுந்தன. மகாத்மாவின் தாமிர வர்ணத் திருமேனி ஒரே ஜோதிமயமாய்க் காட்சி அளித்தது."

பின்னர் தமிழ் நாடெங்கும் மகாத்மா காந்தி முழத்துண்டு அணிந்தே பிரயாணம் செய்தார். அந்தக் கோலத்தில் அவரைப் பார்த்த ஜனங்கள் பரவசமடைந்தார்கள். மகாத்மாவின் பிரசங்கத்தைக் காது கொடுத்துக் கேட்கவேண்டிய அவசியமே அவர்களுக்கு இனி இல்லை. சட்டை அணியாத மகாத்மாவின் புனிதத் திருமேனியைத் தரிசித்த உடனேயே ஜனங்கள் மகாத்மாவின் விருப்பம் என்ன என்பதைத் தெரிந்துகொண்டார்கள். கைராட்டைக்கும் கதருக்கும் மகாத்மாவின் புதிய கோலமே மிகச் சிறந்த பிரசார சாதனமாயிற்று. ஆயிரம் கட்டுரைகளினாலும் பதினாயிரம் பிரசங்கங்களினாலும் சாதிக்க முடியாததை மகாத்மாவின் தவக் கோலம் சாதித்து விட்டது.

திருவையாறு திருவிழா

கோட்டு வாத்தியம் ஸ்ரீ துரையப்ப பாகவதர்

1. அங்குரார்ப்பணம்

நம் பாரத நாட்டில் வால்மீக முனிவரின் அம்சமாக அவதரித்தவர் சங்கீத மகான்களில் முதல்வராக விளங்கியவர் சத்குரு ஸ்ரீ தியாகராஜ பரப்பிரம்மம். அந்த மகானுக்குச் சிஷ்ய கோடிகளாகிய சங்கீத வித்வான்களால் சமர்ப்பிக்கப்படும் ஆராதனை உற்சவம் இப்போது திருவையாற்றில் பெரிய திருவிழாவாகவே நடந்து வருவதை அறியாதவர் இருக்க மாட்டார்கள். இந்த உற்சவம் ஆதியில் எப்படி நடந்தது, பிறகு எவ்வாறு பிரபலமடைந்தது, கட்சிகள் எப்படித் தோன்றின, மறுபடியும் கட்சிகள் எப்பொழுது ஒன்றுபட்டன என்ற விஷயங்கள் மிகவும் ரஸமாக இருக்கும்.

1847-ம் வருஷம் புஷ்ய பகுள பஞ்சமி தினத்தன்று ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் சித்தியடைந்தார். அவருடைய சிஷ்யர்களில் அய்யா பாகவதர், சுப்பராம பாகவதர், தஞ்சாவூர் ராமராவ், கணேசய்யர், வாலாஜாப்பேட்டை வெங்கட்டரமண பாகவதர், சோஜூர் சீதாராமய்யர், திருவொற்றியூர் வீணை குப்பையர், அம்ருதலிங்கம் பிள்ளை, மானம்புச்சாவடி வெங்கட சுப்பையர், உமையாள்புரம் சாமி பாகவதர், திருநெய்த்தானம் ராமய்யங்கார் முதலிய பிரபல வித்வான்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்.



இவர்களில் அநேகர் சிற்சில வருஷங்கள் மட்டும் அவரிடம் சிஷ்யர்களாய் இருந்தார்களேயன்றி எல்லோரும் ஏக காலத்தில் சிஷ்யர்களா யிருந்ததில்லை.

திருநெய்த்தானம் ராமய்யங்காரும், உமையாள்புரம் சாமி பாகவதரும், மேற்படியாரின் சகோதரரின் குமாரர்களாகிய கிருஷ்ண பாகவதர், சுந்தர பாகவதர் ஆகியோரும் ஆதியிலிருந்து இந்தத் தியாகப் பிரம்ம ஆராதனை உற்சவத்தில் மிகவும் ஈடுபட்டிருந்தார்கள்

இப்போதுள்ள அதிஷ்டான பிருந்தாவனம், உமையாள்புரம் சகோதரர்களின் முயற்சியால் கட்டப்பட்டது என்பது அதில் உள்ள சில சாஸனங்களால் தெரிகிறது. ஆனால் சமீப காலத்தில் பங்களூர் ஸ்ரீமதி நாகரத்தினம்மாள் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ தியாகப் பிரம்ம விக்கிரகம் அந்த அதிஷ்டானத்தை யொட்டி ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் மேற்படி சில சாஸனங்களைக் கொண்டு யாரால் கட்டப்பட்டதென்று கண்டு பிடித்துச் சொல்வது கொஞ்சம் சிரமமாகத்தா னிருக்கும். நிற்க.

ஆதிகாலத்தி லிருந்து ஒவ்வொரு வருஷமும் புஷ்ய பகுள பஞ்சமி தினத்தன்று, சத்குருவின் ஆராதனை உற்சவம் சாதாரண முறையில் ஒருநாள் தான் நடந்து வந்தது. காலையில் பாகவதர்களும், சங்கீத வித்வான்களும், வேத பாராயண கோஷ்டிகள் புடைசூழ, மங்கள வாத்தியங்கள் முழங்க, பக்தி சிரத்தையுடன் பூர்ண கும்பத்தைச் சுமந்து நாம ஸங்கீர்த்தன பஜனைகளைச் செய்து கொண்டு சத்குருவின் அதிஷ்டானம் போய்ச் சேருவார்கள். அங்கு அபிஷேக அலங்காரங்களுடன் விமரிசையாய்ப் பூஜை சேவைகளைச் செய்து சத்குருவின் கீர்த்தனைகளை ஒவ்வொருவராகப் பக்தியுடன் பாடுவார்கள்.

பிறகு தீபாராதனை நடந்து முடிந்ததும் அங்கிருந்து பஜனை பாடிக்கொண்டு உஞ்ச விருத்தி செய்து அந்த அரிசியையே ஆராதனைக்கு உபயோகிப்பார்கள். விதிப்படி ஆராதனை நடந்தபின் பிறகு பக்த கோடிகளுக்குச் சாப்பாடு நடைபெறும். அந்திரவு வித்

வான்கள் சற்குருவின் கீர்த்தனைகளைப் பக்தியுடன் பாடிக் கச்சேரி, கதைகள் செய்து மகிழ்வார்கள்.

இப்படியாகச் சுமார் அறுபது வருஷ காலம் நடந்து வந்திருக்கிறது. திருவெய்த்தானம் ராமய்யங்காரவர்களுக்குப் பிறகு அவருடைய சிஷ்யர்களான திருவெய்த்தானம் நரசிம்ம பாகவதரும் அவர் சகோதரர் பஞ்சு பாகவதரும் ஆராதனை உற்சவத்தில் சிரத்தையுடன் ஈடுபட்டார்கள். காலட்சேபக் கலையில் ஒரு புரட்சியை உண்டாக்கிப் புது வழியை ஏற்படுத்தியவர் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர். அவருக்குப் பிற்காலத்தில் காலட்சேபத் துறையில் சில ரஸமான நெருக்கடிகள் ஏற்பட்டன. சென்னையில் முதன் முதலாக 1895-ம் வருஷத்தில் 'பக்தி மார்க்கப் பிரசங்க சபா' என்று ஒரு சபை ஏற்பட்டது. அந்தச் சபை தஞ்சாவூர் கிருஷ்ணபாகவதரையும் அவருக்கு அவகாசமில்லாத சமயங்களில் வேறு சில பாகவதர்களையும் அழைத்துக் காலட்சேபம் நடத்தி வந்தது. அப்பொழுதெல்லாம் சபாக்கள் சங்கீத வித்வான்களை அவ்வளவாக ஆதரிப்பதில்லை. மாதந்தோறும் கதைகளைத் தவறாமல் ஏற்படுத்துவார்கள். 'கோகுலாஷ்டமி' 'ராம நவமி' போன்ற சமயங்களில் மட்டும் சில சங்கீதக் கச்சேரிகளையும் சேர்த்துக் கொள்வார்கள்.



தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதர்

திருவல்லிக்கேணி 'பார்த்தசாரதி ஸ்வாமி சபை' 'சாரதா சங்கீத சபை' போன்ற சபைகளிலும் அந்த நாளில் சங்கீதக் கச்சேரிகளுக்கு அதிக இடம் கொடுக்கப்படவில்லை. மகா ஜனங்களுக்கும் கதா காலட்சேபங்களைக் கேட்பதில் உள்ள ஆவல் சங்கீதக் கச்சேரிகளில் அப்பொழுது கிடையாது. அதனால் சங்கீதத் துறையில் ஈடுபட்டுக் கச்சேரிகள் செய்து வந்த சில வித்வான்களுக்கு, கதைகள் மூலம் அதிக வருமான மடையலாம் என்ற மோகம் காலட்சேபத்தில் ஏற்பட்டு விட்டது.

இதே போல் சம்ஸ்கிருத பாஷையில் நல்ல பாண்டித்தியமும் சொல் வன்மையுமுள்ள சில உபந்யாஸகர்களும் நல்ல கோஷ்டியை அமைத்துக் கதா காலட்சேபத்தில் ஈடுபட்டனர்.

ஆங்கிலம் பயின்ற சொல் வன்மையுடன் விளங்கிய சிலர் தங்களுக்கிருந்த உபாயமான சங்கீத ஞானத்தை ஆதாரமாகக் கொண்டு தக்க பின் பாட்டுக்காரர்களை அமைத்துக் கொண்டு கதை செய்ய முன்வந்தனர். ஆனால் உண்மையான யோக்யதாம்சமும் ஜீவகளையும் உள்ள கதைகள்தான் கடைசிவரை நீடித்து நடந்து வந்தன. இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பொதுவாகச் சங்கீத வித்வான்களைவிடக் காலட்சேபத் துறையில் நல்ல யோக்யதையுள்ள பாகவதர்களுக்கு மகா ஜனங்களிடையே அதிக செல்வாக்கு இருந்தது.

நரசிம்ம பாகவதரும் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரும் சம காலத்தவர்கள். இவர்களுடைய கதைகள் பழைய சம்பிரதாயத்தை ஒட்டியவை. நரசிம்ம பாகவதர் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனைகளைச் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு கதைகளில் ஏராளமாய்ப் பாடுவார். தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதருக்குப்பின் இவருடைய கதைகளுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. சென்னையில் நரசிம்ம பாகவதருடைய கதைகள் அடிக்கடி நடந்து வந்தன. இவர் ஹாஸ்யமாகப் பேசுவதில் வல்லவர். இதுபற்றி ஒரு ரஸமான சம்பவம் சொல்லுகிறேன்.

எல்லா பாகவதர்களும் சங்கீத வித்வான்களும் சென்னையில் சுவாமிநாத சாஸ்திரிகள் ஹோட்டலில்தான் தங்குவது வழக்கம். ஒரு சமயம் பண்டிட் லக்ஷ்மணாச்சாரியார், குலமங்கலம் வைத்தியநாத பாகவதர், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், மாங்குடி சிதம்பர பாகவதர் ஆகியோர் அந்த ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். காலட்சேபக் கலையில் தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதருக்குப் பிறகு அந்த ஸ்தானத்துக்கு நீ, நான், என்று அவர்கள் போட்டி யிட்ட காலம் அது. 1903-ம் வருஷத்தில் 'தஞ்சாவூர் கிருஷ்ண



பஞ்சு பாகவதர்

பாகவதர் காலமானார்' என்ற துக்ககரமான செய்தியை அங்கு கூடியிருந்த எல்லோரும் பத்திரிகைகள் மூலம் அறிந்தவுடன் அன்னாரின் மறைவால் சங்கீத உலகத்துக்கு ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத நஷ்டத்தைப் பற்றி மிகவும் வருத்தப்பட்டார்கள்.

இந்த அமளி கொஞ்சம் அடங்கியவுடன் குலமங்கலம் வைத்தியநாத பாகவதர் "கிருஷ்ண பாகவதரோ காலமாகி விட்டார்! அவருக்குப் பிறகு இனி நான் தான்!" என்று மார்தட்டிச் சொன்னார். இதைக் கேட்ட நரசிம்ம பாகவதர் ஹாஸ்ய ரஸம் ததும்ப "அடே வைத்தி! அப்படிச் சொல்லாதேடா! வயதானவனாய் நான் ஒருவன் இருக்கையில் நீ என்டா அவசரப்படுகிறாய்? நான் போன பிறகு நீ போகலாம்!" என்றார். இதைக் கேட்ட எல்லோரும், வைத்தியநாத பாகவதர் உட்பட, நரசிம்ம பாகவதரின் ஹாஸ்யத்தில் மூழ்கித் திளைத்தார்கள். குலமங்கலம் வைத்தியநாத பாகவதர் பிறகு நெடுங்காலம் காலட்சேபக் கலையின் முன்னணியில் நின்று புகழ்பெற்று விளங்கினார்.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் நரசிம்ம பாகவதர் தமக்கு ஏற்பட்டிருக்கும் செல்வாக்கை ஸ்ரீ சத்குருவின் கைங்கர்ய விஷயத்தில் உபயோகிக்க எண்ணினார். ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் ஆராதனை உற்சவத்தை இன்னும் சிறப்பான முறையில் நடத்த வேண்டும் என்பதைச் சென்னையில் பிரகடனஞ் செய்தார். சங்கீத உலகமும், பக்தர்களும், ஆஸ்திகர்களும், சூரிய சந்திரர்கள் உள்ள வரையில் மறக்க முடியாதபடி சேவையைச் செய்த ஸ்ரீ தியாகப் பிரம்மம் சமாதியடைந்த புண்ணிய க்ஷேத்திரத்தில் ஆண்டுதோறும் ஆராதனை உற்சவம் நடத்த வேண்டியது நமது கடமை என்பதை அனைவரும் உணரும்படி நரசிம்ம பாகவதர் உணர்ச்சியுடன் எடுத்துச் சொன்னார்.

தமிழ்நாட்டில் இருப்பது போல் சங்கீதத்தில் பற்று உள்ளவர்கள் இந்தியாவில் வேறு எங்குமே கிடையாதாகையால் பொது மக்களும் இதைப் பெரிய மனதுடன் வரவேற்றார்கள். நரசிம்ம பாகவதரவர்களுக்கும் எதிர்பார்த்த அளவுக்கு மேல் பொருளுதவி கிடைத்தது. அநேக பாகவதர்களையும் சங்கீத வித்வான்களையும் சத்குருவின் உத்ஸவ விஷயமாய் ஈடுபடச் செய்து அவர்கள் எல்லோருக்கும் விசேஷமான சிரத்தையை உண்டாக்கினார். இன்றைக்குத் திருவையாற்றில் மிகவும் பிரபலமாய் நடந்து வரும் ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் ஆராதனை உத்ஸவத்துக்கு அந்தக் காலத்திலேயே விதை விதைத்தவர் நரசிம்ம பாகவதரவர்கள்தான். ஒரு நாள் உத்ஸவத்தைப் புஷ்ய பகுள பிரதமையில் ஆரம்பித்துப் பஞ்சமி முடிய ஐந்து நாள் உத்ஸவமாய் நடத்துவது என்று நிர்மாணித்து விட்டபடியால் இதில் அநேகர் ஈடுபட்டனர்.

சென்னை 'பக்திமார்க்கப் பிரசங்க சபை'யின் காரியதரிசியாயிருந்து வந்த முனிசாமி நாயுடு என்பவர் வேண்டிய உதவிகளைச் செய்தார். வித்துவான்களில் உமையாள்புரம் ஸ்வாமிநாதய்யர், உமையாள்புரம் பஞ்சாபகேசய்யர், பழமார்நேரி ஸ்வாமிநாதய்யர், சேலம் நடேசய்யர், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், பிடில் கோவிந்தசாமிப் பிள்ளை, மிருதங்கம் அழகநம்பியாப் பிள்ளை, தஞ்சாவூர் நாகராஜ பாகவதர் ஆகியோரை முக்கியமாய்க் குறிப்பிடலாம்:

ஒரு நாள் மட்டும் சாதாரண முறையில் நடத்தப்பட்டு வந்த உற்சவம் நரசிம்ம பாகவதரவர்களின் பெரு முயற்சியால் ஐந்து நாட்கள் நடக்கப்போவதையும் அதில் பிரபலமான பாகவதர்களும் சங்கீத வித்வான்களும் பங்கெடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்ற விவரங்களையும் அறிந்த ரஸிகர்களும் மகா ஜனங்களும் பக்கத்து ஊர்களிலிருந்து வந்து திருவையாற்றில் ஏராளமாய்க் கூடினர். ஐந்து நாட்களிலும் இரண்டு வேளை சாப்பாடும் கர்ணாம்ருதமான கச்சேரிகளும் சத் கதா காலட்சேபங்களும் கிடைப்பதென்றால் யார்தான் வேண்டாம் என்று சொல்லுவார்கள்? ரஸிகர்கள் ஆயிரக்கணக்கில் கூடி உத்ஸவ நிகழ்ச்சிகளை அனுபவித்தார்கள்.

நரஸிம்ம பாகவதர் தம் தொழிலை உத்தேசித்துக் கும்பகோணத்தில் இருக்க வேண்டிய அவசியமிருந்ததால் அவருடைய தம்பி பஞ்சு பாகவதர் திருநெய்த்தானத்திலேயே இருந்தார். நரசிம்ம பாகவதர் ரூபாய்களாக வசூல் செய்வார். பஞ்சு பாகவதர் திருவையாற்றைச் சுற்றியுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் போய் பக்தி சிரத்தையுள்ள தர்மவான்களான மிராசுதார்களிடமும் மகா ஜனங்களிடமும் அரிசி பருப்பு முதலிய சாமான்களும் காய்கறி பதார்த்தங்களுமாக வசூல் செய்வார். இப்படியாக ஐந்து நாட்கள் நடத்துவதாக ஆரம்பித்த உற்சவம், இரண்டு மூன்று வருஷங்களுக்குள் பெரிய திருவிழாவாகவே நடக்க ஆரம்பித்து விட்டது. (தொடரும்)

சென்னையில் கம்பர்

பகீரதன்

ஒரு நாள் மாலை ஆறு மணி இருக்கும். திடீரென்று பூமி அதிர்ந்தது. சென்னையில் ஏதாவது பூகம்பமோ என்று நடுங்கி விட்டேன். எங்கிருந்து அதிர்ச்சி வருகிறது என்று சத்தம் வரும் திக்கை நோக்கிச் சென்றேன். கடைசியில் இடத்தைக் கண்டு பிடித்தேன். அரண்மனைக்காரன் தெருவில் அதிர்ச்சி கிளம்பிற்று என்று அறிந்தேன். அதன் மூலஸ்தானம் 'கோகலே ஹால்' என்னும் புகழ்பெற்ற மண்டபம் என்றும் கண்டு கொண்டேன்.

கோகலே மண்டபத்தில் கவிச் சக்கரவர்த்தி கம்பர் திருநாள் கொண்டாட்டம் பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் அவர்களின் தலைமையில் நடந்து கொண்டிருந்தது. மேடையில் பல பிரமுகர்களும் தமிழன்பர்களும் வீற்றிருந்தனர். அவர்களுக்கெதிரே 'மைக்' என்னும் ஒலி பெருக்கிக் கருவிகள் நின்று கொண்டிருந்தன.

உலக மகா கவியாகிய கம்பரைப் பற்றி ஒரு தமிழன்பர் பேசிக் கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அந்தத் திரளான கூட்டத்தில் "கம்பர் யார்?" என்று ஒரு குரல் கேட்டது.

அங்கிருந்தவர்கள் "கம்பர் யார்?" என்று சுற்று முற்றும் பார்த்தனர்: ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்; மண்டபத்தை அண்ணாந்து பார்த்தனர்.

கம்பரைக் காணவில்லை.

மீண்டும் "கம்பர் யார்? அவர் எங்கே?" என்று சில குரல்கள் கிளம்பின.

ஆயிரம் வருஷங்களுக்கு முன் தமிழகம் மகோன்னத நிலையில் இருந்த காலத்தில் வாழ்ந்த கம்பரைக் கோகலே மண்டபத்தில் எப்படிக் காண முடியும்? ஆகவே கம்பரைக் காண வந்த சிலருக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

விடுவிடு என்று மேடையை நோக்கி விரைந்து வந்தனர். மேடையின்மேல் நின்று கொண்டிருந்த ஒலிபெருக்கிக் கம்பங்களைக் கம்பர் என்று நினைத்துக் கொண்டு விட்டார்களோ என்னமோ, "நீர்தான் கம்பரோ?" என்று கேட்டு அந்த ஒலிபெருக்கிக் கம்பங்களைத் தூக்கி எறிந்தனர். ஒலிபெருக்கிகள் உடைந்து நொறுங்கின.

சிலர் நாற்காலிகளைப் போட்டு உடைத்தனர். வேறு சிலர் சோடா பாட்டில்களை வீசி எறிந்து உடைத்தனர். கூட்டத்தில் ஏக தடபுடலாகிவிட்டது.

உலக மகா காவியமாகிய இராமாயணத்தைப் பாடி தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தமிழர்களுக்கும் தனிப் பெருமையை நிலை நாட்டிய கவிச் சக்கரவர்த்தி கம்பருடைய திருநாளிலா அட்டகாசம்?

கண்ணைப் பிசைந்து கொண்டேன். ஒரு வேளை கனவோ என்னமோ என்று என்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டேன். கண்ணெதிரில் நடப்பதெல்லாம் உண்மை தான். கம்பர் விழாவில் கலாட்டாதான்.

அப்படி ஒரு காலம் இருந்தது. இன்றையத் தமிழ் நாடு அப்படி இல்லை என்பதைச் சென்ற 11, 12, 13 தேதிகளில் சக்கரவர்த்தி ராஜாஜி மண்டபத்தில் கவிச் சக்கரவர்த்தியின் ஐந்தாவது மகாநாடு நிரூபித்துக் காட்டி விட்டது.

திருவிழா என்ன, சாதாரணத் திருவிழாவா? விழாவில் கலந்து கொண்டவர்கள் எல்லாம் பெருமையடையும்படி இருந்தது. தமிழ்க் குலத்தின் பெருமைக்கும் பண்புக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிற்று. பக்திக்கும் அன்புக்கும் சிகரமாக விளங்கி மூன்று தினங்களும் கோலாகலமாக பெரிய வைபவமாகவே திருவிழா சிறப்புடன் நடந்தேறியது.

இவ்வளவு உயர்வாக நடந்த திருவிழாவுக்குச் சிறப்பு அளித்த அம்சம் முதல்நாள் 11-ம் தேதியன்று நடந்த கம்பர் கலைக் கண்காட்சி திறப்புவிழா வைபவமாகும். இந்த வைபவத்துக்கு வந்திருந்த மகாஜனக்

களை எல்லாம் கம்பர் கழகத் தலைவர் "கல்கி" ஆசிரியர் வரவேற்றார்.

"உலகத்தில் எத்தனையோ சாம்ராஜ்யங்கள் தோன்றி மறைந்து விட்டன. கிரேக்க, ரோம, மொகலாய சாம்ராஜ்யங்கள் மறைந்து விட்டன. சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் கூட முடிவடைந்து விட்டது. ஆனால் கவிச்சக்கரவர்த்தியான கம்பரின் மகா சாம்ராஜ்யத்திற்கு அழிவே கிடையாது. அந்த சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரி ரஸிகமணி டி. கே. ஸி. தலைமையில், நமது மாகாணப் பிரதம மந்திரி கனம் குமாரசாமி ராஜா கலைக் காட்சியைத் திறந்து வைப்பது மிகப் பொருத்தமல்லவா?" என்று "கல்கி" ஆசிரியர் கேட்டதைச் சபையோர் கரகோஷத்துடன் ஆமோதித்தனர்.

மண்டபத்தின் மேல் மச்சுத் தாழ்வாரங்களில் பூட்டாமல் வைத்திருந்த கலைக் கண் காட்சியைத் திறந்து வைத்துப் பிரதமர் ராஜா பேசினார். ஸ்ரீ குமாரசாமி ராஜா பாரதியார் சங்கத்தின் தலைவர். சிறந்த தமிழன்பர். கம்பர் கலைக் கண் காட்சியைத் திறந்து வைப்பதில் தாம் எல்லையில்லாத இன்பம் அடைவதாகக் கூறினார். மில்டனையும், ஷேக்ஸ்பியரையும், வால்மீகியையும், காளிதாஸனையும் விட உயர்ந்தவர் கம்பர் என்று கூறிப் பெருமைப் பட்டார்.

கம்பன் நூல்களையெல்லாம் சேகரித்து வைத்துத் தமிழ்நாட்டை இன்பக் களஞ்சியமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். ஆண்டுதோறும் இது போன்று கம்பர் விழாக்களைத் தமிழ்நாடு பூராவும் கொண்டாட வேண்டுமென்று சொன்னார்.

இந்த வைபவத்துக்குத் தலைமை வகித்த ரஸிகமணி டி. கே. ஸி., கம்பருடன் அங்கிருந்தவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டு போய், நீர்வளமும் நிலவளமும் உள்ள கோசல நாட்டைக் காட்டினார். அந்த நாட்டில் ஓடும் அழகிய நதிக்கரையில் ஓங்கி வளர்ந்திருந்த கமுகு மரங்கள் புஷ்பங்களைச் சொரிந்து கொண்டிருந்தன. தண்ணீர்ப் பக்கம் சாய்ந்திருந்த பூக்களில் சொட்டும் தேனைப் பருக வாளை மீன்கள் தாவின. அந்த நாட்டில் உள்ள மக்கள் எல்லாம் தாராளத்துக்கும் தயாள குணத்துக்கும் புகழ் பெற்றவர்களாக இருந்தார்கள். இந்தக் காட்சியை அப்படியே நேரில் பார்ப்பது போல இருந்தது ரஸிகமணி அவர்கள் சொல்லும்போது. இந்தப் பூர்வ பீடிகையுடன் "ஆனயாவன அமைந்தன" என்ற கம்பர் பாடலை பாவத்துடன் பாடி ராமனுடைய வீரமும் தயாளமும் இத்தகையதென்று எடுத்துக் காட்டினார்.

கம்பர் கழகக் காரியதரிசி "சிந்தனை" ஆசிரியர் ஸ்ரீ சீனிவாச ராகவன் மகாகவி கம்பரின் பெருமையை எடுத்துக் கூறி அன்றைய விழாவுக்கு வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் நன்றி கூறினார்.



கம்பர் விழா சிறப்பாக நடந்ததற்கு அயராது உழைத்த கம்பர் கழக காரியதரிசி காரைக்குடி ஸ்ரீ சா. கணேசன் களிப்புறுகிறார்.

* * *

கம்பர் கலைக் கண் காட்சிக்குப் பிறகு இரண்டு தினங்கள் மகாநாடு நடந்தது. மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களை வரவேற்புக் கமிட்டித் தலைவர் மேயர் ராமசாமி நாயுடு வரவேற்றுப் பேசி கம்பரின் சிறப்பை எடுத்துக் கூறினார். பிறகு கல்வி மந்திரி கனம் மாதவமேனன் மகாநாட்டைத் திறந்து வைத்து, தமிழில் பேசினார்.

ஸ்ரீ மாதவ மேனன் அவர்களுக்கு கவிதைகளிலும் தமிழ் இலக்கி



கனம் பிரதமர் குமாரசாமி ராஜா கம்பர் கலைக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகிறார். மேடை மீது கல்வி மந்திரி மாதவ மேனன், நீதிபதி எ. எஸ். பி. ஐயர், நீதிபதி பஷீர் அஹமத், நீதிபதி ராஜகோபாலன், ரஸிகமணி டி. கே. ஸி., பாதிரியார் அடைக்கலம், டாக்டர் அழகப்ப செட்டியார், சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் முதலியவர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

யங்களிலும் எவ்வளவு ஆர்வம் இருக்கிறது என்பது எட்டயபுரம் பாரதியார் திருவிழாவிலேயே தெரிந்தது. இருந்தாலும் இந்தத் திருவிழாவில் இன்னும் சிறப்பாக விளங்கிற்று. "ராஜாஜி அவர்கள், கம்பருக்கு ஹனுமாராக டி. கே. ஸி. இருப்பதாகச் சொன்னார்கள். நானோ டி. கே. ஸி.க்கு ஹனுமார்" என்று சொன்னவுடன் சபையோர் மண்டபம் அதிரும்படி ஆர்ப்பரித்து மகிழ்ந்தனர். "இந்த விழாவை ஆரம்பிக்க ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் வர முடியாதது கஷ்டந்தான். ஆனால் அது எனக்கு அதிர்ஷ்டம்" என்று தம் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டார். "கம்பன் கவிதையில் சுகம், துக்கம், ஆனந்தம், சௌந்தர்யம் போன்ற எல்லா உணர்ச்சிகளையும் காணலாம். உலகத்தையே பிடித்துத் தன்னுடைய கவிதைக்குள் வைத்திருக்கிறார் கம்பர்" என்று கூறினார். கம்ப ராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று சிலர் முயற்சி செய்ததைச் சுட்டிக் காட்டி, "கம்பர் புத்தகத்தைக் கொளுத்தலாம். ஆனால் எல்லாருடைய இதயங்களிலும் உள்ள கம்பனை எரித்துவிட முடியுமா?" என்று கேட்டார். "புகழ்க்-கம்பன் பிறந்த தமிழ் நாடு" என்ற கவியரசர் பாரதியாரின் வாக்கை எடுத்துக் காட்டி, தமிழ் நாட்டுக்கு இந்த பெருமையே போதும் என்றார்.

இந்த ஆண்டு மகாநாட்டுக்கு திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரைத் தலைமை வகிக்கும்படி "கலைமகள்" ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் கேட்டுக் கொள்ள ஸ்ரீ டி. எம். சின்னய்யா பிள்ளையும் ஸ்ரீ பெரியசாமி தூரனும் ஆமோதிக்க ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை மகாநாட்டுக்குத் தலைமை தாங்கினார்.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரனாரின் தலைமைச் சொற்பொழிவில் அவருடைய இலக்கிய ஞானமும் பன்மொழிப் புலமையும் நன்கு வெளியாயின. கம்ப ராமாயணத்தில் ஆரிய-திராவிடப் பிரச்னைகளைப் புகுத்துபவரைப் பிடித்துக் கொண்டு வந்து வைத்து, "இராமன் ஆரியன் என்றால் அவன் நிறம் கறுப்பாக இருப்பானேன்?" என்று கேட்டார். "இராவண காவியம் என்ற ஒரு நூலைப்படித்தேன். அதில்வரும் இராவணன் கம்பர் சொல்லும் இராவணனுடைய கால் தூசிக்குக் கூட ஒப்பாக மாட்டான்" என்று சொன்னார். ஞான சாஸ்திரத்தில் கம்ப ராமாயணத்தை மிஞ்சக் கூடிய நூல் உலகத்திலேயே வேறு ஒன்றும் கிடையாது என்று எடுத்துக் காட்டினார்.

தலைவரின் பேச்சுக்குப் பிறகு பல இனிய சொற்பொழிவுகள் இரண்டு நாளும் நடந்தன. 'கம்பன் வகுத்த வாழ்க்கை முறை' என்று ஸ்ரீ எம். எம். இஸ்மாயில் ஒரு அவசரமான சொற்பொழிவு நிகழ்த்தினார். ஸ்ரீமதி இந்திராணி அம்மையார் கம்பருடைய நாடகப் பண்பையும் கவிதைச் சிறப்பையும் நன்கு எடுத்துப் பேசினார்.

மறுநாள் 'கம்பனும் முன்வந்த புலவரும்' என்பதைப் பற்றி ஸ்ரீ கே. ராஜகோபாலாச்சாரியாரின் ஆராய்ச்சி நிறைந்த சொற்பொழிவு நிகழ்ந்தது. ஸ்ரீ கே. வி. ஜெகந்நாதன் கம்பனையும் வால்மீகியையும் சேர்த்துப் படித்து அநுபவிக்க வேண்டும் என்று சொன்னார்.

'சொல்லின் செல்வன்' என்று அநுமனைப் பற்றிப் பேசிய ஸ்ரீரங்கம் ஸ்ரீ சடகோபாச்சாரியாரின் சொற்பொழிவில் அவருடைய கம்பராமாயணப் பற்றும் பரந்த ஞானமும் முதிர்ந்த அநுபவமும் நன்கு வெளியாயின. அவருடைய பேச்சில் நகைச் சுவை ததும்பிற்று. தற்காலக் கல்வி முறையில் உள்ள குறைகளை எடுத்துச் சொல்லிவிட்டு ஞானவானாகிய அநுமான் சூரிய பகவானிடம் ஒரு நாள்தான் படித்தான் என்று கூறியபோது 'சொல்லின் செல்வன்' என்று ஸ்ரீ சடகோபாச்சாரியாரை நாம் பாராட்டவேண்டியிருந்தது.

இலங்காபுரியும், அங்குள்ள மாட மாளிகையும், கூட கோபுரங்களும், அசோக வனமும் அந்த வனத்தில் அழகே உருவமான சீதாப் பிராட்டியாரின் சோக உருவமும் அப்படியே கண் முன்னே காட்சி தருவது போல இருந்தது. ஸ்ரீ முத்துசிவன் 'ஜானகியின் தவம்' என்ற பொருள் பற்றிப் பேசும் போது. கம்பர் கண்ட அசோகவனத்தையும் கம்பர் ராமனுக்குப் பட்டாபிஷேகம் சூட்டும் வைபவத்தையும் கண்டு களிக்கும்படி காட்டி ஒரு அருமையான சொற்பொழிவாற்றினார் ஸ்ரீ ரா. பி. சேதுப் பிள்ளை.


தஞ்சை ஜில்லாவில் உள்ள கம்பர் பிறந்த தேரழுந்தூரில் அடுத்த வருஷக் கம்பர் மகாநாட்டை நடத்தத் தேரழுந்தூர் கலா கழகத்தின் சார்பாக ஸ்ரீ சோமசுந்தரம் அழைத்தார்.

கம்பர் பிறந்த தேரழுந்தூரிலும் இதர முக்கிய இடங்களிலும் கம்பருக்கு ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் கம்பராமாயணப் பதிப்புகள் நல்ல முறையில் வெளி வரவேண்டும் என்றும் கம்பர் நடமாடிய சென்னை நகரம் தமிழ் நாட்டுடன் இருக்க வேண்டும் என்றும் மகாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேறின.

தருமபுரம் ஆதீனத்தின் பிரதிநிதியாக வந்திருந்த ஸ்ரீ தண்டபாணி தேசிகர், ஸ்ரீ சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், ஸ்ரீ சா. கணேசன், ஸ்ரீ திரிலோக சீதாராம், ஸ்ரீ நாரண துரைக்கண்ணன், ஸ்ரீ சின்ன அண்ணாமலை முதலியோர் தீர்மானங்களின் மீது சொற்பொழிவு ஆற்றினார்கள். கம்பர் கழகத் தலைவர் "கல்கி" ஆசிரியர் நன்றி கூற மூன்று தினங்கள் பிரமாதமாக நடந்து வந்த வைபவம் இனிது முடிந்தது.

திருவிழாவின் சிறப்புக்கு முக்கிய காரணமான நிகழ்ச்சிகள் மகாநாட்டில் நடந்த சங்கீதக் கச்சேரிகளாகும். தமிழிசை இயக்கத்துக்கும் தமிழ் நாட்டில் நடக்கும் கலை விழாக்களுக்கும் பிரதான பாத்திரமாயிருந்து வரும் ஸ்ரீ எம். எம். தண்டபாணி தேசிகரின் கச்சேரி முதல் நாள் திருவிழாவில் நடந்தது. சாஹித்யமும் சங்கீதமும் பொருத்தமாய்க் கேட்டவர்களின் மனதைக் கவரும் முறையில் பாடினார். கம்பரைப் பற்றி வாசஸ்பதி ராகத்தில் பாடிய கீர்த்தனம் பிரமாதம். அஷ்டாவதானம் கவி ராமலிங்கம் பிள்ளை கம்பனைப்பற்றி பாடியுள்ள 'கரையறியாக் காட்டாற்று வெள்ளம் போல்' என்ற விருத்தத்தை ராகமாலிகையாகப் பாடி ஜனங்களைப் பரவசப்படுத்தினார். ஸ்ரீ தேசிகரின் கச்சேரிக்

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் கம்பர் திருநாளின் இசை விருந்தளித்து மகிழ்வித்தார்.



குப் பக்க வாத்தியமாக பிடில் ஸ்ரீ கோவிந்தசாமி நாயக்கரும் மிருதங்கம் ஸ்ரீ எஸ். வி. எஸ். நாராயணனும் பாட்டுக்கு இணைந்து கொடுத்து சுகமாக வாசித்துச் சோபிக்கச் செய்தனர்.

மறுநாள் மகாநாட்டு ஆரம்பத்தில் தேரழுந்தூர் ஸ்ரீ சீனிவாசாச்சாரியார் பாடினார். 'உலகம் யாவையும்' என்ற கம்பரின் கடவுள் வணக்கப் பாடலுடன் கச்சேரியை ஆரம்பித்து முழுக்க முழுக்கக் கம்பன் பாடலாகவே பொழிந்து தள்ளினார். 'வேதங்கள் அறைகின்ற' 'வானின்று இழிந்து' என்னும் பாடல்கள் மிக நன்றாயிருந்தன. பக்க வாத்தியம் வாசித்த கும்பகோணம் ஸ்ரீ டி. பஞ்சாபிகேசன் பிடிலும் ஸ்ரீ டி. ராமுவின் மிருதங்கமும் அருமையாக அமைந்தன.

மகாநாட்டின் முடிவில் நடந்த கனக்கால ஸ்ரீ ராமநாராயணன் 'கஞ்சினை மட்டற வைத்த' 'அறந்தலையாவ தல்லால்' முதலிய கம்பன் பாடல்களைச் சங்கீதச் சிறப்புடன் பாடிச் சபையோரை மகிழ்வித்தார். பக்க வாத்தியம் வாசித்த ஸ்ரீ பாலகிருஷ்ண ஐயர் பிடிலும் ஸ்ரீ கே. சஞ்சீவியின் மிருதங்கமும் ஸ்ரீ கே. எஸ். ஹரிஹரனின் கஞ்சிராவும் கச்சேரியைச் சிறப்பித்தன.

13ல் மகாநாட்டில் ஸ்ரீ வி. வி. சடகோபனின் கச்சேரி நடந்தது. ஸ்ரீ சடகோபன் மிக்க சிரமம் எடுத்துக் கம்பர் பாடல்களுக்குப் பொருத்தமான மெட்டுகள் அமைத்துப் பாடி சபையோரை அனுபவிக்கும்படி செய்தார். 'பொன்னின் ஒளி பூவின் வெறி' என்ற பாடலை மாஞ்சி ராகத்திலும் நவரோஸ் ராகத்திலும் பாடியபோது சீதை கல்யாண மண்டபத்துக்கு வரும் காட்சி கண்முன் தோன்றியது. 'ஒதியம் ஒசக்கக் கண்ட' என்ற பாடல் கச்சேரியில் சிகரமாக விளங்கியது. கச்சேரிக்குப் பக்க வாத்தியம் வாசித்த ஸ்ரீ சேதுராமய்யாவின் பிடிலும் ஸ்ரீ கிருஷ்ண ஐயங்காரின் மிருதங்கமும் வெகு சுகம்.




தேரழுந்தூர் ஸ்ரீ சீனிவாசாச்சாரியார்

இம்முறை கம்பர் விழா நடத்துவதற்குப் பல தடங்கல்கள் ஏற்பட்டன. அவற்றை வெற்றி கொண்டு கம்பர் விழாவைச் சிறப்பாக நடத்திய பெருமை கம்பர் கழகக் காரியதரிசிகளான ஸ்ரீ அ. சீனிவாசராகவன், ஸ்ரீ க. சோமசுந்தரம் இவர்களைச் சேரும். காரைக்குடியிலிருந்து கம்பர் விழாவுக்காகவே வந்து தொண்டாற்றிய ஸ்ரீ சா. கணேசன் அவர்களுக்கும் கம்பர் விழாக் கச்சேரிகளுக்குப் பொறுப்பு வகித்து நடத்திக் கொடுத்த "சுதேச மித்திரன்" ஸ்ரீ பாஷ்யத்துக்கும் தமிழன்பர்களின் சார்பாக நன்றி தெரிவித்து வாழ்த்துகிறேன்.

கம்பன் புகழ் வாழ்க! கன்னித் தமிழ் வாழ்க!!

அட்டைப்பட விளக்கம்

சென்ற மகா யுத்தம் நடந்த காலத்தில் ஒரு கப்பல் ஆயிரம் பிரயாணிகளுடன் பர்மாவிலிருந்து சென்னைக்குச் செல்கிறது. நடுக் கடலில் ஜப்பானிய யுத்தக் கப்பல் ஒன்று சமீபத்தில் வருவதாகக் கம்பியில்லாத் தந்தி மூலம் செய்தி கிடைக்கிறது. கப்பல் நாயகன் கப்பலை வேறு திசைக்குத் திருப்பி விட்டுக் கொண்டுபோய் ஒரு அழகிய தீவை அடைகிறார். அந்தத் தீவைப் பார்ப்பதற்காகக் கப்பலில் இருந்த ஒரு சிலர் படகில் ஏறித் தீவின் கரையில் இறங்கி அங்கிருந்த குன்றின் மீது ஏறுகிறார்கள். அவர்களில் ஒருவர் அன்றிரவு தீவிலேயே கழிக்க எண்ணிப் பின் தங்கி விடுகிறார். சந்திரோதயம் ஆகிறது. தீவுக்கு உட்புறத்திலிருந்து ஆணும் பெண்ணுமாக இருவர் விசித்திரமான பழைய காலத்து உடை அணிந்து வருகிறார்கள். அவர்கள் யார்? எந்த தேசத்தவர்? அவர்களுடைய வரலாறு என்ன?



அடுத்த இதழில் ஆரம்பமாகும் "மோகினித் தீவு" என்னும் கதையைப் படித்துத் தெரிந்து கொள்ளவும்.

வட்ட மேஜை

★ **எச்சரிக்கை!**

எத்தனை நாளைக்குச் சேர்ந்தாலும்—இனி
   ஏமாறும் தமிழர் இல்லையடா!
அத்தக்க பிரிவு ஆனபோதும்—இங்கே
   அநியாயத்தை விரட்டி ஆர்த்திடுவோம்!

அடிமையாய்க் கிடந்திட்ட காலத்திலே—எங்கள்
   அகண்ட தமிழகத்தைப் பறிகொடுத்தோம்
விடிந்த காலத்தும் விட்டிடுவோமோ—நாங்கள்
   வீரம் இழந்திட்ட வீணர்களோ?

காலமும் சரிதமும் சொல்லுமடா—எங்கள்
   கன்னித் தமிழகப் பெரும்பரப்பை
ஓலமிட்டிடும் பொய்க் கோஷமிட்டே—எங்கள்
   உண்மைக் குரலை அடக்குகிறீர்!

செந்தமிழ் நாட்டு வடவெல்லையிலே—முன்பு
   சேர்ந்திருந்தது தமிழ் வேங்கடமே!
அந்தப் பகுதியையும் பறித்து—இன்று
   அநியாய வாதத்தை விரிக்கின்றீர்!

நாட்டைக் காத்திட நற்றமிழர்—எந்த
   நாளிலும் சோர்ந்த நிலையிலையே!
விட்டுக் கொடுக்க மறுத்திடுவோம்—வட
   வேங்கடம் வரையில் பதித்திடுவோம்.

சென்னையைக் கைப்பற்ற வந்துவிட்டீர்—அங்கே
   சீறி எழுந்திடும் தமிழினமே!
அன்னை முடியைக் கவர்வீர்—எங்கள்
   அறப்போர் மூளும் எச்சரிக்கை!

வடக்குப்புதுப்பாளையம்
12—11—49 ம. நடேசன்.

○●○

சர்க்கரைப் பஞ்சம் தீருமா?

கொஞ்ச காலமாக நம் நாட்டில் செழித்து வரும் உருத் தெரியாத 'கருப்பு மார்க்கெட்' என்னும் அரக்கன் பல வேறு துறைகளில் முன்னேறிக்கொண்டு வருகிறான். இது விஷயம் நமது சர்க்காருக்கும், நம் யாவருக்கும் தெரிந்ததுதான். இதை ஒழிக்கவும் சர்க்கார் பலவித மான பிரயத்தனம் செய்து வருகின்றனர்.

புதிது புதிதாக ஏற்பட்டு வரும் தடை உத்தரவுகளினாலோ அல்லது யாது காரணத்தி னாலோ தற்போது நம் நாட்டில் ஏற்பட்டிருக் கும் சர்க்கரைப் பஞ்சம் என்பது எல்லாருக் கும் உண்டாயிற்று என்பதை யாராலும் மறுக்க முடியவில்லை. வேறு காரணமாக பலருக்கு இவ் வருடம் அவ்வளவு ஆபத்தை விளைவித்துக்கொண்டிருக்க அவ்வளவு இல்லை என்று எங்களால் சொல்ல முடியவில்லை!

நாட்டில் சர்க்கரை என்று சொல்லப்படும் வெள்ளைப் பொடி (அந்நாளின் சக்கர் நாம். இதுக்கு சண்ணா) சர்க்கரை ஒன்று முந்நூறு இரண்டு அல்லது மூன்று அணாவுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. இன்றோ அவ்வளவு பஞ்சம் வந்ததுடன் இதன் விலை விஷம் போல ஏற ஆரம்பித்து விட்டது. வாரம் வாரம் இரண்டு அணாவுக்குத் தடையாமல் ஏறிக் கொண்டே போகிறது. அவ்வளவு சர்க்கரை கூடிய சீக்கிரம் தாராளமாகக் கிடைக்கும் என்ற தகவல்களைப் பத்திரிகைகளில் பார்த்துத் திருப்தி அடைய வேண்டியதுதானோ, என்னவோ? ஒரு வேளை வியாபாரிகள் சொன்னது போல் சர்க்கார் தடை உத்தரவை எடுத்து விட்டால் சர்க்கரை தாராளமாகக் கிடைக் குமோ என்னவோ! காப்பி, டீ போன்ற பானங்களுக்குத்தான் சர்க்கரை அதிகமாக வேண்டியதாக இருக்கிறது.

சர்க்கார் ஒன்று சர்க்கரை அதிகம் செலவழி யும் காப்பி முதலிய பானங்களுக்குத் தடை உத் தரவு போடவேண்டும். அல்லது இப்பஞ்சத்தை கூடிய சீக்கிரம் நிவர்த்தி செய்ய வேண்டும்.

திருச்சி
9—11—49 எம். என். சென்னப்பன்

○●○

பெண் கல்வி

பெண்கள் கல்லூரிப் படிப்பு படிப்பதனால் அவர்களுக்கு அன்றாட வாழ்க்கையில் எதுவும் பலன் உண்டா என்றால் இல்லை என்று சொல்லிவிடலாம். கல்லூரிப் படிப்பி னால் மெலிந்த உடலும், கண்ணாடி போடும் கண்களும், கூனல் முதுகும், எலிவால் போன்ற கூந்தலும்தான் மிஞ்சும்.

இந்தக் கல்லூரிப் பெண்களிடம் "ஆந்த நாகத் தகட்டில் கந்தகாமிலத்தை ஊற்றினால் என்ன நடக்கும்?" என்றோ, "இங்கிலாந்தில் எட்டாவது ஹென்றிக்கு எத்தனை மனைவி மார்கள்?" என்றோ கேட்டுப் பாருங்கள். 'பட்பட்'டென்று பதில் சொல்லுவார்கள். மில்டனையும், ஷேக்ஸ்பியரையும் அலசிக் குடித் திருப்பார்கள்! 'அண்டார்டிக்'கில் சஹாரா பாலைவனத்தை முதல் முதலாகத் தேடி இருப் பார்கள்! ஆனால் ஒரு குழந்தைக்கு ஜுரம் பிடித்தால் என்ன செய்வது என்று கேட்டால் "தெரியாது" என்று சொல்லி அதிலே பெருமை அடைவார்கள்!

படித்த பெண்களில் நூற்றுக்குத் தொண் ணூறு பேர் உடனே கல்யாணம் செய்து குடித்தனம் நடத்தப் போகிறவர்கள்தான். இவர்களுக்கு ஆரோக்கியம், உணவு முதலிய வைகளைப் பற்றிய அறிவு அத்தியாவசியம். இவைகளெல்லாம் கல்யாணமான பின் தன் னாலே வந்துவிடும் என்பது தவறு.

அறிவிலும், திடசரீரத்திலும் சிறந்த புதல்வர்களைப் பெற்று வளர்க்கப்போகிற பெண்கள் நலத்திலும் அறிவிலும் திடசரீரத் திலும் சிறந்தவர்களாக இருக்க வேண்டியது அவசியம்தானே? இந்த விஷயத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து பெண் கல்வியில் ஒரு மாறு தலைச் செய்ய ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்கட்டும் என்று நம்புகிறேன்.

மருதன்குடிச்சி
10—11—49 செல்வி ஜெயபாரதி

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ம் 'எச்சரிக்கை' என்ற கவிதை எழுதிய வடக்குப்புதுப்பாளையம் ஸ்ரீ ம. நடேசனுக்கு வழங்கப்பட்டது.

எப்படி முடியும்?

வயிற்றை வளர்ப்பதற்காகக் குடியானவன் கஷ்டப்பட்டு ரூ. 100-க்கு தினத்திற்கு 2 அணா விதம் வட்டிக்குக் கடன் வாங்கி அதிகச் செலவு செய்து உயிரையே பணயமாக வைத்து நிலத்தை உழுது பயிர் செய்கிறான். லாபம் சம்பாதிப்பதற்காக அல்ல. பிச்சை எடுத்தும் பயிர் செய்வதைக் கொள்ளை அடித்துக்கொண்டு போகிறார்கள், ரூபாய்க்கு 5 படி என்று. விற்கிறதோ, அரிசி படி 10 அணா. நடுவில் லாபம் கொள்ளை அடிப்பவர்கள் வேறு சிலர். கஷ்டப்பட்டவன் குடியானவன். பலனை அனுபவிப்பவன் பணக்காரன். வெறுக்கிறான் வேளாண்மையைக் குடியானவன்.

வாழ்க்கையே கசக்கிறது. காரணம்? காப்பியும் சீனி இல்லாமல் கசப்பதால். ரேஷன் அமுலுக்கு முன்னே வியாபாரிகள் 1 வீசை சர்க்கரையை ரூ. 1-6-0க்குமேல் விற்கவில்லை. கவனிக்கவேண்டிய விஷயம். கஷ்டம் இல்லாமல் கிடைத்தது வேண்டிய அளவு. வந்தது ஆபத்து சர்க்கார் தலையிட்ட பிறகு. காரணம்? வெள்ளை சீனியைக் கருப்பு மார்க்கெட்டில் ஒரு வீசை 3 ரூபாய் விதம் வாங்கவேண்டி இருப்பதால் வெறுப்பு ஏற்படுகிறது.

இப்படி எல்லாப் பொருளின்மேலும் ரேஷன் கொண்டு வந்து கள்ள மார்க்கெட்டை மறைமுகமாக உண்டாக்குகிறார்கள். கள்ள மார்க்கெட்டை எதிர் நடவடிக்கையால் ஒழிப்போம் என்கிறார்களே, முடியுமா? எப்படி முடியும்! இவர்களேதான் உண்டாக்குகிறார்களே!

திண்டிவனம்
4-11-49

எம். குபேரன்

○●○

சர்க்கரையும் கட்டுப்பாடும்

"மக்களின் மனம் நல்வழிக்குத் திரும்பும் வரை கட்டுப்பாட்டைத் தளர்த்த முடியாது" என்று ஒருவரி என் கண்ணில் பட்டது. அந்த வரிக்கு அர்த்தம், கட்டுப்பாட்டைத் தளர்த்தினால் கொள்ளை லாபம் அடிக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கும் ஆசை எண்ணக்காரர்களின் எண்ணம் ஈடேறி விடும் என்பதே. ஆனால் என் தாழ்மையான எண்ணம் மக்களை நல்வழிக்குத் திருப்ப அரசாங்கம் உடனடியாகக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டும். ஏனென்றால் ஒரு பொருளுக்கு அரசாங்கம் கட்டுப்பாட்டை வைத்து விட்டால் உடனே மக்களுக்கு ஒரு அனாவசியமான பீதியும் அந்தப் பொருளின் மேல் வந்து விடுகிறது. இதைக் கொள்ளை லாப முதலாளிகள் தெரிந்து கொண்டு அதிக விலை வைத்து விற்றாலும் மக்கள் அந்தப் பொருளை விரும்பி வாங்குவார்கள் என்ற திடநம்பிக்கையில் கள்ள மார்க்கெட் அரக்கனைத் தட்டி எழுப்புகிறார்கள். மக்களும் என்ன விலை வைத்தாலும் சரி. அந்தச் சாமான் பின்னர் கிடைக்குமோ கிடைக்காதோ என நினைத்துத் தம் தேவைக்கு அதிகமாக அப்பொருளை வாங்குகிறார்கள். இவ்விஷயம் சர்க்கார் சர்க்கரை மீது கொண்டு வந்திருக்கும் கட்டுப்பாட்டின் மூலம் அறிகிறோம்.

சரி, கட்டுப்பாட்டைத் தளர்த்தி விட்டால் கொள்ளை லாப முதலாளிகள் பகிரங்கமாக விலை ஏற்ற மார்க்கெட்டை உண்டு பண்ணலாம். ஆனால் அவர்களுடைய கொள்ளை லாப எண்ணம், கட்டுப்பாடு அமுலிலிருக்கும் போது வெற்றி பெற்றதுபோல் வெற்றி பெற முடியாது; வெற்றி பெற்றாலும் அது நிலைத்திருக்க முடியாது. ஏனெனில் மக்களுக்கு அந்தப் பொருள் எப்பொழுதும் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டதால் தங்கள் தேவைக்கு மேல் அதிகம் வாங்கிச் சேமித்து வைக்க மாட்டார்கள். ஆக, தேங்கிக் கிடக்கும் அந்தப் பொருள் வியாபாரமாக விலையைத் தளர்த்த வேண்டியது அவசியமாகிறது.

இந்த விவரம் எதற்காக என்றால் கட்டுப்பாடு என்பது சர்க்கரை முதலிய பொருள்களுக்கு அவசியமில்லை என்பதற்காகத்தான்.

சேலப்பாளையம்
12-11-1949

வ. ஏந்து

●

ஓண்ட வந்தவர்கள்!

இராமாயண காலத்தில் இராமர் இராவணனுடைய தலைகளை வெட்டினார். அது மறுபடியும் முளைத்தது என்று படித்திருக்கிறோம். அதுபோல் வெள்ளையர் வெளியேறினர். ஆந்திரர் கிளம்பிவிட்டனர். ஆந்திரர்களின் செய்கை ஆத்திர மூட்டும்படியாக இருக்கிறது. பிரசார இலாகாவில் ஸ்ரீ பிரகாசமும் பிரகாசமாக இருக்கிறார். இவர்கள் சென்னையைப் பற்றிய உரிமை கொண்டாடும் பாத்தியம் பழைய கதையை நினைப்பூட்டுகிறது.

ஒரு தமிழர் வீட்டில் ஆந்திரர் ஒருவர் இரண்டு மூன்று நாட்கள் விருந்தாளியாகத்

தங்கினார். அவர் சாப்பிடும் போதெல்லாம் வீட்டின் உச்சி முகட்டையே பார்த்துக் கொண்டு சாப்பிடுவது வழக்கம். பிறகு அவரை ஊருக்குப் போகச் சொன்னதும் அவர் வீட்டின் பாத்தியம் கோர ஆரம்பித்தார். வழக்கு முற்றி நியாயாதிபதியிடம் சென்றது. அங்கு அந்த ஆந்திரர் சொன்னார்: "ஐயா, வீடு என்னுடையதுதான் என்பதில் சந்தேகமில்லை. பாருங்கள், சமையலறையின் உச்சிமுகட்டில் எவ்வளவு பொத்தல்கள் இருக்கின்றன என்று நான் கணக்காய்ச் சொல்லுகிறேன். அந்த மனிதரைக் கேளுங்கள் பதில் சொல்கிறாரா பார்ப்போம்" என்றாராம்.

வீட்டுக்குச் சொந்தக்காரன் உச்சி முகட்டில் உள்ள ஓட்டைகளையா எண்ணிக் கொண்டிருப்பான்? இதைப்போன்றதான் இருக்கிறது இன்றைய ஆந்திரர்கள் சென்னை நகரின்மீது காட்டும் உரிமை. ஏதோ சில ஆந்திரர்கள் இருப்பதால் சென்னை நகரம் அவர்களுடைய தாகுமா? அர்த்தமில்லாத அபத்தத்தைக் கிளப்பும் இவர்கள் ஸ்ரீ பிரகாசம் பிரதமராக இருந்தபோது ஏன் சும்மா இருந்தார்கள்?

கணபதி அக்கிரகாரம்
12-11-49 முத்துராம சர்மா

எல்லையைக் காப்போம்!

நான் தெலுங்கு பேசும் தமிழன் என்ற முறையில் இக் கடிதத்தை எழுதுகிறேன்.

ஆந்திர நாட்டிலுள்ள தென்னேட்டி விசுவநாதனின் பிரசங்கத்தைப் பல பத்திரிகைகளின் வாயிலாக அறிந்தேன். "ஐயோ, தமிழ் நாட்டில் இருக்கும் தெலுங்கு பேசும் தமிழர்களின் கதி பாகிஸ்தானிலுள்ள இந்துக்களின் கதிபோல் ஆகிவிடுமோ?" என்று பிதற்றுகிறார். பாவம்! இத்தகைய வருத்தங்கள் இல்லாத அக்கறை. அனுதாபம் இப்போதாகிலும் ஆந்திரர்களுக்கு ஏற்பட்டிருக்கிறதே அதுவே போதும். "எங்களைப் பற்றி நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம்; நாங்கள் பல வருஷங்களாகத் தமிழர்களோடு சகோதரர்களாக வாழ்ந்து வருகிறோம். அப்படிப்பட்டவர்களைத் தமிழ் நாடும், தமிழர்களும் ஒருக்காலும் பாகிஸ்தானில் நடந்தமாதிரி நடக்க விடவே மாட்டார்கள்" என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.


"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற திருவள்ளுவரின் அருள் வாக்கைத் தெலுங்கு பேசும் தமிழரான வீர பாண்டியக் கட்டபொம்மன் நிறைவேற்றி யிருக்கிறார். தமிழர்கள் செய்த உதவியை மறக்காமல் வீரத் தமிழ் நாட்டை அன்னியர் அடிமைப் படுத்த முயன்றபோது தன் உயிருள்ளளவும் விட மாட்டேன் என்று சொல்லிக் காரியத்தில் சாதித்தார். அதேபோல் தெலுங்கு பேசும் தமிழர்களாகிய நாங்களும் வடக்கே திருவேங்கடம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை உள்ள தமிழ் நாட்டை விட்டுக் கொடுக்க மாட்டோம். ஆந்திரர்களின் முதலைக் கண்ணீரில் ஏமாற மாட்டோம். ஆந்திரர்களுக்குப் புத்தி புகட்டும்படி வேங்கடத்தில் உள்ள ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளையும் கன்னியாகுமரியில் இருக்கும் கன்னித் தெய்வத்தையும் தெலுங்கு பேசும் தமிழர்களாகிய நாங்கள் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்கிறோம்.

சென்னை
8—11—49 என். ராமகிருஷ்ணன்

கருகிய காதல்

கி.ரா. கோபாலன்



அவள் வருகையை அவன் எதிர் நோக்கிக் காத்திருந்தான்.

ராமன் மீது கொண்ட காதலால் அவனை ஆவலுடன் எதிர்நோக்கி நின்ற சந்திரசேனையைப் போலவோ, ராமன் மீது வைத்திருந்த அளவற்ற பக்தியால் அவனுக்காக ருசி மிகுந்த பழ வர்க்கங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு தன் குடிசைக்குள் நுழைய மாட்டானா என்று காத்திருந்த சபரி போலவோ, ராமனின் பாததூளி பட்டுத் தன் கல்லுருவம் நீங்கி ஜன்ம சாபல்ய மடைய மாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருந்த அகலிகையைப் போலவோ அவன் அவள் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

மாலை வேளை; கடை வீதிக்குச் சமீபமாக இருந்த அந்தத் தெருவில் எப்பொழுதுமே ஜன நடமாட்டம் அதிகமாகத்தானிருக்கும். அதுவும் சாயந்திர வேளையில் கேட்க வேண்டுமா? வீட்டு வாசல் திண்ணையில் நிற்கும் தூணில் சாய்ந்தபடி உட்கார்ந்து ஒரு திசையையே கண்கள் நோக்க உட்கார்ந்திருந்தான் லலிதா. நாராயணன் காரியாலயத்திலிருந்து வீடு திரும்பும் வேளை அதுதான். எப்படியும் அவன் அந்த வழியாகத்தான் தன் வீட்டுக்குச் சென்றாக வேண்டும்.

அவளுக்கு வயது இருபது இருக்கலாம். பருவம் அழகை அவள் தேகத்தில் பக்குவமாக்கி வைத்திருந்தது—பொற் கிண்ணத்தில் அமிர்தத்தை நிரப்பி வைத்திருப்பது போல.

தெரு முனையில் நாராயணன் திரும்பி வருவது அவள் கண்ணில் பட்டது. ஆர்வத்துடன் எழுந்து நின்றாள். கையில் காகிதக் கத்தையை அணைத்துப் பிடித்துக் கொண்டே அவன் அதி வேகமாக நடந்து வந்தான். அந்த வேகமான நடையிலே அவன் தன் வீட்டையும் தன்னையும் கவனிக்காமல் போய் விடுவானோ என்ற பயம் அவளுக்கு எழுந்தது. அவனை அவ்வாறு போக விடாமல் கூப்பிட்டுச் சிறிது நேரமாவது பேசிவிடுவது என்ற துணிவு அன்று அவளுக்கு ஏற்பட்டிருந்தது. இத்தனை நாட்களாகத் தன்னைப் பார்த்து, தன் கண்களைப் பார்த்து, தன் செய்கைகளைப் பார்த்துப் புரிந்து கொள்ளாத விஷயத்தை இன்று சிறிதாவது அவனுக்குப் புரியும்படிச் செய்துவிட வேண்டும் என்று அவள் இருந்தாள்.

அவன் அதோ வந்து விட்டான்; அவள் வீட்டிற்குச் சமீபமாக வந்து விட்டான். தலை நிமிர்ந்து அவள் வீட்டைப் பார்த்தான். தூணோடு சாய்ந்து நின்று கொண்டிருக்கும் அவளையும் பார்த்தான். அவன் முகத்தில் ஒரு புன்சிரிப்பு மலர்ந்தது. சட்டென்று அவள் திண்ணையை விட்டு இரண்டு படி கீழே இறங்கி, "உங்களைத் தானே! கொஞ்சம் வந்து விட்டுப் போங்கள்!" என்றாள். மந்திர சக்தியால் கட்டுண்டவன் போல் அவனும் அவள் வீட்டு வாசலில் வந்து நின்றான்.

அவள் தூணில் சாய்ந்தபடி புடவைத் தலைப்பைக் கையால் எடுத்துத் திருகிக் கொண்டே எதையோ தழுதழுக்கச் சொல்லி நிறுத்தினாள். வெட்கமும் கூச்சமும் அவளுடைய துணிச்சலைச் சின்னா பின்னமாக்கி விட்டன. பயமும் பீதியும் ஆர்வத்தோடு சொல்ல நினைத்த வார்த்தைகளை நெஞ்சிற்குள்ளேயே சிதைத்து உருவில்லாமலாக்கிவிட்டன.

"நீங்கள் செய்த உதவியை என் ஆயுளில் மறக்கவே மாட்டேன்!" என்றாள் அவள் தழுதழுத்த குரலில்.

"அதனால் என்ன? அது ஒன்றும் அவ்வளவு பெரிய காரியமில்லை யல்லவா?" என்றான் அவனும் தடுமாறிக் கொண்டே.



"உள்ளே வந்து கொஞ்சம் காப்பி சாப்பிட்டுவிட்டுப் போங்கள்!" என்றாள் அவள் உபசாரமாக.

"காப்பியா! இந்த அகால வேளையில்......" என்று தாட்சண்யத்தோடு மறுத்தான் நாராயணன்.

"பாதகமில்லை; வாருங்கள்......!" என்றாள் லலிதா.

இந்த உபசாரத்துக்கு அவனால் இணங்காமலிருக்க முடியவில்லை. அவளோடு உள்ளே சென்றான். கூடத்தில் பாயை உதறிப் போட்டு அவனை உட்காரச் சொன்னாள். இரண்டு நிமிஷத்தில் காப்பி தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்தாள். காப்பியைச் சாப்பிட்டு விட்டு, "போய் வரட்டுமா?" என்றான்.

அவள் தயங்கினாள்; தடுமாறினாள். எந்த பாஷையில் சொல்லி அவனுக்கு விஷயத்தைப் புரியாமல் புரிய வைப்பது என்று தெரியாமல் திகைத்தாள்.

"போய் வாருங்கள்; அப்படியே மறந்து விடாதீர்கள்; அடிக்கடி வந்து கொண்டிருங்கள்......!"

இன்னும் ஏதோ சொல்ல வேண்டும் என்ற துடிப்பு அவள் நெஞ்சில் இருந்தது.

அவன் தாழ்வாரத்தைத் தாண்டி வாசற் பக்கத்து ரேழிப் பக்கம் வந்தான். அங்கே இருள் கவிந்திருந்தது. செருப்பை எங்கே கழற்றி வைத்தோம் என்று தெரியவில்லை. நான்கு புறமும் காலால் துளாவித் தேடினான். அவனுக்குப் பின்னால் அவள் வந்து நின்று, "செருப்பைத் தேடுகிறீர்களா?" என்றாள்.

"ஆமாம்" என்று சொல்லி விட்டு அவன் திரும்பினான். அவ்வளவு சமீபத்தில் அவள் நெருங்கி நின்று கொண்டிருப்பாள் என்று அவன் நினைக்கவில்லை. அவன் திரும்பியபோது அவனுடைய தோளில் அவள் தேகம் உராய்ந்ததுபோலிருந்தது. சட்டென்று ஒதுங்கி நின்றான்.

"பாதகமில்லை; செருப்பை வாசற்படியிலேயே விட்டுவிட்டு வந்து விட்டீர்களே!" என்றாள் அவள்.

"ஆமாம், மறந்து விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே வெளியே வந்து செருப்பைப் போட்டுக் கொண்டு, "நான் வருகிறேன்..." என்று அவன் மொழிந்தான். அவள் "சரி" என்பது போல் தலையை ஆட்டினாள்.

★

அந்த வீட்டு வாசற்படியை விட்டு இறங்கியவுடன் நாராயணனின் உடல் முழுவதும் சில்லிட்டு வியர்த்தது. துணிகரமான பெண்களிடம் ஆண்கள்கூடச் சில சமயம் கோழைகளாகி விடவேண்டியதுதான் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தான் நாராயணன். அவனுக்கு லலிதாவின் ஹிருதயம் விளங்காமலில்லை. அவள் எண்ணம் - ஆசை - எல்லாம் அவனுக்கு விளங்கத்தான் செய்தது. முதலில் அவள் ஏழ்மைக்காக அவன் இரங்கினான்; பச்சாதாபப் பட்டான். இப்பொழுது அவன் எதற்காக அவள்மீது இரக்கப்படுகிறான், பச்சாதாபப் படுகிறான் என்று அவனுக்கே தெரியவில்லை. ஏழ்மையிடம் கொண்ட இரக்கமும் பச்சாதாபமும் எப்படிக் காதலாக மாறி விடுகிறது என்ற புதிர் அவனுக்கு விளங்காததாயிருந்தது. அவள் அவனை விரும்புகிறாள்; அவன் அவளை விரும்புகிறான். ஆனால் அவன் வாழ்க்கையில் காலம் கடந்து இந்தக் காதல் மலர்ந்திருக்கிறது. மலர்ந்த இக்காதல் மணம் கமழ்ந்து நிற்காது. கருகி உதிரத்தான்வேண்டும்.

அவன் மனங் குழம்பியபடி வீட்டை நோக்கி நடந்தான். அவன் மனைவி அவனை எதிர்நோக்கி நெடு நேரமாக வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள். அவளுடைய மலர்ந்த முகம் அவனை ஆவலோடு வரவேற்றது. "ஏன் இன்று இவ்வளவு நேரம்? நீங்கள் சிறிது நேரம் தாமதமாய் வந்தால்கூட என் மனது அடித்துக் கொள்கிறது!" என்றாள் அவள்.

அவன் முகத்தில் கொஞ்சம் அசடு வழிந்தது. நாராயணன் அவன் மனைவி பாமாவிடம் ஒன்றையும் ஒளித்ததில்லை. அவளறியாத ரகசியம் அவனிடம் ஒன்றுமில்லை. இவ்வளவு நாளும் இல்லாமல் இன்று அவளிடம் எதையோ மறைத்து வைக்க அவன் சிரமப்பட்டான். அதை மறைத்து வைக்கவும் அவன் பிரியப்படவில்லை. அன்று இரவு சாப்பிட்டபின் நெடுநேரம் உட்கார்ந்து யோசித்தான். இத்தனை நாட்கள் வரை மனைவிக்குத் துரோகம் நினைக்காத உள்ளம் இன்று எப்படி லலிதாவிடம் பாய்ந்தது என்றுதான் அவனுக்கு விளங்கவில்லை.

லலிதா ஏழைப்பெண். அவனுடைய நண்பன் பாலுவுக்கு நெருங்கிய உறவினள். இன்னும் விவாகம் ஆகவில்லை. ஹைஸ்கூல் படிப்பு முடிந்து விட்டதால் கலாசாலையில் சேர்ந்து படிக்க ஆசைப்பட்டாள். ஏழைப் பெண்ணுக்குக் கலாசாலையில் சேர்ந்து படிக்க வசதி ஏது? யாராவது உபகாரச் சம்பளம் கொடுப்பார்களா என்று எதிர்பார்த்தாள். நாராயணன் உறவினர் ஒருவர் பெண்கள் படிப்பிற்காக உபகாரச் சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்ததால் அவன் மூலமாக அந்த உதவியைப் பெற அந்தப் பெண் விரும்பினாள். அவளுடைய நண்பன் பாலு லலிதாவை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். நாராயணன் அந்தப் பெண்ணுக்கு இரங்கித் தன் சிரமத்தைப் பாராமல் அவளுடைய கலாசாலைப் படிப்புக்கு உபகாரச் சம்பளம் பெறவேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். அவன் சிரமப்பட்டுத் தனக்கு உதவி செய்ததற்கு லலிதா நன்றி செலுத்த வேண்டியதுதான். ஆனால் அந்த நன்றியைக் காதலாக்கி அவனுக்கு அர்ப்பணம் செய்ய நினைத்தது தான் அவனைத் தடுமாற்றத்திற்குள்ளாக்கிவிட்டது. பழக்கத்தாலும் குண ஒற்றுமையாலும் அது இயற்கையாக ஏற்படக்கூடியதாய்த் தான் அவனுக்குத் தோன்றியது. இருந்தாலும் பாமா......!

அவன் பெருத்த குழப்பத்திற்குள்ளானான்.

பாமா படுக்கையைப் போட்டுவிட்டு, "என்ன, இப்படி யோசனையிலாழ்ந்திருக்



கிறீர்கள்? ஆபீஸில் ஏதேனும் தகராறு?" என்றாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. வேலைத் தொந்தரவுதான் அதிகம். நாளைய தினம் செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றி இன்றே கவலை!" என்றான் நாராயணன்.

"கவலைப்பட்டால் வேலை செய்யாமல் இருந்துவிட முடியுமா? செய்ய வேண்டியவைகளைச் செய்துதானாக வேண்டும். மணி பத்திற்கு மேலாகிறது; வாருங்கள்!" என்றாள் பாமா.

அவன் மெதுவாக எழுந்து சென்று படுக்கையில் படுத்தான். அவன் மனைவி பிரகாசமாக எரிந்து கொண்டிருந்த விளக்கைச் சிறிது அடக்கி வைத்தாள்.

★

மறுநாள் முதல் அவன் லலிதா இருக்கும் தெருவழியாக ஆபீஸுக்குப் போவதில்லை. அந்தத் தெருவழியாக வருவதுமில்லை. ஒருநாள் ஆபீஸ் விலாசத்திற்கு



ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்த பிறகு அவனுக்கு வேலையே ஓடவில்லை. லலிதா தன் வாயைத் திறந்து சொல்ல முடியாத ஹிருதயப் புழுக்கத்தை யெல்லாம் காகிதத்தில் எழுத்தாக்கிக் கொட்டியிருந்தாள். அவன் மனதில் மீண்டும் இரக்கமும் பச்சாதாபமும் தோன்றின. ஆனால் அந்த இரக்கம் பச்சாதாபம் இரண்டையும் ஒன்று கலந்து காதல் என்ற உருவத்தைக் கொடுக்க அவனால் முடியவில்லை.

அவன் லலிதாவுக்குச் சுருக்கமாக ஒரு பதில் கடிதம் எழுதினான். அதாவது, தனக்கு ஏற்கெனவே ஒரு மனைவி இருக்கிறாள் என்னும் ரகசியத்தை அவன் அவளுக்குத் தெரிவித்து விட்டான்.

அப்புறம் லலிதாவிடமிருந்து அவனுக்குக் கடிதமே வரவில்லை. வெகு நாட்களுக்குப் பிறகு அந்தத் தெரு வழியாக அவன் மீண்டும் போகத் தலைப்பட்டான். ஒவ்வொரு நாளும் அவன் லலிதாவின் வீட்டைப் பார்ப்பான். அது சூன்யமாயிருக்கும். அவன் மனதில் பயங்கரமான எண்ணங்களெல்லாம் தோன்றும். ஆனால் அப்படி ஒன்றும் அந்தத் தெருவில் விபரீதம் நேர்ந்திருப்பதாக அவன் கேள்விப்படாததால் மன ஆறுதல் அடைவான்.

ஒருநாள் அவன் காரியாலயத்திலிருந்து வந்ததும், "நீங்கள் காலேஜ் படிப்புக்காக ஒரு பெண்ணுக்கு உபகாரச் சம்பளம் வாங்கிக் கொடுத்திருப்பதாகச் சொன்னீர்களே, அந்தப் பெண் மத்தியானம் இங்கே வந்திருந்தாள்!" என்றாள் அவன் மனைவி.

"லலிதாவா? ஏன்?" என்றான் நாராயணன் பரபரப்புடன்.

"அவள் இனிமேல் படிக்கப் போவதில்லையாம். ஊருக்குப் போகப் போகிறாளாம். நீங்கள் செய்த உபகாரத்துக்கு ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறேன். என்றும் மறக்கமாட்டேன் என்று உங்களிடம் சொல்லச் சொன்னாள்!"

"எந்த ஊருக்குப் போகிறாள்?"

"மதுரைக்குச் சமீபமாக ஏதோ ஒரு ஊர் என்று சொன்னாள். எனக்கு ஞாபகமில்லை. ஏதோ பெண் பாடசாலையில் வாத்தியார் வேலை பார்க்கப் போகிறாளாம். மேஜைமீது இருந்த உங்கள் போட்டோ தனக்கு வேண்டுமென்று ரொம்ப ஆசையாகக் கேட்டாள். போனால் போகிறது என்று கொடுத்து விட்டேன்!"

நாராயணன் தன் மனைவியின் களங்கமற்ற முகத்தைப் பார்த்தான். ஒரு பெருமூச்சு விட்டான். விகல்பமற்ற ஹிருதயமுள்ள தன் மனைவி போட்டோவை மாத்திரமல்ல, தன் கணவனையே வேறொருத்தி விரும்பிக் கேட்டால் இரக்கப்பட்டுக் கொடுத்து விடுவாளோ என்ற சந்தேகம் அவன் மனதில் எழுந்தது. ஒரு பெண்ணின் மனதை மற்றொரு பெண் அறிந்து கொள்வது கடினம் என்று அவனுக்குத் தோன்றியது.

லலிதா எங்கிருந்தாலென்ன? அவனை அவள் தன் வாழ்நாள் முழுதும் மறக்க மாட்டாள்; அவனும் அவளை ஒருநாளும் மறக்கமாட்டான். கருகி உதிர்ந்தாலும் காதல் மலர்ந்துதானே உதிர்ந்திருக்கிறது?


ஓடிவா ராசா, ஓடிவா!
ஓடிவா! ராசா! ஓடி வா!
ஒண்ணரை அணா! ஓடி வா!
பிரதி சனிக்கிழமை விடுமுறை
— சாமா —

பாப்பா மலர்

கடல் கன்னி

5. மாய நகரம்

ராணி அந்தப் பட்சியைப் பார்த்ததும் தன் முகத்தை முக மூடியால் மறைத்துக் கொண்டாள். "ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று மன்னன் ராணியைக் கேட்டதற்கு, "இந்தப் பட்சி சாமான்யப் பட்சியல்ல; இது ஒரு மனிதன்!" என்று பதில் கூறினாள்.

"என்ன! இந்தப் பட்சி மனிதனா?" என்று கேட்டு வியப்பின் மிகுதியால் வாயைப் பிளந்தான் மன்னன்.

"இந்தப் பட்சிதான் பாரசீக நாட்டு அரசன் முழுமதி. அவனைக் கர்வம் பிடித்த சமாண்டல் அரசனின் மகளான இனிமொழியாள் பட்சியாக மாற்றி விட்டாள்!" என்று சொல்லி, அப்புறம் முழுமதிக்குச் சமீப காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்களையும் ராணி விவரித்தாள். தன் ராணிக்கு மந்திர வித்தை நன்றாகத் தெரியும் என்பதை மன்னன் அறிவான். ஆகையால் அந்த வெள்ளைப் பட்சியை மறுபடியும் பாரசீகத்தின் மன்னனாக மாற்றும்படி அவன் தன் ராணியைக் கேட்டுக் கொண்டான். அதற்கு ராணியும் சம்மதித்தாள். கொஞ்சம் ஜலத்தை அந்தப் பட்சி மீது தெளித்துச் சிலமந்திரங்களை அவள் மெதுவாக உச்சரித்தாள். உடனே பட்சி மறைந்து பாரசீக மன்னன் முழுமதி தோன்றினான்.



தனது பழைய உருவம் வந்துவிட்டதைக் கண்டு முழுமதி சந்தோஷமடைந்தான். தன்னைக் காப்பாற்றியதற்காக ராணிக்கு நன்றி கூறினான். மன்னனிடம் தன் கதையைச் சொல்லி மறுபடியும் பாரசீகம் செல்ல உதவி புரியும்படி வேண்டினான். மன்னனும் அதற்கிணங்கித் தன் கப்பல்களில் சிறந்த தொன்றைக் கொடுத்து முழுமதியைப் பாரசீகத்துக்கு அனுப்பி வைத்தான். முழுமதி தன் புது நண்பர்களுக்கு நன்றி செலுத்திவிட்டுத் தன் சொந்த நாட்டை நோக்கிப் புறப்பட்டான்.

ஆனால் முழுமதி துரதிருஷ்டம் பிடித்தவன். கப்பல் புறப்பட்ட சில நாட்களுக்கெல்லாம் கடலில் ஒரு பெரும் புயல் கிளம்பிற்று. கப்பல் ஆட்டங்கண்டு ஒரு பாறைமீது மோதித் தூள் தூளாயிற்று. அவ்விதம் உடைந்த கப்பல் துண்டுகளில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு முழுமதி ஒரு பெரிய நகரின் கரையை அடைந்தான். அங்கே ஏராளமான குதிரைகள், ஒட்டகைகள், கழுதைகள், பசுக்கள் முதலிய பல மிருகங்கள் இருந்தன. அந்த மிருகங்களெல்லாம் சூழ்ந்து கொண்டு முழுமதியைக் கரை சேர வொட்டாமல் தடுத்தன. முழுமதி சாமர்த்தியமாக அந்த மிருகங்களிடமிருந்து தப்பிக் கரை சேர்ந்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் நகருக்குள் சென்றான். அந்த நகரின் தெருக்களில் ஜன நடமாட்டத்தைக் காணோம். முழுமதி மிகவும் கவலை

ரா. நா

கொண்டான். ஜன நடமாட்டமில்லாத இடத்தில் மனிதன் எப்படிப் பிழைத்திருக்க முடியும்?

நல்லவேளையாக அங்கிருந்த ஒரு பழக்கடை முழுமதியின் கவனத்தைக் கவர்ந்தது. அந்தக் கடைக்காரன் ஒரு கிழவன். அவன் முழுமதி அங்கு வந்து சேர்ந்த விவரத்தைக் கேட்டான். கப்பல் நொறுங்கியது முதல் எல்லா விவரங்களையும் முழுமதி அவனிடம் சொன்னான். அதைக் கேட்டுக் கிழவன் பரிதாபப் பட்டு முழுமதியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவளித்தான்.

கிழவன் தன்னை உள்ளே அழைத்துச் சென்று உணவளித்தது முழுமதிக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஆனால் அந்த ஆச்சரியம் அடுத்த க்ஷணமே நீங்கியது. முழுமதி சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கிழவன் சொன்னான்:

"வாலிபனே, நீ தெரியாத்தனமாய் இங்கு வந்துவிட்டாய். இதற்கு மாய நகரம் என்று பெயர். இதை லாயே என்னும் அரசி ஆளுகிறாள். அவள் கொடிய மந்திரவாதி. லாயே அழகாயிருந்தாலும் பிறருக்குத் தீங்கு செய்யும் நோக்கமும் சக்தியும் உள்ளவள். எந்த மனிதனையும் மிருகமாக மாற்றக்கூடியசக்தி அவளுக்கு உண்டு. இந்நாட்டிற்கு யாராவது இளைஞர்கள் வந்தால் ராணி அவர்களைத் தன்முன் கொண்டு வரச் சொல்லுவாள். சில நாட்களுக்கு அவர்களிடம் பிரியமாயிருப்பது போல் நடிப்பாள். அப்புறம் அவர்களை மிருகமாகவோ, பட்சியாகவோ மாற்றி விடுவாள்!"

இதைக் கேட்டதும் கடற்கரையில் தன்னைப் பல மிருகங்கள் சூழ்ந்து கொண்டு ஊருக்குள்ளே போக விடாமல் தடுத்தது முழுமதியின் ஞாபகத்துக்கு வந்தது. அந்த மிருகங்களும் தன்னைப் போல் மானிட இனத்தைச் சேர்ந்தவை, இந்த ராணியால் சபிக்கப் பட்டு மிருகங்களாக மாறியவை என்பதை அறிந்து அவன் அவைகளிடம் அனுதாபம் கொண்டான்.

கிழவன் அவனுக்குத் தைரிய மூட்ட எண்ணி, "நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். ஆனால் நீ என் வீட்டை



விட்டு வெளியே செல்லாமலிருப்பதுநல்லது. லாயே ராணிக்கு என்னிடம் மரியாதை உண்டு. இந்த ஊர் மக்களும் என்னைப் பெரிதும் மதிக்கின்றனர்'' என்றான்.

முழுமதி கிழவனுக்கு நன்றி செலுத்தினான். இந்த மாயா நகரத்தை விட்டு வெளியேற வழி தெரியும் வரை அவன் சொற்படி நடந்து கொள்ளச் சம்மதித்தான். கிழவனுடைய கடையை விட்டு அப்பால் செல்லாமலிருந்ததால் முழுமதிக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.



ஒரு நாள் கிழவன் கடையில் முழுமதி உட்கார்ந்து கொண்டிருக்கையில் ராணி லாயே தன் தோழிகளுடன் அந்தப் பக்கம் வந்தாள். அழகான ஓர் இளைஞன் அங்கு உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் ராணி கிழவன் அப்துல்லாவைக் கூப்பிட்டு, "இந்தப் புதிய இளைஞன் யார்?'' என்று அவனைக் கேட்டாள்.


"அவன் எனது மருமகன். என்னுடன் சில நாட்கள் தங்கிப் போவதற்காக இங்கு வந்திருக்கிறான்!'' என்றான் அப்துல்லா.

உடனே ராணி முழுமதியை எப்படியாவது தன்னுடன் அழைத்துச் செல்வது என்று தீர்மானித்து விட்டாள். ராணி எத்தனையோ இளைஞர்களைப் பார்த்திருக்கிறாள். ஆனால் முழுமதியைப்போல் அழகு வாய்ந்த இளைஞனை அவள் பார்த்ததே யில்லை.

"அப்துல்லா. இந்தப் பையனை என்னுடன் அனுப்பு. அவனை நான் சக்தி வாய்ந்தவனாகச் செய்து விடுகிறேன். அவனுக்கு ஏதாகிலும் கஷ்டம் நேரிடும் என்று நீ பயப்படாதே!'' என்று ராணி மன்றாடிக் கேட்டதினால் அப்துல்லாவினால் மறுக்க முடியவில்லை. அரை மனதுடன் முழுமதியை அனுப்ப அவன் சம்மதித்தான். ஆனால் அவனை மறுநாள் தான் அனுப்ப முடியும் என்று கிழவன் கூறினான். லாயே ராணியும் அதற்குச் சம்மதித்துத் திருப்தியுடன் தனது அரண்மனைக்குத் திரும்பினாள்.

ராணிக்கும் கிழவனுக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டு முழுமதி கவலையடைந்தான். "தம்பி, இந்த ராணி மந்திர சக்தியில் எவ்வளவு கெட்டிக்காரியாயிருந்தாலும் என்

வில்லாய் வளைத்தார்!



னிடம் மாத்திரம் அவன் மந்திரம் பலிக்காது. ஏனெனில் என்னிடமும் ராணிக்குத் தெரியாத சில மந்திர சக்திகள் இருப்பது அவளுக்குத் தெரியும். அதனால்தான் ராணி என்னிடம் மரியாதையாயிருக்கிறாள். ஆகையால் என்னைச் சேர்ந்த யாருக்கும் அவள் எவ்விதக் கெடுதலும் செய்ய மாட்டாள்'' என்று கிழவன் அப்துல்லா அவனுக்கு ஆறுதல் கூறினான்.

அடுத்த நாள் லாயே ராணி முழுமதியை அரண்மனைக்கு அழைத்துச் செல்ல வந்தாள். முழுமதி ஏறிச் செல்ல ஓர் அழகிய குதிரையையும் அவள் கொண்டு வந்தாள். அந்தக் குதிரைமீது ஏறிக்கொண்டு ராணியுடன் முழுமதி அவளுடைய அரண்மனைக்குச் சென்றான்.

ராணி முழுமதியை மரியாதையாகவும் பிரியமாகவும் நடத்தினாள். அவளுடைய அன்பில் மயங்கி அவள் மாயக்காரி என்பதை முழுமதி மறந்தான்.

இம்மாதிரி ஆனந்தமாக நாற்பது நாட்கள் கடந்தன. அதற்கப்புறம் தன்னிடம் சிக்கிக் கொண்ட பிறரை நடத்துவது போல் முழுமதியையும் நடத்துவதென்று லாயே ராணி முடிவு செய்தாள். (தொடரும்).

முடியுமா?

●

உங்களிடம் ஒன்பது தீக்குச்சிகள் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அவற்றைப் பத்துத் தீக்குச்சிகளாக ஆக்கவேண்டும். ஒன்றையும் ஒடிக்கக் கூடாது; வேறொன்றையும் சேர்த்துக் கொள்ளக் கூடாது. எங்கே—முடியுமா, பாருங்கள்!

விடை அடுத்த இதழில்

சென்ற இதழில் வெளியான விடைக்குக் கணக்கு இதுதான்:

123456789
987654322

ஏன் பேசவில்லை?

லாயிட் ஜார்ஜைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் முதலாவது மகா யுத்தத்தின்போது பிரிட்டிஷ் பிரதமரா யிருந்து இங்கிலாந்து தேசத்தை அன்னியரின் ஆக்ரமிப்பி லிருந்து காப்பாற்றியவர். அவர் பிரதமராவதற்குமுன் ஒரு நாள் தமது 'கார்' வண்டியில் எங்கேயோ போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒரு பெண் சுமக்க முடியாத அளவு புத்தகங்களைச் சுமந்துசென்றுகொண்டிருந்தாள். லாயிட் ஜார்ஜுக்கு அவளைப்பார்க்கப் பரிதாபமாயிருந்தது. அவர் அந்தப் பெண்ணை அன்புடன் அழைத்து வண்டியில் ஏற்றிக் கொண்டார். வழியில் அந்தப் பெண்ணை நோக்கி அவர் பல கேள்விகள் கேட்டார். அவள் ஒன்றுக்குமே பதில் சொல்லவில்லை.



லாயிட் ஜார்ஜுக்கு ஒரே வியப்பாயிருந்தது. அந்தப் பெண்ணோ அவரை லட்சியம் செய்யவில்லை. பள்ளிக்கூடம் வந்ததும் அவள் இறங்கிச் சென்று விட்டாள்.

மறுநாள் காலை ஒரு பெண்மணி லாயிட் ஜார்ஜின் வீட்டுக்கு வந்து, ''நேற்று நீங்கள் என் பெண்ணைத் தங்கள் வண்டியில் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் சென்றீர்களாம். அதற்காகத் தங்களுக்கு என் இதய பூர்வமான நன்றி!'' என்றாள்.

''ஆமாம், அந்தப் பெண் ஏன் என்னிடம் பேசவேயில்லை?'' என்று கேட்டார் லாயிட் ஜார்ஜ்.

''ஓ, அதுவா! நாங்களோ ஏழை; தாங்களோ பிரபல பாரிஸ்டர். தங்கள் வாயிலிருந்து வரும் வார்த்தைகளுக்கெல்லாம் பணம் கேட்டு விடுவீர்களோ என்று பயந்துதான் அவள் தங்களுடன் பேசவில்லை!'' என்றாள் அந்தப் பெண்மணி.



எஜமானி சொன்னபடி !

எஜமான் :—இப்படிக் குப்பையே போகாமல் கடுதாசை யெல்லாம் அங்கங்கே போட்டுவிட்டுக் கூட்டி விட்டேன் என்கிறாயே ?

வேலைக்காரி :—என் அம்மா, கூட்டும் போது, சாமானை யெல்லாம் அது அது இருந்த இடத்திலேயே வச்சடணும்னு நீங்கதானே சொன்னீங்க ?

★

உண்மை !

உபாத்தியாயர் :—நான் ஒரு வீடு கட்டுகிறேன் என்று வைத்துக்கொள். அதற்காக முதலில் நான் என்ன வாங்குவேன், சொல்லு ?

ஒரு மாணவன் :—கடன், ஸார் !

★

பரஸ்பரம் !

ஜவுளிக் கடைக்காரர் மனைவி :— நம்ம டாக்டர் 'பில்' அனுப்பி யிருக்கிறாரே, சரியாகப் போட்டிருக்கிறாரோ என்று சந்தேகமாக இருக்கிறது. அவர் புஸ்தகத்தைக் கேட்டு வாங்கிப் பாருங்களேன் !

புருஷன் :—நல்ல காரியம் செய்யச் சொன்னாயே ! முந்தா நாள் நம்ம 'பில்' அவருக்குப் போயிருக்கிறது. நம்ம கடைப் புஸ்தகத்தைப் பார்க்கிறேன் என்று அவர் பதிலுக்கு வந்து விட்டாரானால் வம்புதான் !

★

எப்படி ?

அம்மா :—என்டா, கடப்பாரையைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறாய் ? காலிலே கையிலே போட்டுக் கொள்ளப் போகிறாய் !

பிள்ளை :—இல்லே, அம்மா ! அப்பாதான் ஆணியைப் பிடித்துக் கொள்ளப் போகிறார் ; நான் அடிக்கப் போகிறேன் !

ஓகோ !

“ நமஸ்காரம், ஸார் ! எங்கே நான் வர சமயம் பார்த்துக் கிளம்பி விட்டீர்கள் ?”

“ ஆமாம், ஸார் ! இன்றைக்குப் பாயசம் கொடுக்கிறார்கள் ! அதுதான் போய்விட்டு வரலாம் என்று கிளம்பினேன் !”

“ பாயசமா ! அப்படியானால் நானும் வருகிறேன், ஸார் ! போகிறபோது அப்படியே வீட்டுக்குப் போய் ஒரு பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு போய் விடலாம்.”

“அட, நீர் ஒரு பக்கம் ! புத்திரகாமேஷ்டி யாகத்திலே, கௌசல்யை, சுமித்திரை, கைகேயி இவர்களுக்குப் பாயசம் கொடுக்கிற கட்டத்தை ராமாயண சாஸ்திரிகள் சொல்லப் போகிறார். நமக்கு யாருங்காணும், பாயசம் தரப் போகிறார்கள் ?”

★

சரிதான் !

“ நம்ம வீட்டிலே நாளைக்கு ஒரு விசேஷம்......! நம்ம குட்டி இருக்கிறாளே கமலம், அவளை என் சாஹித்தியங்கள் சிலவற்றைப் பாடச் சொல்லி யிருக்கிறேன். நீங்கள் வந்தீர்களானால் ஒரு இரண்டு மணி அவகாசம் கேட்கலாம். ஒன்பது மணிக்குச் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் போகலாம்...”

“ ஆகா ! கட்டாயம் வருகிறேன். சரியாக ஒன்பதாவது மணிக்கு வந்து விடுகிறேன் !”

★

சிரிக்க வேண்டாம் !

மானேஜர் (குமாஸ்தாவைப் பார்த்து):— மிஸ்டர் கங்காதரன், நீர் நேற்று நடந்த நம் ஆபீஸ் வருஷார்த்தக் கொண்டாட்டத்துக்கு வந்திருந்தீரே ! எல்லாரும் என் பிரசங்கத்தில் நான் கூறிய ஹாஸ்ய வெடிகளைக் கேட்டுச் சிரித்தார்களே ! நீர் மட்டும் ஏன் சிரிக்கவில்லை ?

கங்காதரன் :—நான் எதற்காகச் சிரிக்க வேண்டும் ? நான்தான் நாளைய தினமே வேலையை விட்டுவிடப் போகிறேனே !

சித்ரலேகா

ஸ்ரீ. பகவதி சரண் வர்மா

மொழிபெயர்ப்பு: ரா. வீ.

குமாரகிரி தன் கண்களை மூடிக் கொண்டான். அடுத்த கணம் அந்தக் காட்சி அனைத்தும் மறைந்து விட்டது. குமாரகிரி கண்களைத் திறந்து சிரித்தவாறே, “மந்திரி, நீங்கள்தான் பொய் சொல்லுவதாக எனக்குத் தோன்றுகிறது. நான் சொல்வது உண்மையென்பதற்கு இந்தச் சபையில் கூடியுள்ளோர்களனைவரும் சாட்சி. இங்கே விஜயம் செய்திருக்கும் கனதனவான்கள் உங்கள் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பார்கள்” என்றான்.

“மந்திரிதான் பொய் சொல்லுகிறார். ஏனெனில் நாங்கள் அனைவரும் சத்தியத்தையும் கடவுளையும் நேரில் கண்டோம்” என்று கூடியிருந்தோர் அனைவரும் ஒருமுகமாகக் கூறினர்.

சாணக்கியர் புண்பட்ட மனத்துடன் சந்திரகுப்த சக்கரவர்த்தியை நோக்கினார். சக்கரவர்த்தியும், “மந்திரி! குமாரகிரி சொல்வது பொய்யல்ல; நானுங்கூடத்தான் சத்தியத்தையும் கடவுளையும் நேரில் கண்டேன்” என்றார்.

“என் கண்கள் இன்றுதான் முதல் தடவையாக என்னை ஏமாற்றின. யோகி குமாரகிரி! நான் தோற்றேன்; நீங்கள் ஜயித்தீர்கள்!” என்று சொல்லி விட்டுச் சாணக்கியர் தம் ஆசனத்தில் அமர்ந்தார்.

யோகி குமாரகிரி அவ்விடத்தை விட்டு நகர ஆரம்பித்தான். அதற்குள்ளாகவே, “யோகி! சற்று நில்லுங்கள். என் சந்தேகம் இன்னும் தீர்ந்தபாடில்லை. அதைத் தீர்த்து விட்டுப் போங்கள்!” என்று நடனராணி சித்திரலேகா சொல்லியது அவன் காதிலே விழுந்தது.

நடன மண்டபத்திலே உட்கார்ந்திருந்த அத்தனை பேருடைய கண்களும் வியப்பு மிகுதியினால் சித்திரலேகாவின் பக்கம் திரும்பின. சித்திரலேகா தன் ஆசனத்திலிருந்து எழுந்து வந்து, “யோகி? நீங்கள் காட்டியவற்றை நானும்தான் பார்க்கவில்லை. மந்திரி சாணக்கியர் பொய் பேசுவதாக இங்கே வீற்றிருக்கும் ஜனங்கள் வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் நான் அவ்வாறு சொல்லச் சித்தமாயில்லை. நான் சத்தியத்தின் மீதும் கடவுளின் மீதும் ஆணை வைத்து உங்களை ஒன்று கேட்கிறேன். இங்கே கூடியிருக்கும் மக்களனைவருக்கும் காட்டினீர்களே, அதே உருவத்தில்தான் நீங்கள் சத்தியத்தையும் கடவுளையும் கண்டிருக்கிறீர்களா?” என்று கேட்டாள்.

நடனராணியின் கண்கள் யோகியின் கண்களில் ஒன்றின. யோகியின் கண்களிலே நம்பிக்கை சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது; தவத்தின் வலிமை தோய்ந்திருந்தது. நடன ராணியின் கண்களிலோ உல்லாசம் ஒளி வீசியது; அவநம்பிக்கை தாண்டவமாடியது. குமாரகிரியின் வாயிலிருந்து அகஸ்மாத்தாக “இல்லை” என்ற சொல் வெளி வந்தது.

மக்கள் துணுக்குற்றனர். மந்திரி சாணக்கியர் மகிழ்ச்சி தாங்காமல் எழுந்தே நின்று விட்டார்! ஆனால் சித்திரலேகா அவர் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. “யோகி! நீங்கள் உங்கள் ஆத்ம சக்தியின் பலத்தைக் கொண்டு மக்களை மயக்கி, மனதை வசீகரித்து உங்கள் கற்பனையில் உதித்த கடவுளையும் சத்தியத்தையும் காட்டினீர்கள் என்பதும் உண்மைதானே? மாபெரும் யோகியான நீங்கள் பொய் சொல்ல மாட்டீர்கள் என்று நம்புகிறேன். கடவுளின் மீதும் சத்தியத்தின் மீதும் ஆணை வைத்துக் கேட்கிறேன்!” என்றாள்.

குமாரகிரி சிறிது நேரம் யோசித்துவிட்டு, “நீ சொல்வது உண்மைதான்!” என்று பதில் சொன்னான்.

இந்தக் கேள்வியையும் பதிலையும் கேட்டு ஜனங்கள் திகைத்துப் போயினர். சித்திரலேகா மறுபடியும், “இன்னொரு கேள்வியும் பாக்கியிருக்கிறது. உங்களைக் காட்டிலும்

அதிக ஆத்ம சக்தியுள்ளவர்கள் உங்கள் ஆத்ம சக்திக்கு மயங்கி ஆடவில்லை; அவர்களுக்கு நீங்கள் உங்களுடைய கற்பனையினால் உண்டாக்கிய பொருளைக் காட்ட முடியவில்லை என்பதும் உண்மைதானே?" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் கொலு மண்டபம் முழுவதும் ஒரு விதச் சலசலப்பு ஏற்பட்டு விட்டது. யோகி குமாரகிரிக்குத் தன் நிலைமை நன்கு விளங்கியது. அவன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான். பின்னர் அதே சாந்தமான குரலில், "ஒரு விஷயத்தை நான் இங்கே தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். கடவுளை நம்புபவனுக்குத் தான் ஆத்ம சக்தி உண்டு. கடவுளை நம்பாத நாஸ்திகனுக்கு ஆத்ம சக்தியே கிடையாது. மனிதன் உள்ளத்திலே கற்பனை என்று ஒன்று இருக்குமானால், அவன் அந்தக் கற்பனைக்கு மயங்கித்தான் ஆகவேண்டும்; மரியாதை செலுத்தித்தான் ஆக வேண்டும்; கற்பனையைக்கண்டு வியந்துதான் ஆக வேண்டும். ஆனால் கற்பனையே சுரக்காத இடத்தில்—கற்பனை குழி தோண்டிப் புதைக்கப்பட்டுவிட்ட இடத்தில்—நாஸ்திகவாதம் தலைதூக்கி நிற்கும் இடத்தில் மனிதனால் கடவுளைக் காண்பதென்பது நடக்காத காரியம். இப்பொழுது இந்த இடத்திலே கடவுளையும் சத்தியத்தையும் காணவில்லை என்று சொல்லும் மனிதர்களின் கற்பனை செத்து எத்தனையோ யுகங்கள் கழிந்திருக்க வேண்டும். அவர்கள் வெறும் நாஸ்திகர்கள். நாஸ்திகர்களிடத்தில் ஆத்ம சக்தியை எதிர்பார்ப்பது இயலாத காரியம்" என்றான்.



சாணக்கியர் சக்கரவர்த்தியைப் பார்த்தார். சக்கரவர்த்தி சாணக்கியருக்கு ஏதோ சிறு சமிக்ஞை செய்தார். அதன் பின் சாணக்கியர் எழுந்து போய் வெற்றி மகுடத்தை எடுத்துச் சித்திரலேகாவின் தலையிலே அணிவித்தார்.

"நடனராணி சித்திரலேகா! இன்று வெற்றி பெற்றது நீ தான். யோகி குமாரகிரி தன்னுடைய ஆத்ம சக்தியைக் கெட்ட வழியில் உபயோகப்படுத்தி எங்களைப் பிரமையிலேயே ஆழ்த்திவிட நினைத்தார். அதன் உண்மை உருவத்தை எடுத்துக் காட்டியதற்காக உனக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றி" என்றும் சொன்னார். பிறகு அவர் யோகி குமாரகிரியைப் பார்த்து, "யோகி! நீங்கள் செய்தது நன்றாயில்லை. ஆகவே அதற்கேற்ற தண்டனை உங்களுக்குக் கொடுத்தாக வேண்டும். ஆனால் தண்டனையளிக்கும் உரிமையை நாங்கள் சித்திரலேகாவுக்கே விட்டு விடுகிறோம்" என்று சொல்லி விட்டுத் தம் ஆசனத்தில் போய் அமர்ந்தார்.

குமாரகிரியின் கண்கள் கோபத்தில் ரத்தச் சிவப்பாகச் சிவந்தன.

"இந்தச் சபையிலே என்னைத் தோற்க அடிக்கக் கூடியவர் யாருமே கிடையாது. எனக்குத் தண்டனை யளிக்கும் துணிச்சல் யாருக்குமே ஏற்படவும் முடியாது" என்று சொல்லிக் குமாரகிரி வீறாப்புடன் தலை நிமிர்த்து கம்பீரமாக நின்றான்.

யோகியின் ரௌத்திராகாரமான உருவத்தைக் கண்டு அந்தச் சபை நடு நடுங்கி விட்டது. ஆனால் சித்திரலேகா சிறிதும் கலங்கவில்லை; 'கல கல' வென்று நகைத்தாள். அவள் வதனத்தில் புன்னகை தவழ யோகியின் அருகே சென்றாள். சபையில் அப்பொழுது இலேசாக ஆரவாரம் எழுந்தது. யோகியின் அருகில் போகும்பொழுது சித்திரலேகா பின்னணி வாத்தியக்காரர்களுக்கு ஏதோ ஜாடை காட்டினாள். குமாரகிரியின் அருகில் சென்றதும், "யோகி! உங்களுக்குத் தண்டனை அளிக்கும் பொறுப்பு என் தலையிலே சுமந்திருக்கிறது. உங்களுக்குத் தண்டனை அளித்தே தீருவது என்று நான் உங்கள் வரை வந்தும் விட்டேன். எனக்குத் துணிச்சல் இருக்கிறதா, இல்லையா என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிச் சித்திரலேகா தனக்குக் கிடைத்திருந்த வெற்றி மகுடத்தைத் தன் தலையிலிருந்து எடுத்துக் குமாரகிரியின் தலையிலே சூட்டினாள்.

அதே சமயம் சாரங்கியில் யமுனா கல்யாணி ராகம் வாசித்தது. சித்திரலேகா மின்னலைப் போலப் பாய்ந்து நடன மேடையிலே போய் நின்றாள். அடுத்த நிமிஷம் நடனம் ஆரம்பமாகி விட்டது. ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

குமாரகிரி வாய் அடைத்துப் போய் நின்றான். சித்திரலேகா மேடைக்குப் போன பிறகுதான் அவனுக்குத் தன் சுய உணர்வு வந்தது. ஜனங்கள் சந்தோஷ ஆரவாரம் செய்து கைதட்டுவதையும் அவன் கண்டான். "தண்டனையாம்! தோல்வியாம்! ஒரு கை பார்த்து விட்டுத்தான் மறு காரியம்!" என்று சொல்லிவிட்டு, வெகு வேகமாகக் கொலு மண்டபத்தை விட்டு வெளியேறினான் குமாரகிரி.



ஒன்பதாம் அத்தியாயம்

"வாழ்வதா, சாவதா?"

அவமானத்துக்கும் தோல்விக்கும் இலக்கான யோகிக்குப் புதியதோர் அநுபவம் ஏற்பட்டது. அந்த அநுபவத்தின் அதிர்ச்சி தாளாமல் அவன் களையிழந்து போய்விட்டான். 'நான் தோல்வியுற நேரும், அதுவும் ஒரு பெண்ணிடத்தில் தோல்வியுற

சேரும்' என்று அவன் கனவில்கூடக் கற்பனை செய்ததில்லை. அதிலும் அந்தப் பெண் யார்? மிகமிகச் சாதாரணமான ஒரு நடன மாது!

குமாரகிரியின் இதயத்திலே மாபெரும் புயல் எழுந்தது. அவன் தன் நிலைமையை நன்கு அலசி ஆராய்ந்தான். வெற்றி பெற்றும் அவன் தோல்வியுறும்படி அல்லவா ஆகிவிட்டது? ஏக சக்ராதிபதியான சந்திரகுப்த சக்கரவர்த்தியின் மகோன்னதமான மகத சாம்ராஜ்யத்தில் உள்ள மாபெரும் வித்வான்களை யெல்லாம் அவன் வெற்றி கொண்டு விட்டான். ஆனால் கடைசியில் மோகாந்த காரத்திலே மூழ்கிய, இருளே உருவெடுத்த ஒரு பெண்ணிடம் அல்லவா அவன் தோல்வியுறும்படியாகி விட்டது! இருளிடம் வெளிச்சம் தோல்வியுறுவதும், வெளிச்சத்தினிடம் இருள் தோல்வியுறுவதும் சகஜம்தான். பெண்ணிடம் பெரிய பெரிய சாதனையாளர்கள் கூடத் தோற்றுப்போய் விடவில்லையா? ஆனால் அவர்கள் தோற்றதற்கும் இவன் தோற்றதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் அல்லவா இருக்கிறது! அவர்கள் பெண்ணின் மனமோகன உருவத்திலே மதியைப் பறிகொடுத்துத் தோற்றனரே ஒழிய, அறிவிலே போட்டியிட்டுத் தோற்கவில்லை. ஆனால் குமாரகிரியின் நிலைமையோ மிகவும் விசித்திரமாகத்தானிருந்தது.

வெற்றி! தோல்வி! இரண்டும் சகஜம் தான். ஆனால் குமாரகிரிக்குக் கிட்டிய தோல்வி மிகவும் விசித்திரமாக அல்லவா இருந்தது! பெண் தன் அறிவினால் குமாரகிரியைத் தோல்வியுறச் செய்ததாகத் தெரியவில்லையே! அவன் தன் உதார குணத்தினால் அல்லவா அவனைத் தோற்க அடித்து விட்டான்! தங்கத்தாலாகிய அந்த வெற்றி மகுடம் குமாரகிரியின் தலையை இன்னும் அலங்கரித்துக் கொண்டுதானிருந்தது. சிந்தனையில் சித்தத்தைச் செலவிட்டுக் கொண்டிருந்த குமாரகிரிக்கு அந்த வெற்றி மகுடத்தின் நினைவு வந்தது. உடனே அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவன் அந்த மகுடத்தைத் தலையிலிருந்து கழற்றிச் சிதர்த் தேங்காய் போடுவதுபோலத் தன் பலம் கொண்ட மட்டும் ஓங்கித் தரையில் அடித்தான். அதன் பின்னர் அவன் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்தான். 'தோல்வி!'— இந்தச் சொல் அவன் அகராதியிலேயே கிடையாதே! வெற்றியின் பொருட்டுத் தானே அவன் இகலோகத்து இன்பங்கள் அனைத்தையும் உதறித் தள்ளினான்! வெற்றிக்காகத்தானே அவன் கடுந்தவமும் புரிந்தான்! அப்படியிருந்தும் அவனுக்கு இந்தத் தோல்வி ஏற்படக் காரணம்? குமாரகிரி எழுந்து நின்றான். "இல்லை, தோல்வி என்பது நடக்காத காரியம்; கனவிலும் நடக்காத காரியம். நான் தோல்வியுறுவதா? ஒரு பொழுதும் இல்லை. என் மாபெரும் சாதனைகள் அனைத்தும் இப்படித் தோல்வியிலா போய் முடியவேண்டும்? தோல்வியா? இல்லை. இல்லை, ஒருபொழுதும் இல்லை. ஒரு பொழுதும் தோல்வியில் முடியாது" என்று அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

குமாரகிரியின் பார்வை புழுதியிலே கிடந்த பொற் கிரீடத்தின்மீது விழுந்தது. சிறிது நேரம் வரை அவன் கண்கொட்டாமல் அந்த மகுடத்தையே பார்த்தவாறு நின்றான். "நீ தோல்வியுறவில்லை. உன்னைத் தோற்றவன் என்று யார் சொல்வது? நீதான் வெற்றி கொண்டாய்!" என்று அந்த மணி மகுடம் அவனைப் பார்த்துச் சொல்வது போல அவனுக்குத் தோன்றியது. யோகிக்குத் தன் உடலிலே ஒருவித மின் அலை பாய்வதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. குமாரகிரி மெதுவாக அந்த மகுடத்தினருகில் சென்று நின்றான். வெற்றி கலந்த தோல்வி! என்ன விசித்திரமான புதிர்! வெற்றிக் கென்று கிடைத்த இந்த வெகுமதியிலே எனக்குச் சிறிதேனும் உரிமை உண்டா? சபையில் கூடியிருந்தோர் அனைவரும் நான் அந்தப் பெண்ணிடம் தோல்வியுற்றதாகத் தானே கருதுவர்! இந்த வெற்றி மகுடமும் அந்தப் பெண்ணுக்குச் சூட்டப் பட்டதுதானே! ஆகவே இந்த மகுடம் எச்சில் பாண்டத்துக்கு ஒப்பானதுதான்!

இவ்வாறு எண்ணியதும் குமாரகிரி தன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அங்கிருந்து அப்பாற் சென்று விடுவதற்கும் அவன் முயன்றான். ஆனால் அவன் கால்கள் எழுந்தால்தானே? மகுடம் கீழேயே கிடந்தது. பிரகாசமான வெண்ணிலவு அதன் அழகைப் பன்மடங்கு அதிகமாக எடுத்துக் காட்டியது. குமாரகிரி மறுபடியும் அந்த மகுடத்தை ஒருமுறை பார்த்தான். ஆமாம், இந்த மகுடம் எனக்கு எப்படிக் கிடைத்தது? சபையினர் அனைவரும் எவனை வெற்றி கொண்டவன் என்று எண்ணுகிறார்களோ, அவளே தன்னைத் தோற்றவளாகக் கருதுகிறாள் என்றால், வெற்றி யாருக்கு? எனக்குத்தானே?—நடன ராணி! நீ தோல்வியை ஒப்புக்கொண்டாயே, எதற்காக?

இந்தக் கேள்வி எழுந்ததும் அவன் உள்ளமே அவனுக்குப் பதில் சொல்லிற்று: 'இது தெரியவில்லையா? உங்களிடம் அவள் தோற்று விட்டாள். அதனால் தான்!'

யோகி தனுக்குற்றுத் திரும்பினான். எதிரே சித்திரலேகா நின்று கொண்டிருந்தாள். அவளுடைய வதனத்திலே மந்தஹாஸம் தவழ்ந்து கொண்டிருந்தது; விழிகளும் சிரித்துக் கொண்டிருந்தன. "யோகி! விசித்திரமாக அல்லவா இருக்கிறது! தோற்றவன் மகிழ்ச்சியுறுவதையும், வெற்றி கொண்டவன் விசனிப்பதையும் இதுகாறும் நான் கண்டது மில்லை; கேட்டது மில்லை" என்றாள் சித்திரலேகா.

யோகி குமாரகிரி அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. மணி மகுடத்தையே உற்றுப் பார்த்தவாறு நின்றான்.

"இதென்ன இது! வெற்றி மகுடம் புழுதியில் கிடக்கிறதே! உங்களுக்கு உங்கள் வெற்றியில் சம்மதமில்லையா?" என்று கேட்டாள் சித்திரலேகா. அவளுடைய மந்தஹாஸம் மறைந்து விட்டது.

மிக மிகச் சிக்கலான கேள்வி! தன் மானம் படைத்த யோகிக்குத் தன் தோல்வியை ஒப்புக்கொள்வதென்றால் மனதுக்கு மிகவும் சிரமமாகத்தா னிருந்தது. ஆகவே, அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

சித்திரலேகா குனிந்து மகுடத்தை எடுத்தாள். "முரட்டுச் சுபாவம் படைத்த யோகியே! உங்களைத் தோல்வியுறச் செய்வது என்பது என்னால் ஆகாத காரியம். நான் சொல்வதை நம்புங்கள்!" என்று சொல்லி அந்த கிரீடத்தைக் குமாரகிரியின் தலையிலே வைத்தாள். விட்டெறிந்து விட்ட மகுடத்தை மறுபடியும் சூட்டிக் கொள்ள யோகி சிறிதும் தயங்கவில்லை; தடை சொல்லவும் இல்லை. அவன் கண்களை மூடிக் கொண்டு தீவிரமான சிந்தனையில் ஈடுபட்டு விட்டான்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் சித்திரலேகா.



குமாரகிரி தன் கண்களைத் திறந்து, "சித்திரலேகா! நீ என்னைத் தோற்க அடித்து விட்டதாக எண்ணுகிறாய். அதனால்தான் அடிக்கடி நீ என்னை அவமதிக்கவும் முற்படுகிறாய். ஆனால் உன் எண்ணமும் முயற்சியும் ஈடேறாது. அதெல்லாம் வீணே! யோகி உலகத்தைத் துறந்தவன். அவனுக்கும் மான அவமானத்துக்கும் யாதொருவிதமான சம்பந்தமும் இல்லை. நீ என் வீணில் பிரயாசைப் படுகிறாய்? பேசாமல் போய் வா!" என்றான்.

சித்திரலேகா சாந்தமான குரலில், "யோகி! நீங்கள் இப்படிப் பேசுவது சிறிதும் நன்றாயில்லை. உங்களைத் தோற்க அடிக்கும் திறமையோ சக்தியோ எனக்கு இல்லை என்பதை மீண்டும் நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள்!" என்று பதில் அளித்தாள்.

குமாரகிரி தன் கண்களைச் சித்திரலேகாவின் மீது புதைத்து ஊன்றிக் கவனித்தான். சிறிது நேரம் வரை அவன் அவள்மீது வைத்த கண்களை வாங்கவேயில்லை. களை மிழந்து வெளிறியிருந்த அவனுடைய முகம் குப்பென்று சிவந்தது. அசையாது நின்ற அவனுடைய உடல் சிலிர்த்தது. அவன் சித்திரலேகாவின் தளிர்க்கரங்களை இறுகப் பற்றிக்கொண்டு, "நடனராணி! உண்மையை ஒளிக்காமல் சொல். நீ நிழல் போல என் என்னைப் பின் பற்றி வந்தாய்? இங்கு வந்தும், இந்தமாதிரி என்னை அவமதிக்கத் துணிந்த உன் அந்தரங்க நோக்கம் என்ன?" என்று உணர்ச்சி மிகுந்த குரலில் கேட்டான்.

உணர்ச்சி மிகுதியினால் குமாரகிரியின் உடல் ஒரே ஆட்டமாக ஆடியது; குடல் குலுங்கியது. சித்திரலேகா அவனுக்கு வெகு சமீபத்தில் நின்று கொண்டிருந்தாள். அவள் கண்கள் குமாரகிரியின் கண்களிலே புதைந்தன. அகன்ற நீண்ட ஆலஸ்யம் ததும்பும் சித்திரலேகாவின் விழிகளிலே என்னதான் மனமோகன மந்திர சக்தி யிருந்ததோ, தெரியவில்லை. அவன் இளநகை பூத்து, "என்னை வெற்றி கொண்டவளைக்

குருவாக அடைந்து அவரிடம் தீக்ஷை பெற்றுப் போகும் நோக்கத்துடன் வந்திருக்கிறேன்!" என்று மிகவும் பவ்யமாகவே பதில் அளித்தான்.

• • •

கமகம வென்று வாஸனை வீசும் வசந்த காலம். உள்ளத்து உணர்ச்சிகளைக் கிளர்ச்சி கொள்ளச் செய்யும் இளந் தென்றல் வேறு கலந்திருந்தது. தண்மை மிக்க வெண்ணிலவு வேறு பால் போலக் காய்ந்து கொண்டிருந்தது. அது மட்டும் அல்ல; மினுக்கிப் பெண்கள் என்னும் பட்டம் பெற்ற நட்சத்திரக் கூட்டங்கள் அச்சம், நாணம் முதலிய அரும் பெரும் குணங்களை விட்டுக் கண்களைச் சிமிட்டிக் காதல் உணர்ச்சியைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தன. ஜன சஞ்சாரமற்ற அந்தப் பிரதேசத்திலே, அமைதி நிலவிய அந்த நடுநிசி வேளையிலே, யோகி குமாரகிரியின் எதிரே நடன ராணி சித்திரலேகா மட்டும் நின்று கொண்டிருந்தாள்.

குமாரகிரியின் ஆவேசம் அடங்கிவிட்டது. அவன் பயந்து போய்ச் சற்றுப் பின்னால் நகர்ந்தான். பிறகு மிகவும் மெதுவான குரலில், "சுந்தரி! என்னிடம் தீக்ஷை பெறுவ தென்றால் என்ன அர்த்தம் என்பதைப் பற்றி நீ எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா?" என்று கேட்டான்.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் சித்திரலேகா சிரித்துவிட்டாள். அவளுடைய சிரிப்பிலேதான் என்ன இனிமை! என்ன இனிமை! அந்தச் சிரிப்பிலே இருந்த கவர்ச்சியை இன்னிசையின் இன்பப் பிரவாகத்திலேதான் காண முடியுமா?

"ஒரு முறை அல்ல; பல முறை சிந்தித்துப் பார்த்ததுண்டு!" என்று வெகு துடுக்காகப் பதில் அளித்தாள் அவள்.

குமாரகிரி தன் பார்வையைச் சித்திரலேகாவின் மீதிருந்து திருப்பினான். "நான் சொல்வது இன்னும் உனக்குச் சரியாக விளங்கவில்லை என்றுதான் தோன்றுகிறது. என்னைக் குருவாக ஏற்றுத் தீக்ஷை பெறுவ தென்றால் என்ன அர்த்தம் தெரியுமா? எந்தச் சோம்பேறித்தனத்தைக் கண்டு நீ சிரிக்கிறாயோ, அந்தச் சோம்பேறித்தனத்தை நீ உன் வாழ்க்கையில் நடைமுறையில் கொண்டுவர வேண்டும். வறண்ட சாதனை என்று சொல்லிக் கேலி செய்கிறாயே, அந்த வறண்ட சாதனையில் உன் உடலை வாட்டி வதைக்க வேண்டும். இது உனக்குச் சம்மதமா?" என்று கேட்டான்.

சித்திரலேகா மௌனம் சாதித்தாள். 'என்ன பதில் சொல்வது?' என்ற சிந்தனையில் லயித்து விட்டது அவளுடைய மனம். நடன மாதாயிருந்த பொழுதிலும், தர்சன சாஸ்திரத்தின் விபரீதமான சித்தாந்தங்களுக்கு அடிமையாக இருந்தபொழுதிலும், சித்திரலேகாவுக்குப் பொய் சொல்லியே பழக்கம் இல்லை. அவளுடைய ஆத்மா 'இல்லை' என்ற பதிலைச் சொல்லிற்று. உள்ளம் 'சம்மதம்' என்று சொல்லும்படித் தூண்டிற்று. அவ்விரண்டுக்கும் இடையே எழுந்த போராட்டத்திலே கடைசியில் இதயத்துக்குத்தான் வெற்றி கிட்டியது. உள்ளத்திலே உதித்த உணர்ச்சியின் வசப்பட்டுச் சித்திரலேகா வாழ்க்கையிலேயே மாபெரும் பொய் சொல்லும்படியாகி விட்டது. "யோகி! நான் அதற்கெல்லாம் தயாராகித்தான் தங்களை நாடி வந்திருக்கிறேன்" என்று அவள் தைரியமாகச் சொல்லியும் விட்டாள்.

"இதற்கெல்லாம் தயாராகித்தான் வந்திருக்கிறாயா?"

இந்தக் கேள்வியைக் கேட்ட குமாரகிரி களையிழந்து பேய் அறைந்தவன் போலக் காணப்பட்டான்.

(தொடரும்)



மனைவி:—எதிர் வீட்டிலே புதிசாகக் குடி வந்திருக்காளே, அவர்கள் பெரிய பணக்காரர்களாக்கும்!

கணவன்:—உனக்கு எப்படி அது தெரிந்தது?

மனைவி:—அந்த வீட்டு மாமிக்கு ஹிஸ்டீரியா; வீட்டு மாமாவுக்கு டயபிடீஸ்; அவர்களுடைய பெண்ணுக்கு உடம்பு சரியாயில்லை!

நீலக்கல் மோதிரம்



என். கிருஷ்ணம்மாள்

"என்ன விஜயா! நாம் இரண்டு பேரும் இன்று மாலை எக்ஸிபிஷனுக்குப் போய் வரலாமா?" என்று ஆவலுடன் தன் மனைவியைக் கேட்டான் ராகவன்.

"ஆஹா! அதற்கென்ன! கரும்பு தின்னக் கூலியா கேட்பேன்?" என்றாள் விஜயா.

"அடேயப்பா, எவ்வளவு ஆனந்தம்! இதோ பார் விஜயா! சரியாக நாலரை மணிக்கு 'டிரஸ்' பண்ணிக் கொண்டு தயாராக இருக்கணும். ஆபீஸிலிருந்து நான் வந்தவுடன் கிளம்ப வேண்டும்! தெரியுமா?"

"நான் தயாராகத் தானிருப்பேன். நீங்கள் தான் மறந்து போய் ஆறுமணிக்கு ஆபீஸிலிருந்து வருவீர்கள். நான் ஏமாந்து போவேன். நீங்கள் சிரிப்பீர்கள். அப்படித் தானே?" என்று ராகவனைப் பார்த்துக் குறும்பாய்க் கேட்டாள் விஜயா.

"அடேடே! என் விஜயாவுக்கு கேலி கூடப் பண்ணத் தெரிகிறதே! இன்றைக்கு அப்படி ஏமாற்றம் ஒன்றும் ஏற்படாது. நீ மட்டும் வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு ஜோராக டிரஸ் செய்துகொண்டு தயாராக இருக்கணும். —நான் வரட்டுமா?" என்று கேட்டுக் கொண்டு அவள் தந்த வெற்றிலைச் சுருளையும் வாயில் போட்டுக் கொண்டு, ஆபீஸுக்குப் புறப்பட்டான் ராகவன்.

• • •

நல்ல வேளையாய் அன்று ஆபீஸில் வேலை அதிகம் இல்லாததால், குறித்த வேளைக்கு முன்பாகவே வீட்டுக்குத் திரும்ப முடிந்தது ராகவனுக்கு.

வீட்டு வாசலில் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் விஜயாவை நினைத்துக் கொண்டவுடன் அவன் மனம் குதூகலித்தது. பக்கத்திலிருந்த புஷ்பக் கடையில் நான்கு அணாவிற்குக் கதம்பமும் மல்லிகைச் சரமும் வாங்கிக் கொண்டான்.

வீடு வந்து சேர்ந்த ராகவன் விஜயா அன்புடனளித்த காப்பியைப் பருகிக் கொண்டே "தயாராய் விட்டாயா, விஜயா?" என்று கேட்டான்.

"இதோ ஆச்சு! கதவைப் பூட்டவேண்டியதுதான் பாக்கி!" என்று கூறிய படியே அவன் கையிலிருந்த காப்பி டம்ளரை வாங்கிக் கொண்டாள்.

அப்பொழுது அவள் கையை நன்றாய்க் கவனித்த ராகவன் "ஏன் விஜயா! நீ மோதிரம் போட்டுக் கொள்ளவில்லையா?" என்று கேட்டான்.

இதைக் கேட்டவுடன் விஜயாவின் முகத்தில் வருத்தக்குறி தோன்றி மறைந்தது.

"நான் மோதிரம் போட்டுக் கொள்வதே இல்லையென்று சபதம் செய்திருக்கிறேன்" என்று மெல்லிய குரலில் கூறினாள்.

"அடே! அது என்ன சபதம்!" என்று கேட்டு விட்டுச் சிரித்தான் ராகவன்.

"கேலி பண்ணுகிறீர்கள். ஏதோ எனக்குப் பிடிக்கவில்லை; போட்டுக் கொள்ளவில்லை! அவ்வளவுதான்! பேசிக் கொண்டேயிருந்தால் அப்புறம் பஸ் தவறிவிடும். சீக்கிரம் புறப்படுங்கள்!

"பரவாயில்லை! அடுத்த பஸ்ஸில் போகலாம்! உன் சபதத்தின் விவரத்தை எனக்குச் சொல்ல வேண்டும்!" என்று பிடிவாதம் செய்தான் ராகவன்.

• • •

விஜயா சொல்ல ஆரம்பித்தாள்.

"ஆறு வருஷத்திற்கு முன் என் அப்பாவிடம் ஒரு வைர வியாபாரி வந்தான். அவனிடத்தில் ஒரு நீலக்கல் இருந்தது. ஜாதி நீலமான அது இருக்கும் இடத்தில் அஷ்ட ஐஸ்வர்யமும் பொங்கும் என்று அவன் கூறினான். அப்பாவுக்குச் சபலம் தட்டியது. ஏழுநூற்றைம்பது ரூபாய் கொடுத்து அந்த நீலத்தைத் தாமே வாங்கிக் கொண்டார். தட்டானிடம் கொடுத்து ஒரு அழகான மோதிரமாகச் செய்து தரச் சொன்னார். அப்பாவின் துரதிர்ஷ்டம் அம் மோதிரம் அவர் விரலுக்குச் சற்று சிறியதாக அமைந்து விட்டது. ஆகவே அதை அருமைப் பெண்ணான எனக்கு அணிந்து விட்டார். எனக்கு அம் மோதிரம் அளவில் பெரியதாயிருந்தது. உடனே என் மனதில் ஓர் எண்ணம் தோன்றிற்று—"

ராகவன் குறுக்கிட்டு "என்ன எண்ணம்! மோதிரத்தைச் சிறிது பண்ணவா?

அன்றி விரலைப் பருக்க வைக்கவா?" என்று கேட்டான்.

"போங்கோன்னு! அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு வரும் கணவர் சிவப்பாயிருந்தால் அவர் விரலில் இந்த மோதிரம் என்னமாய் ஜொலிக்கும் என்ற எண்ணம்தான் தோன்றிற்று" என்று கூறிக்கொண்டே நாணத்தினால் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். அவள் உதட்டில் வெட்கம் கலந்த புன்னகையொன்று அரும்பியது.


ராகவன் அந்த அழகை ரசித்துக் கொண்டே "அப்படியானால் நான்தான் அதிர்ஷ்டக் கட்டை போலிருக்கிறது. கல்யாணமாகி இரண்டு வருஷமாகியும் மோதிரம் என்விரலில் ஜொலிக்கவில்லையே!" என்று அன்புடன் கேட்டான் ராகவன்.

"என்ன செய்வது! என் துரதிஷ்டம் நானே அந்த மோதிரத்தைத் தொலைக்கும்படி ஆய்விட்டது"

"என்ன! தொலைத்து விட்டாயா?"

"ஆம். அன்றும் இதுபோல் எக்ஸிபிஷனுக்குப் போவதாகத் தீர்மானித்தோம். நீல மோதிரத்தின் மேலுள்ள அபார ஆசையால் அதை நான் அணிந்து கொண்டேன். அம்மா சொன்னாள்: 'அதைப் போட்டுக் கொள்ளாதே விஜயா! உன் விரலுக்குச் சரியாயில்லை. எங்காவது நழுவி விழுந்துவிடும்' என்று. ஆனால் அம்மா சொன்னதை நான் கேட்கவில்லை. மோதிரத்தோடுதான் புறப்பட்டேன். 'எக்ஸிபிஷ'னையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு, வேண்டிய சாமான்களையும் வாங்கிக் கொண்டு காரில் ஏறும் சமயம் என் விரலைப் பார்த்தேன். அங்கே மோதிரத்தைக் காணோம். வயிற்றைப் 'பகீர்' என்றது. என் கலக்கத்தைக் கவனித்த அம்மா விஷயத்தைப் புரிந்து கொண்டாள். அப்பா காதில் எட்டியதும், அவருக்கு அசாத்தியக் கோபம் உண்டாயிற்று. பதினைந்து வயதுப் பெண்ணான என்னை அப்பாவால் என்னதான் செய்ய முடியும்? அதுவும் ஒரே செல்லப் பெண். நான் பிள்ளையாய் மட்டு மிருந்திருந்தால் கை சலிக்கு மட்டும் அடித்தாவது ஆத்திரத்தைத் தணித்திருப்பார். 'சரி, அவள் அதிர்ஷ்டம் அவ்வளவுதான்! துப்புக் கெட்ட ஜன்மங்களுக்குச் செய்வது கடைசியில் இப்படித்தான் வந்து முடியும். எவனாவது மோதிரத்தை அடித்துக் கொண்டு போயிருப்பான். சரி, காரை விடு, டிரைவர்!' என்று உத்தரவிட்டார். எனக்கு அழுகை அழுகையாய் வந்தது. 'தேடிப் பார்க்க வேண்டாமா?' என்று மெள்ளக் கேட்டாள் என் அம்மாள். அவ்வளவுதான்! என் மீதுள்ள ஆத்திரத்தையெல்லாம் வழி நெடுகில் அம்மாவிடம் காட்டினார் அப்பா. 'தேட வேண்டுமா? நீ போய்த் தேடு! இவ்வளவு அஜாக்கிரதையான பெண்ணைப் பெற்றதற்கு உனக்கு வாய் வேறு வேண்டுமா?' என்று சீறினார்—"

ராகவன் இடைமறித்து "பேஷ்! அஜாக்கிரதையான பெண்ணைப் பெற்ற





அக்கிராசனர் :— சபையோர்களே, இன்றைக்குப் பாடின வித்வானைப் பற்றி என்னை இரண்டு வார்த்தை பேசச் சொன்னார்கள். எனக்குச் சங்கீதத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. நான் நிரபராதி; ஆகையினால் பேசத் தைரியம் வரவில்லை.

சபையில் ஒருவர் :—சும்மா தைரியமாகப் பேசுங்க! இன்று பாடின வித்வானுக்கும் சங்கீதத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. இந்தச் சபையில் இருப்பது நாங்கள் நாலுபேர் தான். அதில் எங்கள் மூவருக்கும் சங்கீதத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. என் பக்கத்தில் இருப்பவருக்குக் காது செவிடு! சும்மாப் பேசுங்க!

குற்றம் உன் அப்பாவுக்கு மட்டும் இல்லையா?" என்று சிரித்தான்.

"போதும் உங்கள் கேலி! அப்புறம் எனக்குக் கோபம் வரும்!"

"சே! சே! கோபித்துக் கொள்ளாதே, தேவி! மீதிக் கதையையும் சொல். அடுத்த பஸ்ஸிலாவது இடம் பிடிக்க வேண்டும்."

"எல்லாம்தான் சொல்லி யாச்சே! இன்னும் என்ன பாக்கி யிருக்கிறது? மோதிரம் காணாமற் போனதற்காக மூன்று நாள் நான் பட்டினி இருந்தேன். அவ்வளவுதான். சரி, நேரமாகிறது. சீக்கிரம் போகலாம் எழுந்திருங்கோ!"

"பேஷ்! அதற்குமேல் உன்னுவிரதம் இருக்க வயிறு சம்மதிக்கவில்லையாக்கும்?" என்று கூறிக்கொண்டே நாற்காலியி லிருந்து எழுந்து, "அப்புறம் உன் சபதம்?" என்று கேட்டான்.

"அன்றிருந்து மோதிரம் போட்டுக் கொள்வதில்லை யென்று சபதம் செய்தேன். அதற்கடுத்த மாதம்தான் உங்களுக்கும் எனக்கும்........."

"விவாகம் நடந்தது. அப்படித்தானே!" என்று கலகல வென்று சிரித்தான் ராகவன்.

விஜயாவும் சிரித்துக்கொண்டே, "இப்பொழுது உங்களுடைய அழகான விரல்களைப் பார்த்தால் அடிக்கடி அந்த மோதிரத்தின் ஞாபகம் எனக்கு வருகிறது. என்ன செய்வது? நான் கொடுத்து வைக்கவில்லையே!" என்றாள்.

"யார் சொன்னது, கொடுத்துவைக்க வில்லை யென்று? என்னிடம்தானே இரண்டு வருஷமாய்க் கொடுத்து வைத்திருந்தாய்!" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று தன் பெட்டியைத் திறந்து ஒரு மோதிரத்தை எடுத்து "இது தானா பார்!" என்றான் விஜயாவிடம்.

"ஆம்! இதுவேதான்! இது எப்படி உங்களிடம் வந்தது?" என்று விஜயா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"எப்படி வந்ததா? தெய்வம் கொடுத்தது! எக்ஸிபிஷனில் 113-வது ஸ்டாலுக் கருகில் தரையில் என் காலைக் குத்தி, 'ஏ மனிதா! என்னைப் பார்க்காமல் போகிறாயே? என்னை எடுத்துக்கொண்டுபோய் என் தலைவியிடம் சேர்த்துவிட மாட்டாயா? உனக்குக் கோடிப் புண்ணியமுண்டு!" என்று கூறியது. கீழே குனிந்து அதை யெடுத்து வீட்டிற்குக் கொண்டு வந்தேன். அப்புறம் அதைப் பற்றி மறந்தே போய் விட்டேன்."

"அடாடா! எவ்வளவு ஞாபக சக்தி!"

"உஸ்! அதை அப்புறம் பேசிக் கொள்ளலாம்! முதலில் கையைக் காட்டு! இப்போ இந்த மோதிரத்தைப் போட்டால் எக்ஸிபிஷனில் தொலைக்காமற் வருவாயா என்று பார்க்கலாம்!"

"ஊஹூம், மாட்டேன். அதை நான் அன்றே உங்களுக்குக் கொடுத்தது போலத்தான். எனக்கு வேண்டாம். எங்கே, அதைக் கொடுங்கள், உங்கள் விரலில் நான் போட்டுப் பார்க்கிறேன்" என்று அந்த நீலக் கல் மோதிரத்தை ஆசையுடன் வாங்கித் தன் கணவன் கை விரலில் அணிவித்தாள் விஜயா.

கம்பர் தரும் காட்சி

பி. ஸ்ரீ.

274. பலே! நல்ல காரியம் செய்தாய்!

அங்கதன் ராமனுடைய தியாகத்தையும் குணநிசயங்களையும் அனுபவித்து, ராமனை தெய்வமாகவே கருதிப் பணி செய்து வருகிறான்.

ராவணன் அங்கதனைப் பார்த்து, "நீ யாருடைய தூதன்?" என்று கேட்ட பொழுது, "லோகநாதனாகிய ராமன் விட்ட தூதன்" என்று சொன்னான்.

"அழகு! அழகு! உன்னுடைய லோகநாயகன் 'இனியாவது ராவணன் இரங்கமாட்டானா?' என்று ஒரு நம்பிக்கையோடு உன்னையும் தூது விட்டிருக்கிறானே; அவனையா லோகநாதன் என்று சொல்லுகிறாய்?" என்று சொல்லி நகைத்தான்.

* * *

அடுத்தாற்போல் "சிவபெருமான் என்ன, திருமால் என்ன, அவர்களே இந்த இடத்துக்கு வர பயப்படுவார்களே! பயப்படாது இங்கு வந்திருக்கிறாயே நீ, வியப்பாகத்தான் இருக்கிறது!" என்றான்.

கங்கையும் பிறையும்சூடும்
கண்ணுதல், காத்துநே மி
சங்கமும் தரித்தமால், மற்(று)
இந்நகர் தன்னைச்சா ரார்;
அங்கவர் தம்மையன் றி,
மனிசனுக் காகஅஞ் சா(து)
இங்குவந்(து) இதனைச் சொன்ன
தூதன்நீ யாவன்?'என் றான்.

[கங்கையும் பிறையும் சூடும் கண்ணுதல்: சிவபெருமான்; காத்துநேமி சங்கமும் தரித்த மால்: கையில் சக்ராயுதத்தையும் சங்கையும் கொண்டுள்ள திருமால்; இந்நகர் தன்னைச் சாரார்: அத்தகைய மாபெரும் சக்தி வாய்ந்த மூர்த்திகளும் இந்த நகருக்குள் வரப் பயப்படுவார்கள்; அங்கவர் தம்மை யன்றி மனிசனுக்காக: சிவன் விஷ்ணு இவர்களுக்காக ஏதோ இங்கு வந்தாய் என்றாலும் கொஞ்சம் பொருள் உண்டு. கேவலம் மனிசனுக்காகத் தூதன் என்று வந்திருக்கிறாயே பயமில்லாமல், யாரப்பா கொஞ்சம் சொல்லேன்!]

* * *

அங்கதன் பதில் சொல்லுகிறான். ராவணனை இன்னார் என்று தனக்குத் தெரியாதது போலப் பேசுகிறான். தெரியாதது போல் பேசுகிறது ஒரு ஹாஸ்ய பாவத்தில் தான்.

வெகு காலத்துக்கு முன்பு இந்திரனுடைய மகன் என்று பெயர் வாங்கியவன் ஒருவன் இருந்தான். அந்தக் காலத்தில் ராவணன் என்று ஒருவனும் இருந்தான். அந்த ராவணனை உடலும் தோள்களும் நெறு நெறு என்று நெறியும்படி வாலினால் சுற்றிக் கட்டினான், அந்த இந்திரனுடைய மகன். இதை மனசில் வைத்துக் கொண்டு விஷயத்தைக் கேள்—என்று சொல்லுகிறான் அங்கதன்.

'இந்திரன் செம்மல்பண்(டு), ஓர்
இராவணன் என்பான்தன் னைச்
சுந்தரத் தோள்களோ டும்
வாலிடை தூங்கச் சுற் றி,
சிந்துறக் கிரிகள்,தா வித்
திரிந்தவன்,—தேவர்உண் ண
மந்தரக் கிரியால்வே லை
கலக்கினான் மைந்தன்'என் றான்.

[வாலிடை தூங்கச் சுற்றி: கட்டுண்ட ராவணன் வாலோடு வாலாய்த் தொங்கிக் கிடக்கும் படியாகச் செய்து; சிந்துறக் கிரிகள்: மலைகள் எல்லாம் சிந்திச் தகர்ந்து போகும் படியாக; தாவித் திரிந்தவன்: மலைகள் மேல் தாவித் தாவித் திரிந்தவன் (வாலி); தேவர் உண்ண மந்தரக்கிரியால் வேலை கலக்கினான்: அந்த வாலியின் திறமையையும் பராக்கிரமத்தையும் சொல்ல வேண்டுமானால் திருமால் பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதுண்ணச் செய்தானே அதைத்தான் சொல்ல வேண்டும். அப்படிக் கலக்கியவனாகிய வாலியின் மகன் தான்.

குறிப்பு:—'இந்திரன் செம்மல்' என்றும், 'வேலையைக் கலக்கினான்' என்றும் சொல்லி, வாலியின் பெயரைச் சொல்லாமல் விட்டிருக்கிறது பாடலில். பெயர் சொல்ல வேண்டியது அனாவசியம் என்பது குறிப்பு. ஆனால்



ராவணன் பெயரைச் சொல்லி யிருக்கிறது: ராவணன் ஏதோ அனாமதேயப் பேர்வழி என்ற குறிப்பில் சொல்லி யிருக்கிறது.]

• • •

ராவணனுக்கு வாலி மகாவீரன் என்பது தெரியும். அவனுடைய மகனும் அப்படித்தானே இருக்க வேண்டும் என்று அனுமானித்துக் கொண்டான். 'சரி, சரி, இவனைக் குஷிப்படுத்தி நம்முடன் சேர்த்துக் கொள்வதுதான் யுக்தி!' என்ற முடிவுக்கு வந்து பேசுகிறான்.

"அடடா! நீ வாலியின் மகனா? பேஷ், பேஷ்! அந்த வாலி எனக்கு உற்ற தோழன் அல்லவா? அதைப் பற்றி நீ சந்தேகங் கொள்ள வேண்டாம். அதற்கு வேண்டிய சான்று இருக்கிறது.

"ஆனாலும், உன்னிடம் சொல்லத்தான் வேண்டும். அந்த ராமனுக்கு அல்லவா 'தூதன் என்று நீ வந்திருக்கிறாய். இதை விடக் கேவலமான காரியந்தான் உண்டா?"

'உந்தைஎன் துணைவன்அன் றோ;
ஒன்றுநற் சான்றும்உண் டால்;
நிந்தனை இதன்மேல்உண் டோ,
நீயவன் தூதன்ஆ னால்!—
தந்தனன் நினக்குயா னே
வானரத் தலைமை,தாழா
வந்தனை. நன்றுசெய் தாய்;
என்னுடை மைந்த!'என் றான்

[உந்தை என் துணைவன் அன்றோ: உன் தந்தை வாலி அடடா, எனக்கு உற்ற தோழனல்லவா; ஒன்றும் நற்சான்றும் உண்டால்: அதற்குச் சரியான சாட்சியமும் இருக்கிறது. (அவன் பெயரை வைத்து மாளிகை கட்டியிருக்கிறேன்; அவனுடைய பக்தி வழிபாட்டிற்காகச் சிவன் கோவில் கட்டியிருக்கிறேன். இதை விடவா சாட்சியம் வேண்டும்.) நிந்தனை இதன்மேல் உண்டோ: உனக்கு இதை விடக் கேவலமான காரியம் ஒன்று ஏற்படவா செய்யும் — நீ அந்தப் பகைவனை ராமனுடைய தூதன் என்று ஏற்பட்டு விட்டால்; வானரங்களுக்கான தலைமைப் பதவியை உனக்கு நானே இதோ கொடுக்கிறேன். தாழா வந்தனை நன்று செய்தாய்: தாமதம் செய்யாமல் வந்து விட்டாயே, ரொம்ப நல்ல காரியம்! என்னுடை மைந்த என்றான் : என்னுடைய அருமை மகனே— என்றான் ராவணன்.

அங்கதன் ராவணனை எவ்வளவோ இகழ்ந்து பேசினான். பூர்வ சரித்திரத்தை அதற்காகக் கிளறினான். ராவணனுக்கு எவ்வளவோ கோபம் வரத்தானே செய்யும்? ஆனாலும் அந்தக் கோபத்தை யெல்லாம் அடக்கிக் கொள்கிறான். பயத்தினால்தான். அங்கதன் ராமன் பக்கத்தில் இருந்தால் காரியம் மோசந்தான் என்று எண்ணுகிறான். அதற்கேற்ற வாறாகப் பேச்சு வருகிறது ராவணனுக்கு.

ஞாபக மறதி

என். என்.

சில நாட்களுக்கு முன் வெளி வந்த ஒரு ஹாஸ்யத் துணுக்கைப் படித்திருப்பீர்கள். ஒருவன் தன்னைப் பற்றித் தனது நண்பர்களிடம் சொல்லிக் கொண்டானாம்: "பள்ளிக்கூடத்தில் படித்தபோது எனக்கு மூன்று பரிசுகள் கிடைத்தன. ஒன்று எனது ஞாபக சக்திக்காக; இன்னொன்று கணக்கில் நான் அதிக மார்க்குகள் வாங்கியதற்காக; மூன்றாவது பரிசு எதற்காகக் கிடைத்தது என்பது எனக்கு இப்போது ஞாபகமில்லை."

ஞாபக மறதி என்பது சாதாரணமாக எல்லோருக்கும் ஏற்படக் கூடியதுதான். எவ்வளவோ ஞாபக சக்தியுடன் பல விஷயங்களில் கவனம் செலுத்துபவர்களுக்கும் சில சமயங்களில் பல சில்லறை விஷயங்களில் ஞாபகமறதி ஏற்படுவது சகஜமே. அவசரமாகச் செய்யப்படும் காரியங்களில் ஞாபகப் பிசகு ஏற்படுவது இயற்கை. உதாரணமாக, ரயிலுக்குப் புறப்படும் அவசரத்தில் நாம் வெகு கவனமாக எடுத்துவைத்த ஒரு சாமானை மறந்துவிட்டுக் குடல் தெறிக்க ரயில்வே ஸ்டேஷனுக்கு எத்தனை தடவைகள் ஓடியிருக்கிறோம்! 'கல்யாணச் சந்தடியில் தாலி கட்ட மறந்த'தைப் பற்றிக் கூடக் கதை சொல்லக் கேட்டிருக்கிறோம்! அது உண்மையாகத்தான் இருக்கவேண்டும்.

உலகத்தில், சாதாரணமாக வயது அதிகரிக்க அதிகரிக்க, ஞாபக சக்தி குறைகிறது என்று சாஸ்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். அதனால்தானோ என்னவோ, கிழவர்கள் தங்களுடைய மூக்குக் கண்ணாடியையோ, பொடி டப்பியையோ, எங்கே வைத்தோம் என்பது ஞாபகமில்லாமல், தேடித் திண்டாடுவதை அடிக்கடி காண்கிறோம்! நடுத்தர வயது தாண்டுவதற்குள்ளாகவே சில ஆசாமிகள் மிகவும் ஞாபக மறதியுடன் நடந்து கொள்வதும் உண்டு. சில நிமிஷங்களுக்கு முன்பாகத் தங்கள் கையில் வைத்துக் கொண்டிருந்த ஒரு சாமானை எங்கேயாவது வைத்துவிட்டு இந்தப் பிரகிருதிகள் விழித்துக் கொண்டிருக்கும் காட்சிகளை எவ்வளவோ சந்தர்ப்பங்களில் பார்க்கலாம்! எனது ஆபீஸில் வேலை செய்துவரும் ஒரு குமாஸ்தாவுக்கு வயது நாற்பதுகூட ஆகவில்லை. மாதத்திற்குச் சராசரி இரண்டு ஜோடி செருப்புக்கள், பத்து நாட்களுக்கு ஒரு பென்சில், மூன்று மாதங்களுக்கு ஒரு குடை வீதம் ஞாபக மறதியின் காரணமாக அவர் தொலைத்துக் கொண்டு வருகிறார் என்றால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். மத்தியானம் ஆபீஸில் சாப்பிடுவதற்காக அவர் மனைவி அன்புடனும் அதிகப் பிரயாசையுடனும் தயார் செய்து தரும் டிபனை அவர் எத்தனை தடவைகள் டிராமிலும், பஸ்ஸிலும் ஞாபகப் பிசகாக விட்டு விட்டு வந்திருக்கிறார் என்பது எனக்குத்தான் தெரியும்! அப்படித் தப்பித் தவறி ஞாபகத்துடன் (பஸ்ஸிலோ டிராமிலோ தவற விடாமல்) அந்த டிபனை ஆபீஸிற்குக் கொண்டுவந்து சேர்த்த நாட்களில், எத்தனையோ தடவை, அதை மறந்துவிட்டு, ஹோட்டலுக்கு எங்களுடன் அவர் காப்பி சாப்பிட வந்திருக்கிறார்!

* * *

ஞாபக மறதியை விளக்கி எத்தனையோ விதவிதமான ஹாஸ்யத் துணுக்குகளையும் கதைகளையும் படித்திருக்கிறோம்.

ஊருக்குப் போகும் ஆசாமி, ரயிலில் ஏறும் தருணத்தில் ஞாபகமறதியாக மனைவியிடம் சில்லறையைக் கொடுத்துவிட்டு, சாமான்களைத் தூக்கிவந்த போர்ட்டருக்கு அன்புடன் முத்தம் கொடுத்ததாக மேல் நாட்டு ஹாஸ்யத் துணுக்கு ஒன்று உண்டு.

வெளியே சென்றிருந்த ஞாபகமறதியுள்ள ஒரு புரொபஸர் தன் வீட்டிற்குத் திரும்பி வந்து வாசலில் நின்று கொண்டு தன் பெயரையே சொல்லிக் கூப்பிட்டாராம். வீட்டிற்குள்ளிருந்து "புரொபஸர் வெளியில் போயிருக்கிறார்" என்ற பதில் வந்ததும், "ஓஹோ, அப்படியானால் அப்புறம் வந்து பார்க்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே அவர் வெளியே நடந்தாராம்!

ஞாபக மறதிக்குப் பிரசித்திபெற்ற மற்றொரு புரொபஸர் ஒருசமயம் வாயில் சிகரெட்டை வைத்துப் புகைபிடித்த வண்ணம் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாராம். நடுவில் ஏதோ யோசனையிலாழ்ந்திருந்து விட்டுப் பிறகு, திடீரென்று பேனாவுடன் பேனாவை வாயில் வைத்துக்கொண்டு, எரிந்து கொண்டிருந்த சிகரெட்டால் வெகு வேகமாக

எழுத வாரம்பித்தாராம். ஒன்றிரண்டு நிமிஷங்கள் கழித்து, எதிரிலிருந்த காகிதம் நெருப்புப் பிடித்து எரியத் தொடங்கிய பின்னர்தான் அவருக்குத் தன் ஞாபகப் பிசகான காரியம் உணர்வுக்கு வந்ததாம்!

இன்னும் இவை போல் எத்தனையோ ஹாஸ்யத் துணுக்குகளைப் படித்துப் படித்துச் சிரித்திருக்கிறோம்!

* * *

சில பிரகிருதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சில விஷயங்கள் நன்றாக ஆணித்தரமாக ஞாபகத்தில் இருக்கும். சில விஷயங்களை வெகு லாகவமாக மறந்துவிடுவார்கள். உதாரணமாகத் தாங்கள் கொடுத்த கடனை வெகு ஞாபகமாகக் கேட்பார்கள். தாங்கள் வாங்கிய கைமாற்றுப் பணத்தைப் பற்றி அடியோடு மறந்து விடுவார்கள்! இந்தக் காரிய வாதிகளைப் பற்றி என்னவென்று கூறுவது?

ஞாபக மறதி சில சந்தர்ப்பங்களில் நமக்குச் சமய சஞ்சீவியாக உதவுகிறது. வேண்டுமென்றே ஒரு காரியத்தை (நமக்கு இஷ்டமில்லா விட்டால்) செய்யாமலிருந்து விட்டு, யாராவது கேட்டால், "அடடா, மறந்தே போய்விட்டேன்!" என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம். வீட்டில் மனைவி வாங்கிக் கொண்டு வரச் சொல்லும் முகப் பௌடர், 'ஸ்நோ', 'க்ரீம்' முதலிய சாமான்களை எத்தனை தடவை நாம் வேண்டுமென்றே பேசாமலிருந்து விட்டு, வீட்டுக்கு வந்தவுடன், "அடடா, மறந்தே போய்விட்டேன்! நாளைக்குக் கட்டாயம் வாங்கி வருகிறேன்!" என்று சொல்கிறோம்.

ஸ்திரீகளுக்கு, முக்கியமாக மனைவிக்கு சாதாரணமாக ஞாபக மறதி இருப்பதில்லை என்று தெரிகிறது. ஞாபகமறதி ஏற்படக் கூடியவர்களாயிருந்தால் நாமும், நமது தாயார், சகோதரி முதலியவர்களும் செய்த காரியங்களைப் பற்றியும், சொன்ன வார்த்தைகளைப் பற்றியும் அவர்கள் எப்படி எத்தனை வருஷங்களானாலும் ஒரு வார்த்தை மறக்காமல், திருப்பித் திருப்பி நமது முகத்தில் அறைவது போல எடுத்துச் சொல்லிக் கொண்டே இருக்க முடியும்!

பிறர் நமக்குச் செய்த நன்மைகளைப் பற்றியே நினைக்க வேண்டும்; அவர்கள் நமக்குச் செய்த தீமைகளை மறந்துவிட வேண்டும் என்று வேத நூல்களும், மூதுரைகளும் சொல்கின்றன. ஆனால், நடைமுறையில் இது தலைகீழாகத் தான் இருக்கிறது. நமக்குப் பிறர் செய்த நன்மைகள் வெகு சீக்கிரத்தில் மறந்து போய் விடுகின்றன. ஆனால், அவர்கள் செய்த ஒரு சிறிய தீமை கூட நம் நெஞ்சத்தை விட்டு அகலுவதில்லை! அவர்களைப் பழி வாங்க வேண்டுமென்று நாம் ரொம்பத் துடிக்கிறோம்! இதற்கு என்ன பரிகாரம் செய்வது?

* * *

இந்தக் கட்டுரையை வெகு நாட்களுக்கு முன்பே எழுதி விட்டேன். ஆனால் ஞாபகமறதியாக எங்கேயோ வைத்து விட்டேன். நேற்றுத்தான் என் கண்ணில் அகப்பட்டது. மறுபடியும் மறந்து விடுவதற்குள் ஆசிரியருக்கு இதை அனுப்பிவைக்கிறேன்! ஆசிரியர் ஞாபகமறதியாக இதை மேஜைக்குள் வைத்துவிடாமல் நிச்சயமாகப் பிரசுரிப்பார் என்று நம்புகிறேன்!

சரிக்குச் சரி!



"வக்கீல் ஸார். உங்களை ஒரு யோசனை கேட்க வேண்டும். என் வீட்டுக் கண்ணாடி ஜன்னல்மீது ஒரு பையன் கல்லை வீசி உடைத்து விட்டான். நான் என்ன செய்வது?"

"அந்தப் பையனுடைய அப்பாவிடம் பத்து ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு வாங்கி விடுங்கள்."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்! அந்தப் பையன் உங்கள் குமாரன் வேம்புதான். நஷ்ட ஈட்டுக்காகப் பத்து ரூபாய் கொடுங்கள்."

"சரி; முதலில் நான் சொன்ன சட்ட ஆலோசனைக்காக இருபது ரூபாய் எடுத்து வையுங்கள்."



அநாமதேய அகதி

கே. எ. அப்பாஸ்

மொழிபெயர்ப்பு: கே. கணேஷ்

நான் ஏன் சிரிக்கிறேன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா? உயிர் போகும்பொழுது ஒரு மனிதனுக்கு எப்படிச் சிரிப்பு வரும் என்று நீங்கள் அறிய விரும்புகிறீர்கள் அல்லவா?

டாக்டர், அதைப்பற்றி நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்? பேசாது உங்கள் வைத்திய சாலைக்குப் போய், கொய்னா தண்ணீரையும், ஆஸ்பிரின் மாத்திரையையும் விற்பதில் கவனம் செலுத்துங்கள். என்னைச் சாவின் பிடியிலிருந்து உங்களால் காப்பாற்ற முடியாது. ஏன், என்னை இப்பொழுது ஒருவருமே காப்பாற்ற முடியாது. காரணம், ஆழப் பதிந்த இரு வெட்டுக் காயங்கள்தான். முதுகுப் புறத்திலிருந்து கல்லீரல் வரை ஒரு காயமும், வயிற்றில் இரண்டாவது காயமும் ஏற்பட்டுள்ளது. குடல் பிதுங்கிக் கொண்டு வந்துள்ளது; அது உங்கள் கண்ணில் படவில்லையா?

நான் ஏன் சிரிக்கிறேன் என்று அறியத் தானே கூடி இருக்கின்றீர்கள்?......இந்தக் கடைசி நேரத்தில், சாகப்போகும் ஒரு மனிதனைச் சிரிக்க வைக்கும் விஷயம் ஏதாக இருக்கலாம் என்று யோசிக்கிறீர்களா? அதற்குக் காரணம் நான் யார் என்பதை இப்பொழுதுதான் கண்டு கொண்டேன். அதனால்தான் எனக்குச் சிரிப்பு வருகிறது.

என்ன சொன்னாய் தம்பி? ‘அதற்காகவா சிரிப்பு?’ என்று சொன்னாய்? என் கதை முழுவதையும் பொறுமையாகக் கேள். கேட்ட பிறகு நான் சாகப் போகும் பொழுது ஏன் சிரிக்கிறேன் என்பது புரியும்.

கடந்த இரண்டு மாதங்களாக நான் யார் என்பதைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்தேன். பலாத்காரமாகத் தாடி வெட்டப்பட்டு சுன்னத்து செய்யப்பட்ட ஒரு முஸ்லீமாக இருப்பேனா? அன்றி ஒரு ஹிந்துவாகவோ, சீக்கியனாகவோ இருப்பேனா? பிராமணனாகவோ, பஞ்சமனாகவோ இருந்திருப்பேனா? கீழ் பஞ்சாபில் இருந்தேனா? அல்லது மேற்குப் பஞ்சாபில் இருந்தேனா? நான் வசித்தது லாகூரிலா? அமிருத சரஸிலா? இல்லை, ராவல் பிண்டி அல்லது ஜலந்தர் ஆகிய ஏதாவது ஒன்றாக இருக்குமோ? என்றெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குவேன். நான் மட்டுமல்ல; இன்னும் எத்தனை எத்தனையோ பேர் நான் யார் என்பதையும் என் சாதி, சமயம், பெயர் எல்லாவற்றையும் அறிய முயன்றார்கள்! ஆனாலும் ஒருவராலும் இந்த மர்மத்தைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. நான் முயன்றும் எனக்கே ஞாபகம் வரவில்லை. ஆனால் இப்பொழுது, சாகப் போகின்ற இந்நேரத்தில் திடீரென ஞாபக சக்தி வந்து விட்டது......!

டாக்டர்! வருத்தத்துடன் என்னை விசித்திரமாகப் பார்க்காதீர்கள்! உங்களைப் பார்க்க எனக்குச் சிரிப்பு வருகிறது. உங்கள் வருத்தம் என்னை நிச்சயமாகக் காப்பாற்றாது என்பதைச் சொல்லி விடுகிறேன். என்னை இப்பொழுது உலகத்திலுள்ள எந்த டாக்டராலும் காப்பாற்ற முடியாது...நீங்கள் ஏன் இப்படிச் சங்கடத்துடன் பார்க்கின்றீர்கள் என்பது எனக்குப் புரிகிறது. ரண மருத்துவத்தைப் பற்றி உங்களுக்கு எழுந்துள்ள பிரச்னையும் எனக்கு விளங்காமலில்லை. இரண்டு காயங்களும் விபரீத இடங்களில் இருப்பதால் முதலில், எதைக் கவனிப்பது என்று யோசிக்கின்றீர்கள். என்னை முதுகுப்புறம் மல்லாந்து படுக்கவைத்துக் குடலை வயிற்றிற்குள் திணித்து வயிற்றைத் தைத்து விடுவோம் என்று நினைத்தால் மறு புறமுள்ள காயத்தின் வழியாக என்னுடைய ரத்தமெல்லாம் வெளியே வந்து, ஒரு தையல் போடுவதற்கு



ஒரு பைத்தியம் (விஸிட்டரிடம்):—அதுகுண்டு ரகசியத்தை உங்களுக்குச் சொல்லித் தரட்டுமா?

மற்றொரு பைத்தியம்:—டேய் மடையா! நான் போனால் போகிறது ன்னு உன்னிடம் சொன்னால் அதை எல்லார் கிட்டேயும் டமாரம் அடிக்கிறாயே. இனிமேல் உன்னிடம் ஒரு ரகசியமும் சொல்லமாட்டேன்!

முன்பே இறந்துவிடுவேன். பின்புறமுள்ள காயத்தை ஆற்றுவோம் என்று குப்புறப் படுக்க வைத்தாலோ குடல்கள், கஷ்மீரல், மூத்திரப் பை அனைத்துமே வயிற்றுக்கு வெளியே வந்து விடும். ஆகவே கவலைப் படாதீர்கள். அதைப் பற்றிக் கவலைப்படு வதை விட்டு, என் கதையைக் கேளுங்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன்புதான், பல நாட்கள் நினைவு இல்லாதிருந்து எனக்குப் பிரக்ஞை வந்தது. அப்பொழுது நான் புது டில்லி அரசாங்க ஆஸ்பத்திரியில் இருப்பதாக உணர்ந்தேன்.

"உன் பெயர் என்ன?" என்று டாக்டர் கேட்டார்.

ஏற்கெனவே குழப்ப மடைந்த மனதைச் சிரமப்பட்டு ஞாபகப் படுத்திப் பார்த்தேன். "மன்னியுங்கள், எனக்கு ஞாபகமில்லை" என்று சொன்னேன்.

"ஹிந்துவா? முஸ்லிமா?"

டாக்டர் இந்த முக்கியமான இரண்டாவது கேள்வியைக் கேட்டார். நான் அதுவும் ஞாபகமில்லை என்றே சொன்னேன்.

எனது பூர்வ வரலாறு, எனது சாதி, மதம், வீடு, குடும்பம் ஒன்றுமே ஞாபகத்திற்கு வரவில்லை. நான் குடும்பஸ்தனா அல்லது பிரம்மச்சாரியா என்பதும் ஞாபகமில்லை. என் வயது கூட ஞாபகத்திற்கு வரவில்லை. நான் இளைஞனாக இருக்கக் கூடுமென லேசாக ஞாபகம் வந்தது. ஆனால் கண்ணாடியில் பார்த்தால் சுருக்கம் விழுந்த மீசை, தாடி நிறைந்த எனக்கு அறிமுகமில்லாத முகம் தோற்றியது. இந்த முகத்தைக் கூட நான் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை.

புது டில்லியில் உள்ள டாக்டர்கள் எனக்கு ஞாபக சக்தியை அளிக்க எவ்வளவோ முயன்றார்கள். முடியாமற் போகவே நான் யார் என்று அறிந்து கொள்ள உதவினார்கள். என் பெயரே தெரியாததால், நான் வாழ்ந்து தான் என்ன பயன்? செத்த சடலத்துக்குச் சமானந்தானே!

விசாரித்ததில், பஞ்சாபிலிருந்து காயமுற்ற பல அகதிகளுடன் நான் அழைத்து வரப்பட்டதாக அறிய முடிந்தது. மற்ற அகதிகள் இந்துக்களா? சீக்கியர்களா? முஸ்லிம்களா? என விசாரித்த போது அவர்கள் இந்த மூன்று சமூகத்தையும் சேர்ந்தவர்களாக இருந்தனர். அமிருதசாவிற்கும் லாகூருக்கும் மத்தியில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக அகதிகளைச் சுமந்து சென்ற இரு விசேஷ ரயில்கள் தாக்கப்பட்டுக் கவிழ்க்கப்பட்டன. இதில் ஒன்றில் மேற்குப் பஞ்சாபிலிருந்து இந்துக்கள் அமிருதசாவிற்கு வந்து கொண்டிருந்தனர். மற்றொன்றில் கிழ் பஞ்சாபிலிருந்து லாகூருக்கு முஸ்லிம்கள் போய்க் கொண்டிருந்தனர். இரவு பதினொரு மணிக்கு ரயில் வண்டி பாலத்தின் மீது போய்க்கொண்டிருந்தபோது தண்டவாளத்திற்குக் கீழே வெடி குண்டு வெடித்தது. என்ஜின் தண்டவாளத்தை விட்டு நீங்கிப் பல வண்டிகளை இழுத்துக் கொண்டே ஏரிக்கரை யோரம் இழுத்துச் சென்றது. பலருக்குக் காயம் ஏற்பட்டது. பலர் இறந்தனர். காயம் படாமல் பின்புறத்து வண்டியில் இருந்தவர்கள் மீது காட்டில் ஒளிந்து கொண்டிருந்த கொள்ளைக் கோஷ்டியினர் துப்பாக்கி ரவை மாரி பொழிந்தனர். காயம் பட்டவர்கள் இருட்டிலே தப்பித்துக் கொண்டு ஓடினர். சுமார் ஒரு மணிக்குப் பிறகு எதிர்ப்புறத்திலிருந்து வந்த ரயிலுக்கும், ஒரு மைலுக்கு அப்பால் இதே கதி ஏற்பட்டது. இந்த ரயில் வண்டியில்

இருந்தவர்களும் அதே காட்டுக்குள் ஓடினார்கள். பலர், உழுத வயல் வழியாக ஓடிய பொழுது தவறி விழுந்து களைப் படைந்து மூர்ச்சையாகி விட்டார்கள்.

மறுநாள் காலையில் இந்திய யூனியன் துருப்புகளும், பாகிஸ்தான் துருப்புகளும் எல்லைப்புறத்தைப் பார்வையிடச் சென்ற பொழுது இரண்டு ரயில் வண்டிகளிலும் இருந்து விழுந்து கிடந்த காயம் பட்டவர்களையும், பிணங்களையும் புதிதாக நிர்ணயிக்கப்பட்ட எல்லைக் கோட்டின் மேலேயே விழுந்து கிடப்பதைக் கண்டனர். கூட்டத்தில் யார் இந்து, யார் முஸ்லிம் என்று கண்டு பிடிக்க முடியவில்லை. அதில் நானும் ஒருவன். என்னை டோலியில் தூக்கிச் சிகிச்சை லாரிக்கு எடுத்துச் சென்றவன், நான் பிரக்ஞையற்று இருந்ததாகவும், வெடு அங்கி உடுத்தி, ரத்தம் தோய்ந்த சட்டை உடுத்தியிருந்ததாகவும், இரு நாடுகளின் எல்லையிலும், அதாவது பாகிஸ்தான் பிரதேசத்தில் எனது கால்களும், எனது உடல் இந்திய யூனியனிலும் இருந்ததாகவும் புதிதாக வயல்கள் மீது இழுக்கப்பட்டிருந்த எல்லைக் கோடுகள் ரத்தத்தால் இழுக்கப்பட்டிருந்ததாகவும் சொன்னான்.

வெள்ளைத் தாடிவைத்திருக்கும் மதிப்பிற்குரிய மௌலானாவே! என்னை வெறிக்கப் பார்க்காதீர்கள்! உங்கள் மனதில் என்ன நினைக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் சாகப் போகிறேன் என்பதையும் சாகும் சமயத்தில் சாகப் போகிறவனுக்கு எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் சக்தி உண்டு என்பதையும் மறந்து விடாதீர்கள். நான் முஸ்லிம் என்று கூறி விடுவேன் என்று எதிர்பார்க்கின்றீர்கள் அல்லவா? அப்படிக் கூறிவிட்டால் நான் சாவதற்கு முன்னரே என்னைப் புதைப்பதற்குத் தங்கள் அஞ்சுமான் குதாம் — உல் முஸ்லிமின் சார்பாக ஏற்பாடு செய்து விடலாமென்று எண்ணுகிறீர்கள். உச்சிக் குடுமி வைத்திருக்கும் சாஸ்திரிகளே! உங்கள் மனதில் என்ன எண்ணம் ஓடிக் கொண்டிருக்கிற தென்பதும் எனக்குப் புரிகின்றது. என் வாயிலிருந்து நான் ஒரு இந்து என்று சொல்லி விட்டால் தங்கள் தர்ம சேவா சங்கத்தின் ஆதரவில் தகனம் செய்து விடலாமென்று நினைக்கிறீர்கள். இங்கே பம்பாயில் பார்சி ஜாதியினர் தங்கள் பிணத்தை மௌனக் கோபுரத்தில் இறந்தப் பிணத்திற்காக வட்டமிட்டுக் காத்திருக்கும் கழுகுகள் தின்ன விட்டு விடுகின்றார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் மனிதன் சாவதற்கு முன்னால் அவனை மனிதக் கழுகுகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் என்று நான் எண்ணினதே இல்லை.

எனினும் எனது கதையைச் சொல்லுகிறேன் கேளுங்கள். அதிகம் பேச எனக்கு நேரம் இராது. என் காயங்கள் அவ்வளவு பலமானதல்லவாகையால் சில வாரங்களில் ஆறிவிட்டன. ஆனால் டாக்டர்கள் எனது மூளையில் லேசான தாக்குதல் ஏற்பட்டிருப்பதால் எனது ஞாபக சக்தி மறைந்து விட்டதாகக் கூறியது முதல், நான் பெயரில்லா விசித்திர மனிதனாகி விட்டேன். என் படங்கள் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் உள்ள பல பத்திரிகைகளில் வெளி வந்தன. ஆனால் எந்த உறவினரோ, நண்பரோ, அண்டை வீட்டுக்காரரோ அடையாளங் கண்டு என்னைத் தேடவில்லை. ஒரு வேளை அவர்கள் மாண்டிருக்கக் கூடும். ஒரு வேளை நான் இந்த உலகத்திலேயே தனி மனிதனாகி விட்



டேன்! இதற்கிடையில் நோயிலும், காயப் பட்டும் பல அகதிக் கூட்டம் வந்து சேரவும் ஆஸ்பத்திரியிலுள்ள டாக்டர்கள், மேலும் நான் இருக்க முடியாது என்று கூறி விட்டார்கள். வேறு எங்காவது இடம் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டு அதை விட்டு வெளியே வந்தேன். நகரமெல்லாம் அலைந்து விட்டு ஜும்மா மசூதிக்கு வந்தேன். அதற்கு எதிரே இருந்த மைதானத்தில் ஒரு அகதி முகாம் இருந்தது.

முகாமின் நிர்வாகியிடம் "ஐயா, நான் ஒரு அகதி; தயவு செய்து எனக்கு இடம் தாருங்கள்" என்றேன்.

"நீ ஹிந்துவா? முஸ்லிமா?" என்று அவன் என்னைக் கேட்டான்.

"எனக்கு ஞாபகமில்லை" என்று உண்மையைக் கூறினேன். எனக்குப் பொய் சொல்ல விருப்பமில்லை.

முகாமின் நிர்வாகி "இந்த முகாம் முஸ்லிம்களுக்கு மட்டுமே!" என்று கூறி அனுப்பி விட்டான்.

நான் மெள்ள மெள்ள நடந்து சென்று புதுடில்லியை அடைந்தேன். அங்கு முன்னதை விடப் பெரிய ஒரு முகாமைக் கண்டேன். அங்கு சென்று அங்குள்ள தொண்டன் ஒருவனிடம் தங்க இடம் வேண்டுமெனக் கெஞ்சிக் கேட்டேன். மூன்று நாள் நான் சாப்பிடாததால் எனக்குப் பேசவே முடியவில்லை.

"நீ ஒரு ஹிந்துவா அல்லது முஸ்லிமா?" என்று கேட்டதற்கு முதலில் கூறியது போலவே பதில் கூறினேன்.

"பெயர்?"

"அதுவும் எனக்கு ஞாபகமில்லை."

"அப்படியானால் வேறு எங்காவது போ. இம்முகாம் ஹிந்துக்களுக்கு மட்டுந்தான்."

எனவே ஒவ்வொரு முகாமாக நடந்தேன். இந்துக்களுக்கு, முஸ்லிம்களுக்கு, என முகாம்கள் இருந்தன. ஆனால் மனித ஜன்மங்களுக்கு மட்டும் முகாம்களிருந்ததாகத் தெரியவில்லை!

அன்று இரவு, அரசாங்கக்காரியாலயத்தில் உத்தியோகம் பார்க்கும் ஒரு சீக்கியர் பங்களாவிற்கு முன்னால் வீதியில் மயக்கம் போட்டு விழுந்து விட்டேன். என்னைக் கண்ணுற்ற அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்று குடிப்பதற்குப் பால் கொடுத்தார். எனக்குப் பிரக்ஞை வந்ததும் அவர் ஹிந்துவா, முஸ்லிமா, சீக்கியனா என்று ஒன்றும் கேட்கவில்லை. "உனக்கு இப்பொழுது உடம்பு தேவலையா, ஐயா?" என்று மட்டுந்தான் கேட்டார்.

நான் அங்கு பல நாட்கள் இருந்தேன். சர்தார், அவர் மனைவி, குழந்தைகள் அனைவருமே என் மீது மிகவும் அன்பு செலுத்தினர். எனது கதையெல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி அவர்களுக்குக் கூறினேன். நான் யாரென்பதே எனக்குத் தெரியவில்லை என்பதையும் கூறினேன். இருப்பினும் அவர்கள் என் மீது அன்பு காட்டினார்கள்; சில நாட்களுக்குப் பின்னர் ராவல்பிண்டி ஜில்லாவிலிருந்து அவர்களின் உறவினர்கள் சிலர் அகதிகளைக் கொண்டு வந்த விசேஷ ரயிலில் வந்து சேர்ந்தனர். முஸ்லிம் பாதகர்கள் செயலால் அவர்களில் சிலர் கஷ்டப் பட்டிருந்தனர். அவர்கள் பலாத்காரமாக மதம் மாற்றப்பட்டு மொட்டையடிக்கப்பட்டு, சுன்னத்தும் செய்யப் பட்டிருந்தார்கள். அவர்களின் பெண்கள் மானபங்கப்படுத்தப் பட்டார்கள். அவர்கள் தங்கள் கண் முன்பாகவே தங்களுடைய உறவினர்கள், அண்டை வீட்டுக்காரர்கள், குரூரமாகக் கொலை செய்யப்படுவதைக் கண்ணுற்றார்கள். எனவே அவர்கள் உள்ளத்தில்



"என் மனைவியை என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்? அவள் ரொம்பப் பெரிய குடும்பத்திலே பிறந்து வந்தவள்......!"

"இவ்வளவுதானே? என் மனைவி அவனுடைய 'பெரிய' குடும்பத்தையே கொண்டுவந்து விட்டாள்!!"

ஆத்திரமும், வெறுப்பும் நிறைந்திருந்தது. அவர்கள் கதையைக் கேட்ட பின்னர் நானும் முஸ்லிம்களை வெறுக்கத் தொடங்கினேன்.

சுய ஞாபகமில்லாத மனிதன் என்பதையும் என்னுடைய விசித்திரக் கதையையும், அவர்களிடம் சர்தார் சாஹிப் கூறியிருந்தார். அதில் வயது முதிர்ந்த சிலர் எனக்கு அனுதாப வார்த்தைகள் கூறியதுடன் எனது ஞாபகத்தை வருவிக்க உதவி செய்தார்கள். ஆனால் அவர்களில் இளைஞர்கள் என்னைச் சந்தேகப் பார்வையுடன் நோக்கத் தொடங்கினார்கள். ஒரு நாள் இரவு அவர்களில் ஒருவன் "அவன் ஒருகால் பொய்யனாக இருக்கலாமல்லவா? உண்மையிலேயே அவன் ஞாபக சக்தியை இழந்தவனாக இருந்தாலும் அவன் ஒரு முஸ்லிமாக இருந்தால்?" என்று பேசிக்கொண்டிருந்தது என் காதில் பட்டது. அவர்கள் கண்களிலே ஒரு பயங்கர ஒளி தோன்றுவதைக் கண்டேன்.

'ஆம், நானும் காயப்பட்டு ஞாபக சக்தியை இழப்பதற்கு முன்னர் முஸ்லிமாகவே இருந்திருந்தால்...!ஒருகால் நானும் கொடுஞ் செயல்கள் செய்திருக்கக் கூடுமல்லவா? நான் செய்த கொடுமைகளுக்குத்தான் கடவுள் இப்படித் தண்டித் திருக்கிறாரோ!' என்று ஒரு எண்ணம் என் மனதில் அடிக்கடி தோன்றியது. அன்று இரவே சர்தார் சாஹிப் வீட்டிலிருந்து கம்பி நீட்டிவிட்டேன்.

மீண்டும் வறுமைப் பாதையில் போக வேண்டியதைத் தவிர வேறு வழி இல்லை.

"இந்த முகாம் முஸ்லிம்களுக்கு!"
"இந்த முகாம் இந்துக்களுக்கு!"
"நீ யாரப்பா?"
"உன் பெயரென்ன?"
"உன் மதமென்ன?"
"எங்கிருந்து வர்றாய்?"

"கேள்விகள்! கேள்விகள்!! கேள்விகள்!!! அப்பப்பா திணறிப் போய்விட்டேன்! ஒன்றுக்குக்கூட என்னால் பதில்கூற முடியவில்லை. எனக்குத்தான் ஞாபகசக்தி இல்லையே!

தஞ்சமடைய எனக்கு இடம் எங்கும் கிடைக்காததாலும் கடப்பதற்கும் சக்தியில்லாததாலும் ஜும்மா மசூதியின் படிக்கட்டின் அடியிலே கிடந்து செத்து விடுவதென்று தீர்மானித்துச் சாய்ந்துவிட்டேன்.

உடனே எனக்கு நினைவு நீங்கிவிட்டது. நான் எவ்வளவு நேரம் அங்கிருந்தேனோ எனக்குத் தெரியாது. ஆனால் கண்ணை விழித்துப் பார்த்த போது சுமார் எட்டு வயதுள்ள சிறுவன் ஒருவன் என் முன்னே நிற்கக் கண்டேன். "ஐயா! எழுந்திருங்கள், எழுந்திருங்கள்! அம்மா உங்களுக்கு அனுப்பிய இந்த ரொட்டியைச் சாப்பிடுங்கள்" என்றான். அந்த வார்த்தைகளை எனது உள்ளுணர்ச்சி புரிந்து கொண்டதாலோ என்னவோ என் மயக்கம் தீர்ந்தது. எனக்கு உடலிலே பலமில்லாததால் எழுந்து உட்கார முடியவில்லை. என்னை உட்கார வைப்பதற்கும் அந்தப் பையனே உதவி செய்ய வேண்டியதாகி விட்டது. ஆகா! அந்த எளிய, ருசியான உணவு எவ்வளவு ஆனந்தமாக இருந்தது, தெரியுமா? பேராவலுடன் அதனைத் தின்றேன். பருப்பு வைத்திருந்த பித்தளைப் பாத்திரத்தைக் காலி செய்து கழுவிய பின் அவனை நோக்கி "தம்பி, நீ சிரஞ்சீவியாக இருப்பாயாக!" என்றேன். எனது நன்றியறிதலைத் தெரிவிப்பதற்காகச் சிறுவனின் சின்னக் கரங்களை நான் தொட்டதும் "ஐயோ, உங்கள் உடல் பலமாய்க் காய்கிறதே! அப்பாவிடம் வாருங்கள், அவர் ஒரு ஹக்கீம், உங்களுக்கு மருந்து கொடுத்துக் குணப் படுத்துவார்" என்றான்.

சிறுவன் தன் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றான். ஹக்கீம் ஒரு நாளைக்கு ஐந்து தரம் பிரார்த்தனை செய்பவர். வைத்தியம் செய்து கொள்ள வரும் வியாதியஸ்தர்கள் அனைவருக்கும் இந்துக்கள், முஸ்லிம்கள் யாராக இருந்தாலும் வேற்றுமை பாராது இனமாக மருத்துவம் செய்து வந்தார் ஹக்கீம். அவர் எனக்கு யூனானி மருந்து கொடுத்து ஒரு நாளைக்கு மூன்று தரம் பால் அளித்து, உறங்கப் படுக்கையும் கொடுத்தார். ஹக்கீம் அவர்களின் வைத்தியம் எனது உடல் உஷ்ணத்தைத் தணித்து விட்டது. ஆயினும் பெரிய வைத்தியராகிய அவரால் கூட எனது ஞாபக சக்தியை வருவிக்க முடியவில்லை. என் நிலைமையைப் பற்றி அவரிடம் கூறினேன். "நான் ஒரு ஹிந்துவாகவே இருக்கக் கூடும். ஆகையால் உங்கள் இடத்தை விட்டு வேறிடத்திற்குப் போக வேண்டியிருக்கும்" என்றேன். ஆனால் அன்பே உருவான அந்தக் கிழவர் என்னை அங்கேயே இருக்கும்படி வற்புறுத்தி "நீ ஹிந்துவாக இருந்தால் தான் என்ன? ஹிந்துக்கள் மட்டும் கடவுளின் குழந்தைகள் இல்லையா? நீ இங்கேயே தங்கலாம்" என்றார். எனவே நான் அங்கு தங்கினேன். (அடுத்த இதழில் முடியும்)

தீர்ப்புச் சொல்லுங்கள்!





ஸோமாஸ்



ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்களை எண்ணினாலும் எண்ணிவிடலாம். ரேஷன் அரிசியில் இருக்கும் கல்லை எண்ணிவிடலாம். நான் என் வீட்டில் நியமித்த வேலைக்காரர்களை எண்ண முடியாது. பழைய வருஷம் போய்ப் புது வருஷம் வருவதுபோல், பழைய வேலைக்காரன் போய்ப் புது வேலைக்காரன் வந்தான். ஆனால் பழைய அதிருப்தி வீட்டிலிருந்து போகவில்லை. என்னிடம் வந்த வேலைக்காரர்களைப் பற்றிய சுவாரஸ்யமான சம்பவங்களைச் சொன்னால் நீங்கள் மிகவும் ரஸிப்பீர்கள்.

வழக்கம்போல் ஒரு பழைய வேலைக்காரன் போய் ஒரு புது வேலைக்காரன் வந்தான். அவனை வேலைக்கு அமர்த்திக் கொள்ளுவதற்கு முன் அவனிடம் சில முக்கியமான விஷயங்களைப் பற்றி எச்சரித்து விட்டுக் கடைசியில், "இன்னொரு விஷயம். இந்த வீட்டில் நடக்கும் சமாசாரங்களைப் பற்றி யாரிடமும் பேசவே கூடாது. முன்பு என்னிடமிருந்த வேலைக்காரன் அண்டை அயல் வீட்டாரிடமெல்லாம் என்னைப் பற்றி வம்பளந்து கொண்டிருந்தான். கடைசியில் அதெல்லாம் சேர்ந்து ஒரு சண்டையில் வந்து முடிந்தது. தெரிந்ததா? ஜாக்கிரதை!" என்று கண்டிப்பான குரலில் சொன்னேன்.

உடனே அந்தப் புதிய ஆசாமி சொன்னான்; "என்னங்க, அப்படிச் சொல்லி விட்டீங்க! உயிர் போனாலும் அந்த மாதிரிக் காரியம் மாத்திரம் நம்பகிட்டே கிடையாதுங்க. ஆமாம், ஒரு வீட்டிலே ஆயிரம் சமாசாரம் நடக்கும். அதையெல்லாமா வெளியிலே சொல்லுவான், மடையன்! இதோ பாருங்க ஸார்! நம்ம ராமசாமி செட்டியார் வீட்டிலே ஏறு வருஷம் வேலை பார்த்தேனுங்க. அந்தச் செட்டியார் மகன் பக்கத்து வீட்டிலே நுழைஞ்சு ஆயிரம் ரூபாயைத் திருடிக் கிட்டு வந்த சமாசாரம் எல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் அதை யாருக்கிட்டேயாச்சும் சொல்லியிருப்பேனா? மூச்சு விடக் கூடாதுங்க! அது போகட்டும்.

"அந்தச் செட்டியார் பெண்சாதி அவருக்குத் தெரியாமே பணத்தை வட்டிக்கு விட்ட சேதி எனக்குத் தெரியும். அவுங்க இரண்டு பேருக்கும் பொழுது விடிஞ்சா சண்டைதான். எல்லாம் வெளிக்கு கௌரவமாயிருக்குது........! உள்ளே பார்த்தால் ஒரே மோசங்க...! இதைப்பத்தியெல்லாம் நான் ரெண்டாம் பேருகிட்டே வாயை அசைச்சிருக்கேனா? கழுத்தை அறுத்தாக் கூடச் சொல்ல மாட்டேனுங்க. ஒருத்தர் வீட்டுச் சமாசாரம் நமக்கு என்னாத்துக்கு? இந்தக் காதாலே வாங்கி அந்தக் காதாலே விட்டுடறேனுங்க!"

இந்தப் பதிலைக் கேட்ட எனக்கு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. ஆகவே நான் அந்த இரண்டையும் செய்யாமல் அந்த ஆசாமியை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினேன்.

நான் என் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து வழக்கம்போல் பேப்பர் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அந்தச் சிங்காரம் வந்து சேர்ந்தான். யார் அந்தச் சிங்காரம் என்றுதானே கேட்கிறீர்கள்? அவன்தான் ஒரு மாதமாக வேலை வேண்டும் என்று என் பிராணனை வாங்குகிறவன். இன்றைக்கும், வந்ததும் வராததுமாக, சிங்காரம் வழக்கம்போலத் தன் சுய சரித்திரம், தன் குணவிசேஷங்கள் ஆகியவற்றைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கத் தொடங்கினான். அந்தச் சமயம் பார்த்துக் கோடி வீட்டுக் குப்புசாமி முதலியார் வந்து குறுக்கிட்டுப் பேச ஆரம்பித்தார். பேச்சின் முடிவில் முதலியார் "ஸார், அர்ஜண்டாக ஒரு ஐம்பது ரூபாய் தேவையாயிருக்கிறது. இல்லையென்று சொல்லாமல் கொடுக்க வேண்

டும்!" என்று விபந்தனையுடன் கடன் கேட்டார். நான் மிகவும் தாக்ஷண்யப் பிரகிருதி. இது முதலியாருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தபடியினால்தான் என்னிடம் கடன் கேட்க வந்தார்.

நான் சட்டைப் பையிலிருந்த ஐம்பது ரூபாய்ப் பணத்தையும் அப்படியே எடுத்துக் கொடுத்து விட்டேன். பிறகு முதலியார் சற்று நேரம் பேசி விட்டுப் பெரிய கும்பிடு ஒன்று போட்டுவிட்டு மறைந்தார்.

அவர் போன பிறகுதான் எனக்கு அவர் மீது கோபம் வந்தது. அந்தக் கோபம் அப்படியே என்னிடம் வேலைக்காக வந்திருக்கும் சிங்காரத்தின்மேல் திரும்பியது.

"சிங்காரம், இப்பொழுது எனக்கு ஆள் தேவையில்லை. பணம் ரொம்ப முடையான சமயம். கையிலிருந்த ரூபாயும் தொலைந்து விட்டது. இன்னொரு சமயம் பார்க்கலாம். போய்வா!" என்றேன்.

அப்பொழுது சிங்காரத்தின் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது. "பணம் இல்லையென்றால் என்னைக் கேளுங்க, ஸார்! அந்த முதலியார் கிட்டே கொடுத்தீங்களே, அந்த ஐம்பது ரூபாய், இதோ இருக்குங்க! பணம் வரும், போகும். மனுசன் போனால் வரமாட்டான். என்னை வேலைக்கு வச்சுக்கிட்டா அப்புறம் உங்களுக்கே தெரியும்! ஒண்ணும் யோசனை பண்ணாதீங்க, ஸார்! சம்பளம் பத்து ரூபாய் போதுங்க!" என்றான்.

நான் திடுக்கிட்டு, "ஏது உனக்கு இந்த ஐம்பது ரூபாய்?" என்று கேட்டேன்.

சிங்காரம், "அதுதான் சொன்னேனே! முதலியார் கிட்டே கொடுத்தீங்களே அதே நோட்டுகள்தான்...நல்லாப் பார்த்துக்குங்க! பொய், கிய் இல்லீங்க!" என்று சாவதானமாகச் சொல்லி நோட்டுகளை என்னிடம் நீட்டினான்.


இதைக் கண்டதும் திகைப்பினால் எனக்கு மூச்சு நின்றுவிடும்போலிருந்தது.


நான் பரபரப்புடன், "சிங்காரம், அவருக்குத் தெரியாமல்......சட்டைப் பையிலிருந்து......?" என்று ஏதோ உளறினேன். ஐந்து நிமிஷத்துக்கு முன் முதலியாரிடம் நான் கொடுத்த அதே ரூபாய் நோட்டுகள் சிங்காரத்தின் சட்டைப் பைக்குள் எப்படி இருக்க முடியும்? எனக்குத் தலையைச் சுற்றியது.

சிங்காரம் என் பிரமையைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

"வில்லாதி வில்லன் வந்தால் கூட என்னைக் கண்டுபிடிக்க முடியாது, ஸார்! என் சாமர்த்தியம் இப்போது தெரியாதுங்க. போகப் போகத் தெரியும். அது போகட்டும். வேலைக்கு என்ன சொல்றீங்க?" என்று கேட்டான். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் தப்பிவிட்டேனா, என் மூக்குக் கண்ணாடி, என் கையிலிருக்கும் பேப்பர் எல்லாம் திருட்டுப் போகாமல் தப்பிவிட்டனவா என்று ஒரு முறை பரிசிலனை செய்துவிட்டு, அந்தப் பணத்தை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு அவனைப் போலீசுக்கு அனுப்புவதாகக் கடிந்துகொண்டு அனுப்பி வைத்தேன். இந்தப் பக்காத் திருடனை உடனே போலீஸ் லாக்கப்புக்கு அனுப்பாதது தப்பா? இல்லை வேலைக்கு வைத்துக் கொள்ளாதது தப்பா? நீங்களேதான் தீர்ப்புச் சொல்லுங்கள்.

வேலைக்காரனே இல்லாமல் நானே எல்லாக் காரியங்களையும் செய்துகொள்ள ஆரம்பித்தேன். என் வியாபார விஷயமாக வெளியூர் செல்வதிலிருந்து போஸ்டாபீஸுக்குப் போவது வரையில் நானே கவனித்துக் கொண்டேன். ஒரு நாள் என் நண்பர் ஒருவர் சிபாரிசின்மேல் மாரியப்பன் என்பவன் என்னிடம் வேலைக்கு வந்தான். நானும் அவனை உடனே அமர்த்திக்கொண்டேன். ஆனால் அவன் ஒரு வாரம்தான் என்னிடம் வேலை பார்த்தான். அவனை நானே இன்றைக்கு வேலையை விட்டு அனுப்பும்படி யாகி விட்டது. காரணம் தெரிய வேண்டுமானால் எனக்கும் மாரியப்பனுக்கும் நடந்த சம்பாஷணையை நீங்கள் படித்தாக வேண்டும். படித்துவிட்டு நான் அவனை அனுப்பியது சரியா தப்பா என்று நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்.





நீதிபதி :—என்னப்பா இது! அவனிடம் கடனை வாங்கிக் கொண்டு கொடுக்க முடியாது என்று தைரியமாகச் சொல்லுகிறாயாமே?

பிரதிவாதி :—நான் இவருக்கு மாத்திரந்தான் அப்படிச் சொன்னேனா? அதேமாதிரி எவ்வளவு பேருக்குச் சொல்லி இருக்கேனுங்க!

நான் :—அடே, மாரி! அடுத்த தெரு ஐயாசாமி ஐயர் வீட்டுக்குப் போய் அவரை நான் கூப்பிட்டதாகச் சொல்லி அழைத்து வா! போ, சீக்கிரம்.

மாரி:—அவர் வீட்டில் இல்லாவிட்டால்?

நான் :—பிள்ளையார் கோவிலில் சீட்டாடிக் கொண்டிருப்பார்.

மாரி :—அங்கேயும் இல்லாவிட்டால்?

நான்:—செட்டியார் வீட்டில் இருப்பார்.

மாரி —அங்கேயும் இல்லாவிட்டால்?

நான் (கோபத்துடன்) :—பேசாமல் வந்து விடு, முட்டாள்!

மாரி :—அதுக்கு ஏன் போவணுங்க?

இவனை வீட்டுக்கு அனுப்பாமல் வேறு என்னத்தைச் செய்ய?

மாரி போனவுடன் இன்னொருவன் வேலைக்கு வந்தான். அவனைப் பார்த்ததும் கொஞ்சம் ஒழுங்கா யிருப்பான் என்று எனக்குத் தோன்றியது.

"நீ முன்பு பார்த்து வந்த வேலையை ஏன் விட்டுவிட்டாய்?" என்று அவனைக் கேட்டேன். அதற்கு அவன் பின்வருமாறு பதில் சொன்னான் :—

"அந்த மனுசன் வீட்டிலே, ஒரு மனுசன் போய் வேலை செய்வானா? வேலை அவ்வளவு கஷ்டம். காலையிலே ஏழு மணிக்கு எழுந்திருந்தால் ராத்திரி எ—ட்—டு மணி வரைக்கும் வேலை வாங்குவாங்க! காலையிலே ஒரு கப் காப்பி. நாலு இட்டிலியோடே சரி! அவ்வளவுதான். அப்புறம் மத்தியானம் பதினொரு மணிக்குத்தான் சாப்பாட்டைக் கண்ணாலே பார்க்கலாம். இன்னும் பாருங்க, அந்த வீட்டுக் குழந்தை கத்தறதுலே நமக்குத் தூக்கமே வரதில்லீங்க! பகல் வேளையிலே ஒரு இரண்டு மணி 'டயம்' தூங்கலாம்னு பாத்தா முடியறது இல்லிங்க. அவுங்க எல்லாம் சினிமாவுக்குப் போவாங்க! ஆனால் 'நீயும் வாடான்னு' ஒரு வார்த்தை கூப்பிடமாட்டாங்க! எனக்கு மட்டும் சினிமா பார்க்க ஆசை கிடையாதா? பார்த்துக்குங்க, அவுங்க மரியாதையை! ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் தான் லீவு! சம்பளமாவது ஜாஸ்தின்னு பார்க்கிறீங்களா? இருபத்தைந்து ரூபாய் தான். ஒரு வருசம் முழுக்க இந்தமாதிரி உழைச்சா......இரண்டு ரூபாய் ஓசத்து வாங்களாம். இந்தமாதிரி வீட்டிலே நான் எப்படிங்க வேலை செய்ய முடியும்? பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேனுங்க. கடைசியிலே இந்தக் கழுதைகிட்டே வேலை செய்யறதைவிட வேறு எங்கே வேணுமானாலும் போகலாம்னு நினைச்சு உங்க கிட்டே வந்தேனுங்க!"

எப்படியிருக்கிறது அவன் பதில்? நான் இந்தப் பதிலைக் கேட்ட பின்பு அவனை என்னிடம் வேலைக்கு வைத்துக் கொள்ளாவிட்டால் அது என் தவறா? நீங்கள் தீர்ப்புச் சொல்லுங்கள்!

இப்பொழுது துரை என்று ஒருவன் என்னிடம் வேலைக்கு வந்திருக்கிறான். அவனை நான் என் 'தோழ'னாகத்தான் நடத்துகிறேன். ஏனென்றால் அவன் பொதுவுடைமைக் கட்சியின் அநுதாபி. அந்தக் கட்சிக் கொள்கையின்படி வேலைக்காரன் என்று யாரையும் வைத்துக் கொள்ள முடியாதாம். 'ஒத்தாசை'க்கு வேண்டுமானால் ஒருவரை அமர்த்திக் கொள்ளலாமாம். அவரை எஜமான் தன் குடும்பத்தில் சேர்ந்த ஒருவரைப் போலவே நடத்த வேண்டுமாம். இதெல்லாம் தோழர் துரை சொல்லுகிறார்.

இப்போதெல்லாம் தோழர் துரையும் நானும் சேர்ந்தே என் வேலையைச் செய்கிறோம். நான் வியாபார விஷயமாக வெளியே போனால் தோழர் வீட்டிலிருந்து மற்றக் காரியங்களைக் கவனிப்பார். அவர் வெளியே போனால் நான் அவர் வேலையையும் என் வேலையையும் சேர்த்துக் கவனிப்பேன். நான் ஸ்நானத்துக்குக் கிணற்றிலிருந்து ஜலம் இழுத்துக் கொடுப்பேன். தோழர் துரை அதை வாங்கித் தொட்டியில் நிரப்புவார். அவர் என் வேஷ்டி துணிகளுக்கு சோப்புப் போட்டு வைப்பார்; நான் அவற்றைத் துவைத்து வைப்பேன்; அவர் அந்தத் துணிகளைக் கொடியில் உலர்த்துவார்; பிறகு நான் உலர்ந்த துணிகளையெல்லாம் எடுத்து ஒழுங்காக மடித்து வைப்பேன். இப்படியாகத்தானே என் காரியங்களெல்லாம் இப்பொழுது மிகவும் ஒழுங்காக நடந்து வருகின்றன.

நமது இலங்கைக் கடிதம்

தனுஷ்கோடிக் கப்பலைப் பார்!

ரஜனி

கொழும்பு, நவம்பர் 7

இலங்கை இந்திய காங்கிரஸ் கமிட்டியின் விசேஷக் கூட்டம் நான்கு முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றி யிருக்கிறது. காங்கிரஸின் ஆணையைமீறிப் பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தை ஏற்றுக் கொண்டு விட்டதைப் போல இங்கு சிலர் பிரசாரம் செய்து வருகிறார்கள். ஆனால், உண்மையில் இங்குள்ள எட்டரை லட்சம் இந்தியர்களில் இதுவரை இருநூற்று எண்பத்தெட்டு பேர்கள்தான் இலங்கையர்களாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில் முக்கால் வாசிப்பேர் பெண்களும், குழந்தைகளும் ஆவர். பாக்கிப் பேர்கள் வியாபாரிகள். லைசென்ஸ், வியாபார உரிமை முதலான பல நிர்ப்பந்தங்களை முன்னிட்டே இவர்களும் இலங்கையர்களாகி யிருக்கின்றனர். பகிஷ்காரத் தீர்மானத்தை இலங்கை இந்தியர்கள் கௌரவித்துக் கட்டுப்பாடுடன் நடந்து கொள்ளுவதைப் பாராட்டியும், அற்ப நன்மைகளுக்காக சுயமதிப்பையும் நியாயமான உரிமைகளையும் விற்றுவிடக் கூடாதென்று வற்புறுத்தியும் இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒரு தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது. இந்தியர்களின் வோட்டுரிமையைப் பறிக்க சமீபத்தில் ஒரு புதிய சட்டம் இயற்றி யிருப்பதையும் காங்கிரஸ் கமிட்டி தன்னுடைய மற்ற தீர்மானங்களில் வன்மையாகக் கண்டித்திருக்கின்றது.


ஏன் தடுக்க வேண்டும்?

கொழும்பிலேயே பழமையான இந்துக் கோவிலாகிய ஸ்ரீ கைலாசநாத ஸ்வாமி கோவிலை இந்துமத அன்பர்கள் சிலர் பெரும்பணச் செலவில் புதுப்பித்துச் சென்ற வாரம் கும்பாபிஷேகம் செய்தார்கள். அந்த வைபவத்தில் பௌத்தரான பிரதம மந்திரி ஸ்ரீ சேனநாயகாவும் தம்முடைய வழக்கமான 'ஸூட்' 'கோட்' எல்லாவற்றையும் விட்டு, பட்டு வஸ்திரம் உடுத்தி, பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டார். ஆனந்த நடராஜரின் சன்னிதியைப் பிரதம மந்திரி திறந்து வைத்துப் பேசியபொழுது, "ஆதி காலத்தில் இலங்கை சுதந்திரமாயிருந்து சொந்த மன்னர்கள் நாட்டைப் பரிபாலித்த சமயம், ஒரே கோவிலில் பௌத்தர்களும் இந்துக்களும் ஒன்றாக இறைவனை வழிபட்டோம். எங்கெல்லாம் பௌத்தக் கோவில்கள் இருந்தனவோ அங்கெல்லாம் இந்துக் கோவில்களும் இருந்தன. இன்று இலங்கை இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்று விட்டது. ஆகையால் முன் போலவே நாம் ஒன்று சேர்ந்து இறைவனை வழிபட்டு ஒற்றுமையுடன் வாழ்வோம்" என்று குறிப்பிட்டார்.

இலங்கையில் இன்றுகூட ஒவ்வொரு பௌத்த ஆலயத்திலும் மகாவிஷ்ணுவின் சிலை இருப்பதைக் காண்கிறோம். இந்துக்களும் பகவான் புத்தரை விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாக மதிக்கின்றனர். எனவே, ஆதிகாலச் சிங்கள மன்னர்களின் காலத்தில் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையில் அந்நியோன்னிய பாவம் நிலவியதில் ஆச்சரியமில்லை. அதே நட்பு நீடிப்பதை இன்று மட்டும் விபரீதமான சட்டங்களினால் ஏன் தடுக்க வேண்டும்?


சட்டத்தினால் நேர்ந்த சங்கடம்

இலங்கை அரசாங்கத்தின் குடியேற்ற வெளியேற்றச் சட்டம் சென்ற ஒருவார காலமாகத் தீவிரமாய் அமுல் நடப்பதினால் இலங்கை—இந்தியா ஜனப் போக்குவரத்து அநேகமாக ஸ்தம்பித்துப் போய் விட்டது எனலாம். தினசரி அறுநூறு முதல் எழுநூறு பேர்கள் வரையில் வந்த தனுஷ்கோடிக் கப்பலில் நூறு பேருக்கும் குறைவாகவே வருகிறார்கள். இதனால் கப்பலை ஓட்டும் செலவுக்குக் கூடக் கட்டி வரவில்லையாம். இப்படியே நீடிக்குமானால் தனுஷ்கோடிக் கப்பலை தினசரி விடுவதை நிறுத்தி வாரத்தில் இரண்டு மூன்று தினங்களுக்கு மட்டுமே விட வேண்டிய நிலைமை ஏற்படுமென்று கூறப்படுகிறது. கப்பல் தினசரி விடப்படாவிட்டால் அவசரமாகப் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும் எளிய ஜனங்கள் பாதிக்கப் படுவார்களென்பதோடு தபால் போக்குவரத்தும் சீர்குலையும். நிலமார்க்கமாக அனுப்பும் தபால்கள், பார்சல்கள், உணவுப் பொருள்கள் முதலியன தனுஷ்கோடிக் கப்பல் வழியாக வரவேண்டியிருப்பதால், கப்பல் போக்குவரத்து சீர்குலையுமாயின், ஏராளமான மக்கள் கஷ்டத்துக்கு ஆளாக நேரும்.



பீக் ப்ரீன்'ஸ் பிஸ்கட்டுகளை உங்கள் வாடிக்கையான

ஸ்டோர்களில் வாங்குங்கள்



SWEET ASSORTED ★ GOLDEN PUFF ★ GLAXO BISCUITS

PEEK FREAN'S
BISCUITS

ஏஜண்டுகள்: பாரீ & கம்பெனி லிமிடெட், மதராஸ்



அழகிய நங்கை ஆவலுடன்
எவ்வளவு குளிர்ச்சி
என்ன புதுமை
எத்தனை சுத்தம்
வேண்டுவது காந்தி டாய்லெட் சோப் தான்.
KANTI TOILET SOAP
காந்தி
டாய்லெட் சோப்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்
SOM 38 TAMIL.A



கிரிக்கெட்காரர் கீல்வாதத்தினுல் அவுட்டாக்கப் பட்டார்



ஒரு முறை 'க்ருஷன்' சாப்பிட்டபின் மறுபடியும் தகுதி

ராம்லாலின் ஓட்டங்கள் கீல் வாதத்தினுல் பாழடைந்தன. கூரிய வலி அவனுடைய கீல்களையும் தசைகளையும் பீடித்தன. மட்டையைப் பிடிப்பது கூட பெரும் வேதனையாக இருந்தது. பந்தயத்தினின்று ஓய்வு எடுத்துக் கொண்டபோது தனது கிரிக்கெட் விளையாட்டே ஓர் முடிவெல்லைக்கு வந்து விட்டது என நினைத்தான். அவன் நண்பன் சில யோசனைகள் சொன்னுன்: தினமும் காலை உண்டிக்கு முன் 'க்ருஷ'னைப் பரீக்ஷியுங்கள்."

ராம்லால் அவ்வாறே செய்தான். மூன்று வாரங்களுக்குப் பின்னரே ஓர் வலுவுள்ள பந்தயத்தில் அறுபது ஓட்டங்கள் எடுத்துவிட முடிந்தது. அவனுடைய விளையாட்டு முன்னை விட அதிக மேன்மையுடன் விளங்கிற்று. 'க்ருஷனுக்கு' நன்றிகள். நீங்கள் கஷ்டப்படும் எவ்வித கீல் வாதமும் ஓரே ஒரு முக்கிய காரணத்தைக் கொண்டுள்ளது — மூத்திர நீர் கணுவிலும் தசையிலும் சேர்ந்துக்கொண்டு விடுவதால். உங்கள் உடம்பினின்று மூத்திர நீரை வெளியேற்ற ஓரே ஒரு வழிதான் உளது — அதுதான் மூத்திரக் காய்களினின்று நீரை வெளியேறச் செய்வது. 'க்ருஷ'னுடைய ரகசியம் அது செய்யும் இரட்டை வேலையிற்றான் உள்ளது. அது அங்கேயும் குடல்களிலும் ஒருங்கே வேலை செய்து நீர் தங்கு மிடங்களினின்று அவற்றை வெளியேற்றுவதுடன் மறுபடி அவ்விதம் சேரவிடாமலும் செய்கிறது. இன்றே 'க்ருஷன்' வாங்குங்கள். கெமிஸ்டுகளிடமும் வியாபாரிகளிடமும் எங்கும் கிடைக்கும். விலை ரூ. 1/10 (மஞ்சள் பெட்டியில்.)



நீங்கள் கூட அந்த க்ருஷன் உணர்ச்சியை அடையலாம்

DKS1 2

உங்கள் பாதுகாப்புக்காக

ஸாது தையல் நூல்



இப்போது *புதிய* பாக்கிங்கில் வருகிறது

★ அசல் ஸாது தையல் நூல் என்பதற்கு அத்தாட்சியான இந்த 3 அடையாளங்களும் இருக்கிறதா என்று கவனித்து வாங்குங்கள்.

1. மேல் அட்டையும், உள் குழாயும் அழகிய மெல்லிய பச்சை வர்ணத்தில் இருக்கும்.

2. 'ஸாது'வின் படம் சிகப்பும், பச்சையும் சேர்ந்த இரு—வர்ணப் படமாக அச்சடிக்கப்பட்டிருக்கும்.

3. கோஹினூர் மில்ஸ் கோ. லிட். என்னும் பெயர், மத்தியிலுள்ள மெல்லிய பச்சைக் குழாயின்மேல் தெளிவாக அச்சடிக்கப்பட்டிருக்கும்

ஸாது தையல் நூல் ஒருவரால் மட்டுமே தயாரிக்கப்படுகிறது

கோஹினூர் மில்ஸ் கோ. லிமிடெட்

ஏஜண்டுகள்.

இல்லிக் இண்டஸ்ட்ரீஸ் லிட்.

நூல் விற்பனைக்குப் பிரத்தியேக ஏஜண்டுகள்

நகல்சந்த் லல்லுசந்த் லிட்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119. Sladens Gardens, Poonamallee High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI நவம்பர் 20, 1949 அண

கேசரியின் மூன்று பிரசித்த மருந்துகள்

• லோத்ரா — கர்ப்பாசய ரோக நிவாரணி

சங்காதோஷம், இல் வாயு, தூக்கமின்மை, அஜீரணம், மலச் சிக்கல், இருமல், காசம், தலைவலி, முதுகுவலி முதலியவற்றைக் குணப்படுத்தும்.

• அம்ருதா — ரத்த சுத்தி டானிக்

ரத்த சோகை, அஜீரணம், மலச் சிக்கல், மந்தமான மூளை, பலவீனம், படபடப்பு, ஞாபகமின்மை, தெளிவற்ற கண் பார்வை, தலை சுற்றல், சரும ரோகங்கள் முதலியவற்றைக் குணப்படுத்தும்.

• அர்க்கா — ஜெந்த ஜுர நிவாரணி

இன்புளுயன்ஸா, டைபாய்ட், மலேரியா, முதலான ஜுரங்கள் குணமாகும். சரல் குலைக் கட்டிகளும் குணமாகும்.

•

விவரங்களுக்கு எழுதுங்கள் :

கேசரி குடீரம் லிமிடெட், ராயப்பேட்டை - மதருஸ்

இருமல், அவஸ்தையளிக்கும் ஆஸ்துமா, மார்ச்சளி 3 நிமிஷங்களில் ஒழிக்கப்படுகின்றன

ஆஸ்துமா, மார்ச்சளி தாக்குதலால் மூச்சுத் திணறி தூக்கமின்றி அவதியுறுகிறீர்களா? அதிகமாக இருமுவதால் பிராணவஸ்தையாக இருக்கிறதா? பலஹீன உணர்ச்சியினால் வேலை செய்ய அசக்தராகவும், ருசியுடையான வஸ்துக்களையும் உணவுகளையும் சாப்பிட முடியவில்லையா?

எவ்வளவு நாட்களாக உபாதையுற்று எதை உபயோகித்திருப்பினும் சரி, மெண்டாகோ (Mendaco) ஓர் புதிய நம்பிக்கை அளிக்கும். மயக்க மருந்துகளில்லை, புகை பிடித்தலில்லை, இஞ்சக்ஷனில்லை, ஆட்டோமைசர் தேவையில்லை. செய்ய வேண்டியதெல்லாம் ருசியற்ற இரண்டு பில்லைகளை சாப்பாட்டின் போது உட்கொள்ள வேண்டியதே. உபத்திரவங்கள் மாயமாக மறைந்து விடும். மூன்றே நிமிஷங்களில் மெண்டாகோ (Mendaco) இரத்தத்துடன் கலந்து வேலை செய்யத் தொடங்கி, கபத்தைக் கரைத்து சிரமமின்றி ஸ்வாசத்தை அபிவிருத்தி செய்து முதல் நாள் இரவில் நல்ல நித்திரையை அளித்து விரைவில் பல வருஷங்கள் யௌவன உணர்ச்சியையும் பலத்தையும் பெறுவீர்கள்.

2 வருஷங்களாக ஆஸ்துமா இல்லை

மெண்டாகோ (Mendaco) அநேகமாக உடனே குணமளித்து ஸ்வாசத்தை இலகுவாக்குவது மட்டுமின்றி எதிர்கால தாக்குதல் ஏற்படாது செய்கிறது. உதாரணமாக ஜே. ரிக்கர்ட்ஸ், ஹாமில்டன், ஒன்ட், கானடா, இருமல் மூச்சுத் திணறலால் இரவு தூக்கமின்றி 40 பவுண்டு எடை குறைந்து, இறந்து விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. மெண்டாகோ (Mendaco) ஆஸ்துமாவை முதல் நாளே நிறுத்தி விட்டது. இரண்டு வருஷங்களில் அவ்வுபாதையே மீண்டும் ஏற்படவில்லை.

பணம் வாபஸ் உத்தரவாதம்

மெண்டாகோ (Mendaco) முதல் வேளை சாப்பிட்டதுமே நேரடியாக ரத்தத்துடன் கலந்து ஆஸ்துமாவை ஒழிக்கிறது. மெண்டாகோ (Mendaco) அதிவிரைவில் வயதில் பல வருஷம் யௌவன உணர்ச்சி, பலம் இவற்றை அளிக்கிறது. வாபஸ் உத்திரவாதத்தின் கீழ் மெண்டாகோ (Mendaco) உபயோகித்துப் பார்த்து தீர்ப்பளியுங்கள். மெண்டாகோ (Mendaco) சாப்பிட்டபின் பூரண குணம் பெற்று, திருப்தி யளிக்காவிடில் வெற்றுப் பெட்டியை அனுப்பினால் முழுத்தொகையும் வாபஸ்செய்யப்படும். இன்றே மருந்து வியாபாரியிடமிருந்து மெண்டாகோ (Mendaco) வாங்குங்கள். இன்றிரவு எப்படித் தூங்குகிறீர்கள், மறுநாள் காலை எவ்வித்தமான தெம்பு உணர்ச்சி ஏற்படுகிறதென்பதையும் பாருங்கள்.

Mendaco

மெண்டாகோ

உத்தரவாதம் உங்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது.

★ ஆஸ்துமா ★ மார்ச்சளி நோய் ★ வைக்கோல் ஜுரம் இவற்றை நிவர்த்திக்கிறது

REGD. NO. M. 4392